584

# தென்னாட்டுப் புதுவாசகம்—III

584
3-49



...வன் கம்பெனி

...ட்பூர், மதராஸ்

TB
031 (8)
N49
136120.

# தென்னாட்டுப் புதுவாசகம்

## மூன்றாம் புத்தகம்

(மூன்றாம் பாரத்துக்கு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 -SEP 1949
MADRAS

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
எழுதியது

எஸ். வாஸன் கம்பெனி,

சமூகரங்கபுரம் :: திருநெல்வேலி ஜில்லா,

மயிலாப்பூர் :: மதராஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1949 [விலை ரூ 1.

First Edition 1949
Second Edition July 1949

Approved by the Text-book Committee, Madras
for class use.

136120
சென்னை-600 008.

Printed at the Sadhu Press, Royapettah, Madras - 14

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6-SEP 1949
MADRAS

# முன்னுரை

சென்னையரசாங்கத்தார் இவ்யாண்டில் வெளியிட்டுள்ள புதிய பாடத்திட்டத்தையொட்டித் தென்னாட்டுப் புதுவாசகம் என்னும் இப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் உரைநடையில் கற்பனையிலக்கியம், சிறுகதை, உழவு கைத்தொழில் முதலியவற்றைப்பற்றிய அறிவு, புதிய நாடுகளைக் கண்டறிந்த செய்தி, பெருமக்களின் வாழ்க்கை வரலாறு, சரித்திர நிகழ்ச்சி, சிற்பம் முதலிய கலை, உரையாடல் (சம்பாஷணை), நகைச்சுவைப்பகுதி, மொழி, இலக்கியம், புலவர் அவரை ஆதரித்தவர் இவர்களின் வரலாறுகள் முதலியவற்றைப்பற்றிய பாடங்கள் வந்துள்ளன. அவற்றிற் குரிய படங்களும் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன. செய்யுட்பகுதியில் வரலாறு, கதை, தோத்திரம், இயற்கை வருணனை, நீதி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவற்றைப் பற்றிய பாட்டுக்களும் தனிப்பாடல்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

உரைநடைப் பகுதியில் ஒவ்வொரு பாடத்தின் கீழ் அருஞ்சொற்பொருளும், முக்கிய வினாக்களும், மாதிரிப் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. செய்யுட்களுக்குக் குறிப்புரை எழுதப்பட்டுளது.

என் வேண்டுகோளுக் கிணங்கித் தங்கள் பாட்டுக்களை இதில் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்த திரு, தேசிக விநாயகம் பிள்ளையவர்கட்கும், இப் புத்தகத்தை எழுது-தற்கு உதவிபுரிந்த நண்பர்களுக்கும் நன்றியறித லுடை-யேன்.

என் புத்தகங்களை ஆதரித்து ஊக்கம் அளித்துவரும் அன்பரனைவர்க்கும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையேன்.

வே. வேங்கடராஜுலு

## உள்ளுறை


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழிலக்கியம் | ... | 5 |
| 2. | கோவூர்கிழார் | ... | 12 |
| 3. | தாஜ்மஹால் | ... | 20 |
| 4. | மணவிருந்து | ... | 30 |
| 5. | அபாயங்களில் முதலுதவி | ... | 38 |
| 6. | ராஜா அண்ணுமலைச் செட்டியார் | ... | 47 |
| 7. | பரதன் | ... | 55 |
| 8. | வங்கி | ... | 64 |
| 9. | மனோன்மணி | ... | 72 |
| 10. | நல்லசமாரியன் உவமை | ... | 81 |
| 11. | சர்க்கரைத் தொழில் | ... | 88 |
| 12. | டாக்டர், வே. சாமிநாதஐயர் | ... | 97 |
| 13. | வானொலி | ... | 104 |
| 14. | செங்குட்டுவனின் வடநாட்டுச் செலவு | ... | 111 |
| 15. | அமைச்சன் அறிவு | ... | 118 |
| 16. | ஆபிரிக்காத் தரைச்செலவு | ... | 125 |
| 17. | பத்திரிகைச் செய்தி | ... | 133 |
| 18. | சக்கிரவர்த்தி இராஜகோபாலாச்சாரியர் | ... | 135 |
| 19. | வீரத்தாயர் | ... | 142 |
| i. | கடவுள் வாழ்த்து | ... | 147 |
| ii. | நீதிப்பகுதி | ... | 148 |
| iii. | வரலாற்றுப் பகுதி | ... | |
| | கட்ட பொம்மு கும்மி | ... | 157 |
| iv. | கதைப்பகுதி | ... | |
| | 1. நளவெண்பா | ... | 159 |
| | 2. பஞ்சதந்திரம் | ... | 163 |
| v. | இயற்கை வருணனை | ... | |
| | தாமரை | ... | 165 |
| vi. | தனிப்பாடல்கள் | ... | 165 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - SEP 1949
MADRAS



# தென்னாட்டுப் புதுவாசகம்

## மூன்றும் புத்தகம்

### 1. தமிழிலக்கியம்

தென்னாட்டில் வழங்கும் மொழிகளுள் முதன்முதல் இலக்கிய இலக்கணம் படைத்தது தமிழ்மொழியே. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே தமிழ்மொழியில் இலக்கிய இலக்கணங்கள் தோன்றியுள்ளன. ஆயின், இப்போது நமக்குக் கிடைத்திருப்பவற்றுள் தொன்மையானது தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலே. சங்கச் செய்யுட்கள் அதற்குப்பின் தோன்றியவை ஆகும்.

தமிழ்மொழியில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வகை நூல்கள் தோன்றியுள்ளன. பழையனவாகக் கொள்ளப்படுகின்ற சங்கநூல்கள் புலவர் பலரால் வெவ்வேறு காலங்களில் பாடப்பட்ட தனித்தனிச் செய்யுட்களின் தொகுப்பே. ஆகலின், முதன்முதல் தோன்றியவை பலதிறப்பட்ட தனிச்செய்யுட்கள் என்னலாம். அவற்றின்பின்னர்ப் பெருங்காப்பியங்கள் தோன்றின. பின்னர், அறநூல்களும் சமயநூல்களும் பெருகின. பின்பு, விருத்தங்களால்

அமைந்த பெருங்காப்பியங்கள் தோன்றத் தலைப்பட்டன. அவற்றை யடுத்துப் பலவகைப்பட்ட சிறுநூல்கள் உண்டாயின. பின்னர், இதிகாசபுராணங்களும், அவற்றின்பின் ஸ்தலபுராணங்களும் இயற்றப்பட்டன. பிற்காலத்தில், குறைந்த அறிவினை யுடையவரும் படிக்கத்தக்க முறையில் அம்மானை முதலிய சிறுநூல்களும், நாடகங்களும், இசைப்பாட்டுக்களும் மிகப்பல எழுதப்பட்டன. சமீபகாலத்தில் உரைநடை நூல்கள் தோன்றின.

சமயநூல்கள் தோன்றிய காலத்திலே சமயசாஸ்திரங்களும் தோன்றலாயின. சாஸ்திரங்களுள் ஜைன பௌத்த சமயத்தைச் சார்ந்த நூல்கள் முற்பட்டனவாகும். அவற்றிற்குப்பின், சைவவைஷ்ணவ வேதாந்த நூல்களும் உரைகளும் இயற்றப்பட்டனவாகும். இலக்கண இலக்கியங்களுக்கு உரைகளும் ஆயிரமாண்டுகட்கு முன்னரே எழுதப்பட்டன. ஜோதிடம், மருத்துவம் முதலிய சாஸ்திரங்களும் பன்னூறு ஆண்டுகட்குமுன்னரே இயற்றப்பட்டுள. இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட பெருநூல்களும் சிறுநூல்களும் உரைகளும் சாஸ்திரங்களும் நம் தமிழ்மொழியில் பல்கியுள்ளன. இனி, இவற்றுள் ஒவ்வோர் இலக்கியப்பகுதியைக்குறித்தும் சிறிது நோக்குவோம் :

தமிழில் உள்ள பழைய செய்யுள்நூல்களுள் இல்வாழ்க்கையைப்பற்றிய பாட்டுக்கள் 'அகப்பொருட்பாட்டுக்கள்' என்றும், அரசியல், போர் முதலிய

மற்றை யெல்லாவற்றையும் பற்றிய பாட்டுக்கள் ‘புறப்பொருட்பாட்டுக்கள்’ என்றும் பிரித்து வழங்கப்படும். சங்கச்செய்யுட்களாகிய தொகைநூல்களுள் சிறந்த கருத்துக்கள் பலவற்றை உட்கொண்டது ‘புறநானூறு’ என்னும் புறப்பொருள் நூலாகும். பண்டைத் தமிழ்மக்களின் கல்வி, கொடை, போர்த்திறன்-அரசியல்முறை முதலியவற்றை அந்நூலில் விரிவாகக் காணலாம். ‘குறுந்தொகை’ முதலிய அகப்பொருள்நூல்களெல்லாம் பெரும்பாலும் தமிழ்மக்களின் இல்வாழ்க்கை, அன்பின் மாட்சி முதலியவற்றைக் கூறுவனவே. அச் செய்யுட்களெல்லாம் சொற்செறிவும், பொருள்நயமும் மிக்கவை. அவையே தமிழ்மக்களின் நாகரிகச்சிறப்பிற்குச் சான்றாய் உள்ளன.

பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே முதலில் தோன்றியவை. சிலப்பதிகாரம்—கோவலன், கண்ணகி என்பார் இருவரின் வரலாற்றைக் கூறுவது. மணிமேகலை—கோவலன்-மகள் மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவது. அவை யிரண்டும் தமிழ்நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை முதலாகக் கொண்டு பலவகைச்சுவையும் தோன்ற யாக்கப்பட்டவை. அவ் விரண்டனுள் சிலப்பதிகாரமே காப்பியச்சுவை மிக்கது. அதனை இயற்றியவர் இளங்கோவடிகள்.

அறநூல்களுள் முதலில் தோன்றியது திருக்குறள் என்பர். அதனை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறளைப்போல் அறம், பொருள் முதலியவற்றைத் தொகுத்து வகைப்படுத்தி விளக்கமாகக் கூறும்

நூல் பிறமொழிகளில் இல்லை என்னலாம். நமது நாட்டுக்கும் நமது மொழிக்கும் பெருஞ்சிறப்பினைப் பயப்பது அந்நூல் ஒன்றே. அதன் சிறப்பினை உணர்ந்து பிறநாட்டவர் தத்தம் மொழிகளில் அதனை மொழிபெயர்த்துள்ளனர். திருக்குறளோடு சேர்த்துக் கூறப்படுஞ் சிறப்புடையது 'நாலடியார்' என்னும் நீதிநூல். 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் பழமொழி இதனை வலியுறுத்தும். திரிகடுகம், நான்மணிக்கடிகை முதலிய நூல்களெல்லாம் அறநூல்களே.

ஆழ்வார்கள் என்னும் விஷ்ணுபக்தர்கள் பன்னிருவர் இயற்றிய செய்யுட்கள் 'திவ்வியப்பிரபந்தம்' என்றும், நாயன்மார் என்னுஞ் சிவபக்தர்மூவர் இயற்றிய செய்யுட்கள் 'தேவாரம்' என்றும் வழங்குகின்றன. அவையே சமயநூல்களுள் தொன்மையானவை. அவை பக்திச்சுவை நிரம்பியவை. அவற்றைத் 'தமிழ்வேதம்' என்று சிறப்பித்துப் பாராட்டி, கோயில்களிலும் வீடுகளிலும் ஓதிவருகின்றனர். வழக்குமொழிகளில் உள்ள சமயச்செய்யுட்களை வேதமாகக் கொண்டாடுஞ் சிறப்பு தமிழ்மொழிக்கே உளது.

விருத்தப்பாவினால் அமைந்த பெருங்காப்பியங்களுள் முதலாமது 'சீவகசிந்தாமணி' யாகும். அது ஜைனசமயக்காப்பியம். அதன் ஆசிரியர் திருத்தக்க-

தேவர் என்பவர். அது தமிழ்மொழியிலுள்ள சிறந்த காப்பியங்களுள் ஒன்று. அதன் சிறப்பைக் கருதியே தமிழ்ப்புலவர் எல்லாரும் அதனைப் பாராட்டிக் கற்றுப் போற்றி வருவாராயினர்.

சங்கச்செய்யுளை அடுத்துத் தோன்றிய இராமாயண மகாபாரதக் காவியங்கள் இக்காலத்தில் கிடைத்தல் இல்லை. பிற்காலத்தில் பெருந்தேவனார் எழுதிய பாரதத்திலும் சில பகுதிகளே கிடைத்துள்ளன. கவிச் சக்கிரவர்த்தி கம்பநாடர் இயற்றிய இராமாயணம் தமிழில் உள்ள காப்பியங்களுள் தலைசிறந்தது. வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய பாரதமே இப்போது பயின்று வழங்குகிறது. இவ் விதிகாசங்களில் கூறப்படும் நளன், அரிச்சந்திரன் முதலியோரின் கதைகள் தனிக்காப்பியங்களாக இயற்றப்பட்டுள்ளன. வெண்பாவினால் ஆகிய நூல்களுள் நளவெண்பா சிறந்தது. அதனை இயற்றியவர் புகழேந்திப்புலவர்.

சிவனடியார்களின் சரித்திரங்களைக் கூறும் நூல் 'பெரியபுராணம்' என்று வழங்குகின்றது. அது பக்திச்சுவை மிக்கது. அதனை இயற்றியவர் சேக்கிழார் நாயனார். ஸ்தலபுராணங்களுள் பெருவழக்குள்ளது திருவிளையாடற்புராணம்.

சாதாரண மக்களுக்குப் பயன்படும்படி இயற்றப்பட்ட அம்மானை நூல்களுள் நல்லதங்காள் கதை, பஞ்சபாண்டவர் வனவாசம், அல்லியரசாணிமாலை,

பவழக்கொடிமாலை முதலியவை பயிற்சியுடையன. நாடகங்களுள் இராமநாடகம் பழையது. இது சில காலத்துக்கு முன்வரை பலராலும் படிக்கப்பட்டு வந்தது. இப்போது 'மனோன்மணீயம்' பலராலும் போற்றப்படுகின்றது. குற்றாலக்குறவஞ்சி நாடகம் மிக்க நயமுடையது. இசைப்பாட்டாகிய பள்ளுப் பாட்டு, கும்மியடிப்பாட்டு, காவடிச்சிந்து முதலிய நூல்கள் பலப்பல தோன்றியுள்ளன. அவற்றுள் முக்கூடற்பள்ளும் அண்ணாமலை ரெட்டியார்காவடிச் சிந்தும் சிறந்தவை. இக்காலத்கில் கும்மியடிப்பாட்டும் சில மெட்டுக்களில் அமைந்த புதுவகைப் பாட்டுக்களும் எழுதப்படுகின்றன. இப்பாட்டுகளுள் சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய நாட்டுப்பாட்டுக்களும் தேசிகவிநாயகம் பிள்ளைபாட்டுக்களும் பல்லோராலும் படிக்கப்படுகின்றன.

இப்பொழுது பல ஆண்டுகளாகப் பலதிறப்பட்ட உரைநடை நூல்கள் தோன்றியுள்ளன. 'சிறுகதைகளும், ஆராய்ச்சிகள் வரலாறுகள் முதலியவற்றைப் பற்றிய உரைநடைநூல்களும் தமிழ்மக்களால் இப்பொழுது விரும்பிக் கற்கப்படுகின்றன.

இவ்வாறு நம் தமிழ்மொழியில் பலதிறப்பட்ட அறிவினையுடையவருக்கும் பயன்படும் நூல்கள் பல்கியுள்ளன. நீங்கள் பிற்காலத்தில் நல்ல இலக்கியங்களைக் கற்று இன்பமடைவீர்களாக.

## அருஞ்சொற்பொருள்

திறம்-வகை.
இதிகாசம்-இராமாயணம் பாரதம்.
வேதாந்தம்-வேதத்தின் முடிவு; உபநிடதம்; அத்வைதமதம்.
மாட்சி-மிகுதி.
சுவை-ரஸம்.
யாத்தல்-கட்டுதல், செய்தல்.

## வினுக்கள்

1. இப்போதுள்ள தமிழ்நூல்களுட் பழமையானது எது?
2. எவை புறப்பொருட்பாட்டு எனப்படும்?
3. பெருங்காப்பியங்களுள் முற்பட்டவை யாவை?
4. பெரியபுராணம் எவற்றைக் கூறுகின்றது? அதனை இயற்றியவர் யார்?
5. இக்காலத்தில் விரும்பிக் கற்கப்படும் நூல்கள் யாவை?

## பயிற்சி

1. சீவகசிந்தாமணி ஜைனசமயக் காப்பியம். அது தமிழ்மொழியிலுள்ள சிறந்த காப்பியங்களுள் ஒன்று. அதனால் தமிழ்ப்புலவர் அதனைப் பாராட்டிக் கற்றுவருகின்றனர்— இவ்வாக்கியங்களை ஒரே வாக்கியமாக மாற்றுக.

2. சொந்த வாக்கியத்தில் அமைக்க: தொன்மை, அறநூல், மாட்சி, சான்று, வழக்கு, பயிற்சி, நிகழ்ச்சி.

## 2. கோவூர்கிழார்

கோவூர்கிழார் சங்ககாலத்துச் செந்தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; கோவூர் என்னும் ஊரில் பிறந்தவர்; வேளாளர் மரபினர். வேளாண்மரபினரைக் கிழார் என்று கூறுதல் பண்டைக்காலத்து வழக்கம். அம்முறையில் இவர் கோவூர்கிழார் என்று வழங்கப்பட்டார்.

கோவூர்கிழார் கல்வி கேள்விகளில் மிகச் சிறந்தவர்; சிறந்த செய்யுள் இயற்றுவதில் திறமை வாய்ந்தவர்; பிறர் துன்பங் காணப் பொறுதவர்; அக்காலத்து அரசர்களால் பெரிதும் நன்கு மதிக்கப்பட்டவர். அரசர்கள் தம்மிடத்து வைத்துள்ள நன்மதிப்பைத் தமது நலத்திற்காக அவர் பயன்படுத்துவதில்லை; பிறருக்கு உற்ற துன்பம் நீக்குதற்கு அரசர்முன்னும் அஞ்சாது நின்று பேசுவார்; அரசர்கள், தம் சொல்லை ஏற்றுக்கொள்ளும்படி சாதுரியமாகப் பேசுந் திறமையும் உடையவர்.

### I

கோவூர்கிழார் வாழ்ந்திருந்த காலத்தில் சோழன் நலங்கிள்ளி, சோழன் நெடுங்கிள்ளி என்னுஞ் சோழமன்னர் இருவர் அரசுசெலுத்தினர். அவர்களுள் நலங்கிள்ளி காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு, சோழநாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தான். அவரிருவரும் ஒரு குடியிற் பிறந்த தாயத்தவ-

ராய் இருந்தும், ஒற்றுமையுடன் வாழாமல் தம்முட் பகைமைகொண்டிருந்தனர். அவர்களுள் நலங்கிள்ளி வலிமை மிக்கவன். அதனால், அவன் நெடுங்கிள்ளி-யோடு போர்புரிதற்குப் படையெடுத்துச் சென்று, அவனிருக்கும் உறையூரை முற்றுகையிட்டான். அப்-பொழுது நெடுங்கிள்ளி உறையூருக்குள் தங்கியிருந்-தான்.

கோவூர்கிழார் இந்நிலையை அறிந்தார்; "ஒரு-குடியிற் பிறந்த இவ்விருவேந்தரும் தம்முட் பகை-கொண்டு போர்செய்வது நன்றன்று" என்றெண்-ணினார். "இவ்விருவர் செய்யும் போரால் எத்தனை உயிர்கள் மாயும்! எத்தனை ஊர்கள் அழியும்! எவ்வ-ளவு பொருள்கள் வீணாய்க் கெடும்! இவ்விருவரும் பகைமை நீங்கி ஒற்றுமையாய் இருந்தால், குடிகளுக்கு எவ்வளவு நன்மை உண்டாகும்!" என்று பலவற்றை ஆராய்ந்த கோவூர்கிழார் அப் போரை நீக்க எண்ணி-னார்; உடனே, முற்றுகையிட்டிருப்பவனாகிய நலங்-கிள்ளியின் முன் சென்று, நீதி கூறத் தொடங்கினார்:

"படைவலிமையும் போர்த்திறமையும் மிக்க அரசனே, உனக்குப் பகைவனாய், உன்னால் இந்-நகரத்தினுள் அடைபட்டிருப்பவன் வேற்றரசனாகிய பாண்டியனல்லன்; சேரனுமல்லன்; உன்னைப்போல் சோழர்குலத்திற் பிறந்தவனே. பொதுவாக நோக்கு-மிடத்து, போரில் யார் வெற்றிபெறுவார், யார் தோற்பார் என்பது உறுதியாகக் கூற இயலாது.

நீயே இப்போரில் வெற்றி பெறுவதாக இருந்தாலும் சேரன், பாண்டியன் போன்ற மன்னர்பிறர் என்ன எண்ணுவர்? "நெடுங்கிள்ளி தோற்றான்; நலங்கிள்ளி வென்றான்" என்று, பிரித்துக் கூறுவரோ? "சோழன் ஒருவன் போரில் தோற்றான்" என்றே கூறுவர். அதனால், இச்செயல் உங்கள் குலத்திற்கு ஓர் அவமானத்தையும், வேற்றுவேந்தர்கட்கு மிக்க மகிழ்ச்சியையும் உண்டாக்கும். உங்கள் குலத்திற்குத் தோல்வி என்ற அவமானம் நேராதிருக்கவேண்டுமாயின், நீவிர் இருவீரும் போரில் வெற்றிபெறுதல் வேண்டும். அஃது இயலாத காரியம். ஆதலால், உமது குலப்பெருமையை நினைத்துச் செய்" என்ற கருத்துக்கள் அடங்கிய சிறந்ததொரு செய்யுளைப் பாடிச் சாதுரியமாகவும் இனிமையாகவும் எடுத்துரைத்தார். நலங்கிள்ளி புலவர் கூறியவற்றை நினைந்து, அவர் சொல்லைப் புறக்கணியாது, போரை நிறுத்தினான்.

## II

அக்காலத்தில் இளந்தத்தன் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் ஒருமுறை சோழன் நலங்கிள்ளியிடஞ் சென்று பரிசில் பெற்றுக்கொண்டு, பின்னர் நெங்கிள்ளியிடம் சென்றார். நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் உள்ள பகைமையை அவர் அறிந்திலர்போலும். அன்றி, "நாம் புலவர். அவர்களுக்குட் பகைமை இருந்தாலும், அதனால் நமக்கென்ன தீங்கு வரும்?" என்று எண்ணியிருக்கலாம்.

தூதர், ஒற்றர் என இருவகையினர் ஒவ்வோர் அரசரிடமும் இருப்பர். தூதர்கள் தம் மன்னர் கூறுஞ் செய்திகளை வேற்றுவேந்தரிடம் வெளிப்படை-யாகச் சென்று கூறி, அவர் கூறும் மறுமொழிகளைத் தம் மன்னரிடம் வந்து கூறுவர். அவர்களுக்கு வேற்று வேந்தர்கள் தீங்கிழைத்தலாகாது என்பது அரசநீதி. ஒற்றர்கள் மறைவாக மாறுவேடம் பூண்டு வேற்று-வேந்தர் ஊர்களுக்குச் சென்று, அவ்வேந்தர் திறமை, அவருடைய படையின் பலம், மந்திரிகளின் திறன் முதலியவற்றை ஆராய்ந்து உணர்ந்து, தம் மன்னருக்-குத் தெரிவிப்பார்கள். அவர்கள் ஒற்றர் என்பது வெளிப்பட்டால் அவர்களை வேற்றுவேந்தர் கொன்று-விடுவர். அது அரசநீதி. ஆயின், பகைவர்க் கஞ்சாத வலிமைமிக்க பேரரசர் ஒற்றர்களையும் கொல்லாது விடுதல் உண்டு.

மேற்கூறப்பட்ட இளந்தத்தன் என்னும் புலவர் நலங்கிள்ளியிடமிருந்து நெடுங்கிள்ளியிடஞ் செல்லவே, நெடுங்கிள்ளி அப்புலவரை, “ நலங்கிள்ளியின் ஒற்றன் ஒருவன் இங்ஙனம் புலவர்வேடம் பூண்டு வந்துளான் ” என்று மாறுகக் கருதி, அவ்ரைக் கொல்லத் துணிந்-தான்.

அந்நிலையில், கோவூர்கிழார் ஆண்டுச் சென்றார். அருள்மிக்க அவர் ஒரு குற்றமுமில்லாமல் அநியாய-மாக ஒரு புலவர் கொல்லப்படுவதைப் பொறுப்-பாரா? உடனே நெடுங்கிள்ளிக்கு உண்மை கூறிப்

புலவரை விடுவிக்க எண்ணி அவனிடஞ் சென்று, புலவரியல்பை எடுத்துரைத்தார் :

"புலவர்கள் பழுமரம் நாடிச் செல்லும் பறவைகள் போல, இல்லை யென்னாது கொடுக்கும் வண்மைக்குணமுடையார் இருக்குமிடந் தேடி, கடத்தற்கரிய காடுகளையெல்லாங் கடந்துசென்று அவ் வள்ளல்களையடைந்து, தமக்குத் தெரிந்த அளவு அவர்பெருமைகளைப் பாடிப் பரிசில்பெறுவர்; அங்ஙனம் பரிசிலாகப் பெற்ற பொருளைக் கொண்டு மகிழ்ச்சியடைந்து, தாமும் தம் சுற்றமும் உண்டு, வருகிற ஏழைகளுக்கும் கொடுப்பர்; அப்பொருள் தீர்ந்துவிட்டால் மீண்டும் வள்ளல்களை நாடிச் செல்வர். அவர் எவ்வுயிர்க்கும் தீங்கு நினைத்தலும் அறியார்" என்று புலவர் வாழ்க்கையி னியல்பைத் தெளிவாகக் கூறி, "அங்ஙனம் வாழும் ஒரு புலவரே இவர்; ஒற்றனல்லர்; இவரைக் கொல்லுதல் தகாது" என்னுங் கருத்தைக் குறிப்பாக உணர்த்தினர். நெடுங்கிள்ளியும் அவர் குறிப்பை உணர்ந்து இளந்தத்தனைக் கொல்லாது விட்டான்.

## III

அக்காலத்தில், மலையமான் திருமுடிக்காரி என்றொரு குறுநிலமன்னன் பெண்ணையாற்றங்கரையிலுள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். அவன் இரந்துவந்தவர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் வள்ளல்களுள் ஒருவன்; புலவர்களை ஆதரிப்பதில் மிக்க விருப்பமுடையவன்.

அவன் குறுநிலமன்னனாய் இருந்தாலும், போர்புரிவ-திற் சிறந்த வீரன். அக் காலத்தி லிருந்த தமிழ்-வேந்தர் தம்முள் ஒருவரோடு ஒருவர் போர்-புரிய நேரும்போது, அவனுக்கு வேண்டிய பொருள் முதலியன கொடுத்து, அவனைத் தமக்குத் துணையாகக் கொள்ளுவர்.

கோவூர்கிழார்காலத்தில், கிள்ளிவளவன் என்ற மன்னவன் சோழநாட்டை ஆண்டுவந்தான். அவன் எக்காரணத்தாலோ மேற்கூறப்பட்ட மலையமான் திருமுடிக்காரியோடு பகைமை கொண்டு இளம்-பருவமுள்ள அவன் மக்களைப் பிடித்துவந்துவிட்-டான்; பகையை அடியோடு தொலைத்துவிடவேண்டு மென்று எண்ணி, அம் மலையமான்மக்களைத் தன் யானையைக் கொண்டு கொன்றுவிடத் துணிந்து, அங்ஙனமே செய்யக் கட்டளையிட்டான்.

அங்கிலையில் கோவூர்கிழார் ஆண்டுச் சென்றார். அவர் இச் செய்தியை அறிந்து மனம்பொறாதவராய், அவர்களை விடுவிக்க எண்ணி, அதற்கேற்றவாறு அவ் வரசனிடம் கூறலாயினர் :

"அரசனே, நீ ஒரு புறாவிற்காகத் தன் உடல்-தசையை அரிந்து பருந்துக்குக் கொடுத்த சிபிச்சக்-கிரவர்த்தியின் மரபிற் பிறந்தவன்; அதனால், பிற வுயிர்களிடத்து இரக்கமுடைமை உன் குலத்துக் குரிய குணமாகும். இங்கு உன்னால் கொல்லப்பட இருப்பவர்கள் புலவர்களுக்கு நிழல்போல் இருந்து

அவர்கள் வறுமையைப் போக்கி, நன்மைபுரியும் வள்ளலாகிய மலையமானுடைய மக்கள். அன்றியும், இவர்கள் இளஞ்சிறுவர்கள்; யானையைக் கண்டு அஞ்சவில்லை; இங்குத் திரளாகக் கூடியுள்ள மக்கட்கூட்டத்தைக் கண்டு அஞ்சுகின்றனர்; அவ்வளவு



இளம்பருவத்தினர். இவற்றை உணர்ந்து, மேல் உன் விருப்பம்போற் செய்க என்று நயம் பெற ஒரு செய்யுள் பாடினர். அரசனும் மனமிரங்கி அப் பிள்ளைகளைக் கொல்லாது விடுத்தான்.

மேற்கூறப்பட்ட சமயங்களில், இடத்துக்கேற்றவாறு, தமது கருத்தை, கேட்போர் அப்படியே ஏற்றுக்கொள்ளும்வண்ணம், தம் புலமைமிகுதியால் இனிமையாகவும் நயமாகவும் எடுத்துரைத்து, பிற-

ருக்கு உற்ற இடுக்கண்களைப் போக்கிய புலவர்பெருமாளுகிய கோவூர்கிழார்பெருமை பெரிதும் பாராட்டற்குரியதே யாகும்.

## அருஞ்சொற்பொருள்

தாயத்தவர்-பங்காளிகள்.
புறக்கணியாது-அலட்சியம் செய்யாமல்.
ஒற்றர்-வேவுகாரர் (Spies).
தசை-சதை.
இடுக்கண்-துன்பம்.

## கேள்விகள்

1. கோவூர்கிழார் நலங்கிள்ளிக்குக் கூறியவை யாவை?
2. புலவர் வாழ்க்கை எத்தகையது?
3. ஒற்றருக்கும் தூதருக்கும் வேறுபாடு என்ன?
4. சிபிச்சக்கிரவர்த்தியின் அருட்குணத்தைத் தெரிவிக்க.

## பயிற்சி

1. உணர்ச்சிவாக்கியத்திற்கும் விளுவாக்கியத்திற்கும் இப்பாடத்திலிருந்து உதாரணம் தருக.

2. "போரில் யார் வெற்றிபெறுவார், யார் தோற்பார் என்பது உறுதியாகக் கூற இயலாது."

இதனை விஞவாக்கியம் ஆக்குக.

3. நன்மதிப்பு, பொதுவாக, சாதுரியம், அரசநீதி: இச் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க.

## 3. தாஜ்மஹால்

நமது இந்திய தேசத்தை 15-ஆம் நூற்ருண்டு-முதல் 18 ஆம் நூற்ருண்டுவரை மொகலாயர் ஆண்டு-வந்தனர். அவர்களுள் ஜிஹாங்கீர் என்னும் அரசன் ஆக்ரா நகரில் வாழ்ந்து அரசுசெலுத்திய காலத்-தில், ஒரு விழா ஆண்டிற்கு ஒருமுறை ஒன்பது-நாள் நடைபெறும். அந்நாட்களில் அரண்மனையைச் சார்ந்த பூஞ்சோலையில் பலவகைப்பட்ட பட மாடங்களில் தங்கி, அரசர்குலத்திலும் செல்வக் குடியிலும் பிறந்த பெண்கள் பலவகைப் பொருள்-களை விற்பனை செய்வர். அக் கடைகளில் பொருள்-களை வாங்க விரும்புவோர் அம் மங்கையர் கூறும் விலை எவ்வளவு மிகையாயினும் கொடுத்துவிட வேண்டும். அன்றேல், அரசகுமாரனுயினும் அவனை இகழ்ந்து பேசுவர்; சூழ்ந்து நிற்பவர் அவனை எள்ளி நகை-யாடுவர்.

“ ஒருநாள், அங்குக் கூடாரம் ஒன்றில் ஒரு பெண் சாதாரணமான இரத்தினக்கற்களை வைத்து விற்றுக்-கொண்டிருந்தாள். ஒவ்வொரு இரத்தினமும் லக்ஷம் ரூபாய்வரை விலையாயிற்று. கடையைச் சாத்தும் நேரத்தில் ஓர் இளைஞன் அங்கு வந்து, “ இங்கு விற்-றற்கு உரிய பொருள் யாதேனும் உளதோ ?” என்று வினவினன். அவன் அந்நாட்டு அரசனுடைய மைந்-தன் என்பதை அறிந்த அம் மாது முறுவல் அரும்பிய

முகத்தினளாய், "ஐய, என்னிடம் வைரமணி ஒன்றே உளது" என்று ஒரு கற்கண்டுத் துண்டினை எடுத்துக் காட்டினாள். அவன் அதன் விலையை வினவ, "இது ஒரு நூறாயிரம் ரூபாய் விலையுடையது" என்றாள். அம் மைந்தன் அதனைக் கையில் வாங்கி, உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது அம்மங்கை, "ஐய, அதனை வாயிற் போட்டுப் பாரும்" என்றாள். அவன் அவ்வாறே அதனை வாயில் இட, அது கரையலாயிற்று. அவன் "இது என்ன ? நீ தந்த வைரம் கரைகின்றதே!" என்றான். அவள் "அது மிக்க இனிய வைரம். அதன் சுவையை அறியும்" என்றாள். அம் மைந்தன், "ஆமாம், உண்மையே. அது இனிப்பாயே இருக்கின்றது. ஆயின், அதனினும் உன் சொல் மிக்க இனிமையாய் இருக்கிறது!" என்று கூறி, அவள் கேட்டவாறு லக்ஷம் ரூபாய் கொடுத்துவிட்டுத் திரும்பினான். அம் மங்கை யார் ? அவளே பிற்காலத்தில் 'மும்தாஜ் மஹால்' என்னும் பெயரோடு விளங்கிய பேரரசி.

ஜிஹாங்கீர் சக்கிரவர்த்தியின் பட்டமகிஷியாகிய நூர்ஜஹானுக்கு மிர்ஜா - அபுல்ஹஸன் அஸிப் - ஜா என்னுஞ் சகோதரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அர்ஜுமந்தபானு என்னும் புதல்வி ஒருத்தி இருந்தாள். அவளே மேற் கூறிய மும்தாஜ் மஹால். அர்ஜுமந்தபானு 1594-ஆம் ஆண்டில் பிறந்தாள். அவளுடைய தந்தையும் பாட்டனும் தம் உயர்குடிக்கேற்ப, கலைகள் பலவற்றை அவளுக்குக் கற்பித்திருந்தனர். அவள் தன் கலையறிவினாலும் உயரிய

குணங்களாலும் தன் பெற்றோர் முதலியோரை மகிழ்வித்தாள்.

ஜிஹாங்கீர் தம் மைந்தன் ஷா ஜஹானின் விருப்பத்தை யறிந்து அவனுக்கு அர்ஜுமந்த்பானுவை 1612-ஆம் ஆண்டில் திருமணம் புரிவித்தார்; அன்று மருமகள்பெயரை மாற்றி, 'மும்தாஜ் மஹால்' என்னும் பட்டப்பெயரைச் சூட்டினார். மும்தாஜ் மஹால் என்பது 'அரண்மனையின் கிரீடம்' என்னும் பொருளை உடையது.

ஷா ஜஹான் மாதர்பலரை மணம்புரிந்திருந்தாராயினும் அவர்கள் எல்லாரினும் மும்தாஜ்மஹாலையே பெரிது விரும்பினார். அவளும் ஷா ஜஹானுக்கு அரசியற்செயல்களில் சிறந்த ஆலோசனைகளைக் கூறி, உதவிபுரிந்துவந்தாள். அரசன் எங்குச் செல்லினும் அவளும் உடன் செல்லுவாள். அவரும் தம் நாயகி கூறும் ஆலோசனைகளை ஏற்று அதன்படியே நடந்தார்.

மும்தாஜ்மஹாலுக்கு அழகைப்போலவே குணமும் அமைந்திருந்தது. அவள் ஏழைகள்பால் இரக்கம் மிக்கவள்; குடிகளின் துன்பத்தைத் தீர்ப்பதில் எந்நாளும் நோக்கமுடையவள்; மரணதண்டனை பெற்றவரையும் அவர்தம் உறவினரின் வேண்டுகோளுக்கு இரங்கி உயிர்ப்பிச்சை அளிப்பவள். அதனால், குடிகள் அவளுடைய நற்குண நற்செயல்களைப் பாராட்டிப் புகழ்ந்து கூறுவராயினர்.

மும்தாஜ் மஹால் பதினான்கு மக்களைப்பெற்றாள். 1630-ஆம் ஆண்டில் பர்ஹாம்பூரில் கான்-ஜஹான் லோடியோடு நிகழ்ந்த போர் நெடுநாள் நீடித்ததனால், போரைக் கவனித்தற்கு ஷா ஜஹான் தம் தேவியோடு அங்குச் சென்றிருந்தார். அப்பொழுது அரசி மிக்க வேதனைப்பட்டுக் கருவுயிர்த்தாள். அதனால், தான் பிழைப்பது அரிது என்று அவளுக்குத் தோன்றிற்று. உடனே அரசருக்குச் செய்தி கூறி யனுப்பினாள். அரசர் வந்ததும், கண்ணீர் ததும்ப அவர் முகத்தை நோக்கினாள். தம் அருமைக்காதலியின் கண்ணீரைக் கண்டதும், அரசர் உள்ளம் உடைந்து பேச நா எழாமல் தம்பித்து நின்றார். மும்தாஜ் அவரை நோக்கி, "அரசே, என் உயிர் இப்பொழுது நீங்கிவிடும். யான் இறந்தபின் என் குழந்தைகளைக் கைவிடாமல் காப்பாற்றவேண்டும். என் பெற்றோர்களுக்கும் உதவி-புரியவேண்டும். இதுவே என் வேண்டுகோள்" என்று தழுதழுத்த குரலில் கூறினாள். சிறிது நேரத்தில் அவளுயிர் நீங்கிற்று. ஷா ஜஹான் மனைவியின் பிரிவை அறிந்து வாய்விட்டுப் புலம்பினார்; துன்பக்கடலில் மூழ்கினார். அச் செய்தியைக் கேட்ட குடிகள் கரைகாணாத் துயர்க்கடலில் ஆழ்ந்தனர். சக்கிரவர்த்தி முறைப்படி தூய வெள்ளுடை யுடுத்து, துக்கம்-கொண்டாடினார். அரசபரம்பரையைச் சார்ந்தவரும் அரசியல்அதிகாரிகளும் துக்கம்கொண்டாடினர்.

ஷாஜஹான் தம் தேவியின் பிரிவினால் உலக-வாழ்க்கையை வெறுத்தார்; சில ஆண்டுவரை பண்டி-

கைகளையும் காட்சிகளையும் தவிர்த்தார் ; எப்பொழுதும் அவளையே நினைத்து வருந்தினர். அவர் தம் தேவிக் களித்த வாக்குத் தவருமல் நடந்துவந்தார் ; தம் மூத்த மகளிடத்தில் அரண்மனைக்காரியங்களையெல்லாம் ஒப்படைத்தார் ; முன்னிலும் நான்கு லக்ஷம் ரூபாய் அதிகமாக அரண்மனைச்செலவிற்கு அளித்தார்.

மும்தாஜ் மஹாலின் உடல் பர்ஹம்பூருக்கு அருகில் பாயும் தபதிநதியின் பக்கத்தில் ஒரு தோட்டத்தில் பெட்டியில் வைத்து அடக்கஞ்செய்யப்பட்டது. ஆறு மாதங்களுக்குப் பின்னர், அரசர் அப் பெட்டகத்தை ஆக்ரா நகருக்குக் கொண்டுவரச் செய்தார். அங்கு யமுனையின் கரையில் ஓர் அரண்மனைத் தோட்டத்தை விலைக்குப் பெற்று, அதில் ஒரு சமாதி கட்டி, அப் பெட்டியை அடக்கஞ்செய்வித்தார். பின்னரும் அவளைப்பற்றிய எண்ணம் அவருள்ளத்தினின்று நீங்கவில்லை. அதனல், அவள்பெயர் என்றும் நிலைநிற்கும்படி செய்யவேண்டும் என்று எண்ணினர் ; நெடிது சூழ்ந்து சமாதியுள்ள இடத்தில் மிகச் சிறந்ததொரு கட்டடம் அமைக்க வேண்டும் என்று உறுதிசெய்தார்.

அவ்வாறிருக்கையில், ஒருநாள், கான்ஸ்டாண்டிநோபிலிலிருந்து பிழைப்பிற்காக ஆக்ராவில் வந்திருந்த சிற்பி ஒருவன் சலவைக்கற்களில் அழகிய மசூதிகள், மாளிகைகள் முதலியவற்றைச் சிறிய அள-

வினவாய்ச் செய்து, கூடையில் வைத்து விற்று-வந்தான். அவனிடமிருந்த கோரி ஒன்றைச் சக்கிர-வர்த்தி கண்டார். சிறிதாய் அமைந்திருந்த அச்-சலவைக்கற் கட்டடம் அவருள்ளத்தைக் கவர்ந்தது.

அவர் அவனை நோக்கி, "இதைப் போன்றதொரு பெரிய கட்டடம் அமைத்தற்கு வேண்டிய திட்டங்-களை வரையறை செய்து, படம் ஒன்று எழுதித் தரு-கின்றாயா?" என்று வினவினார். உடனே அவன் கையிலிருந்த தூரிகையினால் தரையில் பெரியதொரு படத்தை வரைந்து, ஒவ்வொரு பகுதியின் அளவையும் அதற்குரிய திட்டங்களையும் கூறினான். அரசர் பெரு-வியப்புற்று, தமது கருத்து உருப்பெற்றதைக் கண்டு மகிழ்ந்து, கட்டடத்தின் முழுப்படம் ஒன்றும் மாதிரிக் கட்டடம் ஒன்றும் அமைத்து வருமாறு அவனுக்குக் கட்டளையிட்டார். அவனும் அவ்வாறே அவற்றைக் குறித்த நாளில் கொண்டுவந்து கொடுத்தான்.

அவற்றைக் கண்ட அரசர் மட்டற்ற மகிழ்ச்சி-யடைந்து, கட்டடங் கட்டுதற்கு வேண்டுபவற்றைச் சித்தஞ் செய்யத் தொடங்கினார்; அச்சிற்பியின் மக-னைச் சிற்பிகளின் தலைவனாக நியமித்தார்; பாக்தாத், துருக்கி, மூல்டான் என்னும் இடங்களிலிருந்து சிறந்த கொற்றர்களை வருவித்தார்; அவ்வாறே விமான வேலை, வர்ணவேலை, சித்திரம் எழுதும் வேலை முதலிய வற்றில் தேர்ந்தவர்களையும் பிறநாடுகளினின்று வரு-வித்தார்; நம் நாட்டில் டில்லி முதலிய இடங்களில்

இருந்த சிறந்த தொழிலாளிகளையும் சேர்த்துக்கொண்டார். பின்னர், கட்டடத்திற்கு வேண்டிய பொருள்கள் சேகரிக்கப்பட்டன. சலவைக்கல், செம்மணற்கல், சூரியகாந்தக்கல், மரகதம், நீலம், வைடூரியம், குருவிந்தம், பவழம், கோமேதகம் முதலான மணிகள் முதலியவை வெவ்வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டன. கட்டடவேலை தொடங்கப்பட்டது. இருபதினாயிரம் மனிதர் வேலை செய்தனர். அரசபரம்பரையினர், சிற்றரசர்கள், பிரபுக்கள், அரசியல் அதிகாரிகள், அரசியின் உதவிபெற்றவர்கள் முதலியோர் பலரும் அப் பணியில் ஈடுபட்டனர். அவர்கள் தம்மிடமிருந்த அரிய பொருள்களை அளித்துதவினர். இவ்வாறு பல்லாயிரவர் பணிசெய்ய, பதினேழு ஆண்டுகளில் அக் கட்டடம் நிறைவேறிற்று. அதற்குச் செலவான தொகை நான்குகோடி ரூபாய்க்கும் மேற்படும். அரசர் அக்கட்டடத்துக்கு அரசியின் நினைவாக 'தாஜ்மஹால்' என்று பெயர்சூட்டினர்.

இனி, தாஜ்மஹாலின் பகுதிகளைக் குறித்து அறிவோம். தாஜ்மஹால் கட்டடத்தின் தலைவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் விசாலமான வெளிமுற்றத்தை அடையலாம். அம் முற்றத்தில் நாற்றிசையிலும் அழகிய நான்கு வாயில்களும் பல அறைகளும் உள்ளன. அக்காலத்தில் அவ்வறைகளில் பிரயாணிகள் உணவு, உடை முதலியன பெற்றுத் தங்கியிருப்பராம். அவ் வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மிக்க அகலமுடைய உள்முற்றத்துட்

புகலாம். உள்முற்றத்தைச் சூழச் செம்மணற்கற்களால் அமைந்த உயரமான மதில்களும், மதிலின் மூலைகளில் உப்பரிகைகளும், மதில்களில் இரண்டு வாசல்களும் காணப்படும். முற்றத்தின் நடுவில் சலவைக்கற்களால் ஆன நீர்த்தொட்டிகள் உள்ளன. அவற்றின். இருபக்கங்களிலும் சலவைக்கற்களை அமைத்த நடைவழிகளும், வழிகளின் இருபுறத்தும் உயரமான ஒருவகை மரங்களும் தோன்றும். அவ்வழியே சென்று முதல்மேடையைக் கடந்து பின்னும் படிக்கட்டின் வழியே ஏறிச்சென்றால், $22\frac{1}{2}$ அடி உயரத்தில் உள்ள பெரியமேடையை அடையலாம். இம் மேடையில்தான் உலகவதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுந் தாஜ்மஹால் விளங்குகின்றது. மேடையில் எப்பக்கம் நோக்கினும், கண்களைக் கவரும் அதிசயச் சிற்பவேலைகளைக் காணலாம். தளத்தின் ஒவ்வொரு கல்லிலும் காணப்படும் பூவேலையும் சித்திரவேலைப்பாடுகளும் ஒப்பற்றவையாய் ஒளிர்கின்றன.

மேடையின் நடுவில் 186 அடிச் சதுரத்தில் கல்லறை மாளிகை அமைந்துளது. அம் மாளிகையைச் சூழ்ந்து பல மாளிகைகள் இருக்கின்றன. அம் மாளிகையின் நடுவில் 38 அடி குறுக்களவும் 80 அடி உயரமும் உடையதாய் அரைப்பந்து வடிவில் நடுவிமானம் அமைந்துளது. அவ் விமானத்தில் பொன்மயமான பிறை ஒன்று 260 அடி உயரத்தில் அமைந்து பொலிவுறுகின்றது. அக் கல்லறை மாளிகையின் நடுக்கூடம்

எண்கோணவடிவில் 60 அடி குறுக்களவு உடையதாய் அமைந்துளது. அக்கூடமும் வாயில்களும் ஜன்னல்களும் எல்லாம் அதிசயமான சித்திரவேலைப்பாடுகளை உடையவை. சுவர்களிலும் கதவுகளிலும் நவமணிகள் பதிக்கப்பட்டிருந்தனவாம்! இப்பொழுது அவ்விடங்களில் பல நிறமுள்ள கண்ணாடிகள் காணப்படுகின்றன.

மேற்கூறிய கூடத்தில் இரண்டு சமாதிகள் இருக்கின்றன; ஒன்று மும்தாஜ் மஹாலுடையது; மற்றொன்று ஷா ஜஹானுடையது. அவற்றிற்குக் கீழேயுள்ள அறைகளில் அவர்தம் உடல் அடங்கிய பெட்டிகள் உள்ளன. தாஜ்மஹால் கட்டடத்தின் மாடிகள், அறைகள் முதலியவற்றைப்பற்றிப் புத்தகங்களில் படிப்பதனால், முற்றும் அறிந்துகொள்ள இயலாது.

இந்தியாவின் நாகரிகத்திற்கும் சிற்பக்கலையின் சிறப்பிற்கும் சான்றாய் விளங்குகின்ற அக் கட்டடம் நேரில் பார்த்து மகிழற்பாலது. வட இந்தியாவிற்குச் செல்லும் ஒவ்வொருவரும் அக்கட்டடத்தைப் பார்க்காது இரார். அதனழகைப் பார்த்தற்காகப் பிறநாடுகளிலிருந்தும் வருபவர் உளர். அக் கட்டடம் இன்றும் புத்தம்புதிதாகப் பொலிவுறுகின்றது. அதனை நோக்கும்பொழுது, ஷா ஜஹான் காலத்தில் இன்னும் எத்தனை அழகுடையதாய் விளங்கியிருக்கும் என்பதை நாம் உய்த்துணரலாம். ஒப்பில்லாத குணங்களையுடையவளாய் விளங்கிய மும்தாஜ் மஹாலின் புகழினைத்

தாஜ்மஹால் எந்நாளும் நிலைநாட்டும் ; அன்றியும், நம் நாட்டுக்கும் பெருஞ்சிறப்பினை நல்கும்.

## அருஞ்சொற்பொருள்

படமாடம்-கூடாரம்.
மிகை-மிகுதி, அதிகம்.
எள்ளி-இகழ்ந்து.
முறுவல்-புன்சிரிப்பு.
பேரரசி-மஹாராணி.
மருமகள்-மகன்மனைவி.
கருவுயிர்த்தாள்-மகவைப் பெற்றாள்.
தம்பித்து-மரம்போலாகி.
தூய-பரிசுத்தமான.
பரம்பரை-வம்சம்.
பெட்டகம்-பெட்டி.
நெடிது-நீண்ட காலம்.
சூழ்ந்து-ஆராய்ந்து.
தூரிகை-எழுதுகோல்.
வரைந்து-எழுதி.
குருவிந்தம்-மாணிக்கக்கல்.
பணி-வேலை.

## வினாக்கள்

1. ஆக்ரா நகரில் ஆண்டுதோறும் நிகழும் திருவிழாவின் நிகழ்ச்சிகளை எழுதுக.
2. 'மும்தாஜ் மஹால்'—இதன் பொருள் யாது ?
3. மும்தாஜின் குணச்சிறப்புக்களைக் கூறுக.
4. அரசி, இறக்கும் நிலையில் அரசனிடம் யாது வேண்டினாள் ?
5. தாஜ்மஹால் கட்டட வமைப்பைப்பற்றிக் கூறுக.

## பயிற்சி

1. எள்ளிநகையாடுதல், முறுவல், வேண்டுகோள், கருவுயிர்த்தல், தம்பித்து நிற்றல், நெடிது சூழ்தல், பரம்பரை, வெளிமுற்றம் : இவற்றைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க.

2. எதிர்ச்சொல்லைக் கூறுக : விற்றல், இனிமை, பெரிது, புகழ்தல், நற்செயல், அரிது, துயர்க்கடல், உள், தலைவாயில்.

## 4. மணவிருந்து

திவிட்டன் என்னும் அரசன் சுரமை நாட்டில் போதனபுரம் என்னும் நகரில் வாழ்ந்து இந் நிலவுல-கத்தை ஆண்டுவந்தான். அவன் சுயம்பிரபை என்-பவளை மணந்து அவளைப் பட்டமகிஷி ஆக்கினான். அவள், வித்யாதரருலகினின்று கொணரப்பட்ட பாரி-ஜாதம் என்னும் பூஞ்செடியை அன்போடு வளர்த்து-வந்தாள். அது வளர்ந்து அரும்புவைக்கும் பருவத்தை அடைந்தது. அதைக் கண்ட அரசி அச் செடிக்கும் காமவல்லி என்னும் பூங்கொடிக்கும் மணம்புரிய எண்ணினாள்; அவ் வெண்ணத்தை அரசனுக்கு அறி-விக்குமாறு தன் தோழியை விடுத்தாள். அவள் சென்று அரசனை வணங்கி வாழ்த்தி, அரசி கூறிய திருமணச்செய்தியை அறிவித்தாள். அரசன் முக-மலர்ந்து "நன்று! அரசியின் வளர்ப்புமகளைப் பார்க்க வருகின்றோம்" என்று இனிதின் இசைத்தான். தோழி பெயர்ந்து சென்றாள்.

அச்சமயத்தில் அங்கு அரசனருகில் அந்தணன் ஒருவன் வந்தான். அவன் காதில் குழையை அணிந்து, தலைமுடியைப் பூமாலையாற் கட்டியிருந்தான்; ஒரு கையை இடுப்பில் வைத்து, மற்றொரு கையால் மேலாடையைப் பற்றிக்கொண்டு சிரித்து நின்றான்; பின்னர் அரசற்கு நகையுண்டாகும் நிலையில் முன் வளைந்து பண்ணோடு சில பாடல்களைத் தாளத்துக்கு

இசையப் பாடிக்கொண்டு நடனம்புரிந்தான். அதனைக் கண்டு அரசன் பெருமகிழ்வுற்ருன். சிறிது நேரத்தின்பின் அவ்வந்தணன் குண்டலம் சோர, மேலாடை புறத்தே சரிய, வயிற்றைப் பிடித்துக்கொண்டு, "ஐயையோ! வயிறு விம்முகின்றதே!" என்று தரையில் விழுந்து பூதியில் புரண்டு நரன்ருன்.

அதனைக் கண்ட வேந்தன் அந்தணனை நோக்கி, "உனக்கு உற்றது யாது?" என்று பரிந்து வினவினான். அந்தணன் "அரசே, யான் கிடைத்த மோதகங்களையெல்லாம் விலாப்புடைக்கத் தின்றுவிட்டேன். வயிறு வெடித்துவிடும்போல் இருக்கிறது. அதனால், இவ்வாறு உருண்டு புரள்கின்றேன்" என்ருன். அரசன், "அவ்வளவு மோதகம் எங்கே கிடைத்தது? எப்பொழுது தின்ருய்?" என்று வினவினான்.

அந் : இதன்முன் தின்றனவல்ல; இன்று சோலையில் அரசி நடத்துந் திருமணவிருந்தில் தின்னப்போகும் மோதகங்களே. அவற்ருல்தான் இப்பொழுது வருந்துகின்றேன்.

மன் : (சிரித்துக்கொண்டு) ஐயோ, பாவம்! நீ பெரிதும் துன்புற்றிருக்கின்ருய்! பூஞ்சோலையில் நடைபெறும் மணவிருந்தில் வேதம்வல்ல வேதியர்க்கே உணவு கிடைக்கும். உன்னைப்போன்றவர்களுக்கு அங்கு ஒன்றும் கிடைக்காது. என்செய்வாய்! உனக்கு எந்த வேதம் தெரியும்?

அந் : எனக்கு வேதம் ஒன்றும் தெரியாது. ஆயின், வேதம்வல்ல வேதியரை வெல்லத்தக்க வாதம் வல்லேன். வாதத்தில் நான் வல்லவன் என்பது முன்னரே அரசிக்குத் தெரியுமாகலின், முதலில் எனக்குத்தான் விருந்துணவு கிடைக்கும். இதைத் தாமே காண்பீர்.

மன் : அப்படியா? வாதத்தில் வெல்லும் வகை யாது?

அந் : வேதம் பயின்று, அதில் வெற்றிபெறும் வேதியரை என் கைத்தடியினால் தாக்கி வெற்றிபெறுவேன். அவர்கள் என்முன் நிற்கவும் அஞ்சுவர். இதுவே யான் வாதம் வெல்லும் முறை.

மன் : உன் வாதம் மிகச் சிறந்தது. அதைப் பார்ப்போம். பூஞ்சோலைக்குட் புகுவோம், வா.

அரசன் இவ்வாறு கூறி அந்தணனை உடன்கொண்டு, மதிலை யடைந்து வாயிற்காவலரோடு சோலைக்குட் புகுந்தான். அந்தணன் விரைந்து ஓடியும் ஆடியும் முன்சென்று, அச்சோலையில் வீழும் பல இனிய கனிகளைக் கண்டான். கண்டு, வாயில் நீர் ஊற அவற்றைக் கொண்டுபோய் ஓரிடத்தில் குவித்து, “இவற்றை உண்போம், வருக” என்று சொன்னான். அப்பொழுது அரசன், “இவை நல்ல பழங்கள் அல்ல. முன்னால் செல்வோம். ஆங்கு நல்லன உள. வருக” என்று அழைக்க, அந்தணன் பாடிக்கொண்டே நடந்-

தான். ஆங்கு ஒருபக்கத்தில் சிறந்த பழங்கள் சிதறிக்-கிடத்தலைக் கண்ட அந்தணன் சினங்கொண்டு, " வேந்தே, இச் சோலைக்குச் சிறிதுங் காவல் இல்லை-யே " என்றான். அரசன், "அன்று; இம் மதில்மேலும் வாள்வீரர் பலர் காவல்செய்வர். காவலில்லாதவாறு யாங்ஙனம்? காவலர் பல இடங்களிலும் உள்ள பழங்களைக் கொண்டுவந்து ஓரிடத்தில் சேர்ப்பர். அவர் இரக்கமற்றவர்; கரிய முகத்தினர். அத்தகையோர் பலர் உளர் " என்றான். அந்தணன் " அவர் யார்? அவர் யாங்கு இருக்கின்றனர்? ஓ! அவர்கள்-தாமோ?" என்று ஆங்கு இருந்த கருங்குரங்குகளைக் காட்ட, அரசன், "அவர் கள்வர்; பலர் உளர். ஆதலின், புறப்படு. நாம் தேவியின் சோலைக்குச் செல்வோம் " என்று புன்சிரிப்புத் தோன்றக் கூறி நடந்தான். அந்தணன் வெள்கி அரசனைத் தொடர்ந்து அஞ்சி நடந்தான்.

நடக்கையில், தளிர் ததைந்த தமாலமரங்கள் செறிந்திருந்த இடத்தைக் கண்டு, " இஃது என்னே! இருளின் இருக்கையோ!" என்று அந்தணன் வெருள, அரசன், " அன்று; இது தமாலமரச் சோலைகாண்" என்றுரைத்து அச்சம் தவிர்த்தான்.

இவ்வாறு சோலையை நோக்கிச் செல்லும் வழி-யில், அந்தணன் ஒரு பளிங்குமேடையைக் கண்டு, அதனை உற்று நோக்கினான்; நோக்கி, அஞ்சி, உடல் நடுங்கிப் பின்வாங்கினான். அரசன், " அங்கு எதனைக் கண்டாய்?" என்று வினவ, அந்தணன் " இதனுள்


GH.E. PRASAD

ஒரு பெரிய பூதம் உளது. அது நம்மைப் புடைத்து உண்டுவிடும்போல் தோன்றுகிறது. இங்கு இருப்பின் தீங்கு நேரும். விரைந்து செல்வோம்'' என்று பிதற்றினன். அரசன் "அப் பூதத்தின் உருவம் எங்ஙனம் இருக்கின்றது?'' என்று வினவ, அந்தணன், "அதன் காதில் குண்டலம் இருக்கின்றது; கண் பிறழ்ந்திருக்கின்றது. கை குறியதாயும் வயிறு பெரியதாயும் இருக்கின்றன'' என்றான். அரசன் புன்சிரிப்புடன், "அது பூதமன்று; நின் நிழலே'' என்றான். அந்தணன் "என் நிழலாயின், அஃது என்னோடு வரும். அக் கல்லிற்குள் எவ்வாறு புகும்?'' என்று சொல்ல, அரசன் "நீ ஏதேனும் ஒரு செயலைச் செய்துகொண்டு நிழலைப் பார். அப்போது அது உன் நிழலே என்பதை உறுதியாக அறியலாகும்'' என்றான். வேதியன் அவ்வாறு செய்து, தன்னிழலே அது என்று நன்கு உணர்ந்தான்.

பின்னர் அவரிருவரும் ஆங்கு ஒரு சிலாதலத்தில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது தேவி, காவலர் சூழ, அன்னம்போல் நடந்து அவ்விடத்தை அணுகினள். தேவியைக் கண்ட அந்தணன் பொழிலின் ஒருசார் புக்கு மறைந்திருந்தான். தேவி, அவன் இருக்குமிடம் நாடிப் பற்றிவருமாறு காவலர்க்கு ஆணையிட, அவர் தேடிக்கண்டு, உடைபிடித்தீர்த்து அந்தணனைக் கொணர்ந்து, அரசியின்முன்னல் நிறுத்தினர். அரசி அவனை நோக்கி முறுவலித்து, "இவன் தோள்களைப் பூந்தொடைகளால் பிணித்துக் கொணர்மின்'' என்று காவலர்க்கு ஆணையிட்டு, அரசனைச் சார்ந்தாள். சிறிது

நேரத்தின்பின், "அந்தணன் தவறு இலன்; அவன்-தளையை நீக்குவாயாக" என்று தேவியை அரசன் வேண்ட, அவளும் அவ்வாறே ஆணையிட்டாள். தளை-வீடு பெற்ற அந்தணன் அவர்முன் நின்று பாடி ஆடுவானாயினன்;

'வேண்டு மேமனம் வேண்டுமே
பூண்ட பொன்னணி மார்பினாய்,
நீண்ட மாங்கனி நேர்தோறும்
வேண்டு மேமனம் வேண்டுமே.'

இவ்வாறு பாடியாடிய அந்தணனுக்கு, அரசி பல வகைக் கனிகளையும் அறுசுவையுணவினையும் விலாப்-புடைக்க உண்பித்தாள். அதன்பின், பாரிஜாதம் என்னும் மணமகனுக்கும் காமவல்லி என்னும் மண-மகளுக்கும் கடிமணம் நடத்தினர்.

## அருஞ்சொற்பொருள்

பெயர்ந்து - திரும்பி.
குழை - காதணி.
பண் - இசை.
சோர - கழல.
பூதி - புழுதி
மோதகம் - கொழுக்கட்டை.
வெள்கி - வெட்கமுற்று.
ததைந்த, செறிந்த - நெருங்கிய.
நாடி - தேடி.
ஈர்த்து - இழுத்து.
பூந்தொடை - பூமாலை.
பிணித்து - கட்டி
தளைவீடு-கட்டிலிருந்து விடுதலை.
அறுசுவை-இனிப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு.

சிலாதலம்-கல்மேடை.
பொழில்-சோலை.
தமலாம்-புன்கு.
கடி-சிறப்பு, புதுமை.
நேர்தொறும்-எதிர்ப்படும் போதெல்லாம்.

## வினாக்கள்

1. அந்தணன் தன் வயிறு விம்முதற்கு எக்காரணம் கூறினான் ?
2. அவன் வேதியரை எவ்வாறு வெல்வானாம் ?
3. சோலையில் உள்ள காவலர், கள்வர் இவர்களைப்பற்றி எழுதுக.
4. அந்தணன் கண்டஞ்சிய பூதம் அவன்நிழலே என்பதை அரசன் எவ்வாறு உணர்த்தினான் ?

## பயிற்சி

1. திருமணச்செய்தி, பண், வாதம், பெயர்தல், சோர்தல், வெள்குதல், உற்று நோக்குதல், பிணித்தல்— இச் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க.

2. இக் கதையைப்போல நகைச்சுவை மிக்க மற்றொரு கதையை எழுதுக.

———

## 5. அபாயங்களில் முதலுதவி

மாந்தர் பல சமயங்களில் தாம் நினையாதவாறு, திடீரென்று பற்பல அபாயங்களுக்கு உள்ளாகின்றனர். அபாயங்கள் நேரும்போது, அவர்கள் இன்னது செய்வது என்று அறியாராய் மயங்கி நின்றுவிடுகின்றனர். அருகில் இருப்பவர்களும் திகைப்புற்றுவாளா இருந்துவிடுதலும் உண்டு. அதனால் பெருந்தீங்கு விளைதல் காண்கின்றோம். ஆதலின், மாந்தருக்குப் பெரும்பாலும் நேரக்கூடிய சில அபாயங்களையும், அவற்றிற்கு உடனே செய்யவேண்டிய பரிகாரங்களையும் நாம் அறிந்திருப்பது அவசியமாகும். அதுகருதியே அவற்றைக்குறித்து இங்குச் சில கூறுகின்றோம்.

கருவிகளைக் கையாளுபவர்களுக்கு, கவனக்குறைவினாலும் அறியாமையினாலும் சில சமயங்களில் வெட்டுக்காயம் நேரும். அப்படி நேரின், முதன்முதலில் அது அசுத்த ரத்தக்குழாயிற் பட்டுளதா, அன்றி, சுத்தரத்தக்குழாயில் தாக்கியுளதா என்பதை அறியவேண்டும். அதனை அறிவது எப்படி? நம் இருதயத்திலுள்ள இரத்தப் பை சுருங்கிவிரியுந் தன்மையதாகலின், எந்நேரமும் சிறிதும் ஓயாது அங்ஙனம் இயன்றுகொண்டே இருக்கும். மார்புக் குழியையடுத்து, இடப்பக்கத்தில் கைவைத்து நோக்கினால், எந்நேரமும் படபட என்று அடித்துக்கொண்-

டிருப்பதை அறியலாகும். விரிந்த பை சுருங்குகையில் இரத்தம் அதிலிருந்து வெளிப்படுதலால், சுத்த ரத்தம் இருதயத்திலிருந்து புறப்பட்டு, பிற உறுப்புக்களில் செல்லுகின்றது ; அசுத்த ரத்தமோ, பிற உறுப்புக் களிலிருந்து இருதயத்தை நோக்கிச் செல்லுகின்றது. சுத்த ரத்தம் நல்ல செந்நிற முள்ளது ; அசுத்த ரத்தம் சிறிது நீலநிறமாகத் தோன்றுவது. சுத்த ரத்தம் இடையே நின்று நின்று பாயும் ; அசுத்த ரத்தம் எப்போதும் ஒரே நிலையிற் செல்லும். அசுத்தரத்தக் குழாய்கள் உடம்பினுள் மேற்றோலை யடுத்து அமைந்-துள்ளன ; சுத்தரத்தக்குழாய்கள் அவற்றினும் உள்-ளிடத்தே அமைந்துள்ளன. மேற்கூறியவற்றால், இருவகையான இரத்தங்களின் இயல்பினையும் அறிய-லாகுமல்லவா ?

இவ் விருவகை இரத்தக்குழாய்களுள் அசுத்த ரத்தக்குழாயிற் காயம் ஏற்படின், அக் காயத்திற்குக் கீழிடத்தில் கயிற்றால் இறுகக் கட்டவேண்டும் ; சுத்தரத்தக் குழாயிலாயின், காயத்திற்கு மேலிடத்திற் கட்டுக்கட்டவேண்டும் ; படத்திற் காட்டியிருப்பது போல், கைக்குட்டையாற் கட்டி அதன்மேல், பென்ஸிலையோ அல்லது சிறு குச்சியையோ வைத்து முடிச்சிட்டு அதைப் பிடித்துக்கொண்டு முறுக்கி,



அந்தக் கட்டினை யிறுக்கலாம். இவ்வாறு செய்தால், இரத்தம் வெளிவாராமல் நின்றுவிடும். தலையிலாயின், கழுத்துக்கு மேலாகச் செல்லும் இரத்தநாளத்தை நன்கு அழுத்திப் பிடித்துக்கொள்ளவேண்டும்.

காலில் வெட்டுப்பட்டு இரத்தம் வரின், நின்று-கொண்டிருக்கலாகாது; கீழே படுத்துக்கொண்டு ஒரு மணையின்மேலோ, அல்லது வேறு யாதாவதொன்றன் மேலோ காலை வைத்து உயர்த்திக்கொண்டிருத்தல் நல்லது. அவ்வாறு செய்தால், இரத்தம் மேல்நோக்-கிச்செல்லுதல் குறைவுபடும். நாம் செய்யுஞ் சிகிச்-சைகளினால் சிறிதளவு இரத்தம் தடைப்பட்டு நிற்பி-னும், அது பெரிதும் நன்மையாகுமன்றோ ?

ஒருவருக்கு மூக்கினின்று இரத்தம் வடியுமாயின், அப்பொழுது அவரை உட்காரச் செய்து, தலையைப் பின்புறமாகச் சிறிது சாய்த்து, அவர்கைகளைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கவேண்-டும்; கால்களை வெந்நீருள்ள பாத்திரத்துள் வைக்க-வேண்டும். கழுத்திலும் நெற்றியிலும் பனிக்கட்டியை வைக்கலாம். அது கிடைக்காவிடின், குளிர்ந்த நீரில் துணியை நனைத்து, அவ்விடங்களில் நன்கு ஒற்றலாம். இவ்வாறு செய்தால் இரத்தக்குழாய் சுருங்குமாகலின், இரத்தம் வெளியே பாய்தல் குறையும்.

சுவாசாசயத்தினின்று இரத்தம் வந்ததாயின், அம் மனிதனைப் படுக்கவைத்துத் தலையையும் தோள்

களையும் மேலே உயர்த்திப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும் ; பனிக்கட்டியை உட்கொள்ளச் செய்ய வேண்டும். இவற்றிற்கெல்லாம் ரணவைத்தியரின் உதவியை உடனே நாடுதல் இன்றியமையாததாகும்.

சிலர் இரத்தக்காயம்பட்டவர்களுக்குச் சாராயம் முதலியன கொடுக்கின்றனர். அதனால், இரத்தம் விரைவில் பரவி மிகுதியாக வெளிப்படுமேயன்றி நிற்காது. இரத்தம் அதிகமாக வெளிப்படின், சோர்வு உண்டாகும் ; அறிவும் மயங்கிவிடும்.

11

நாம் உட்கொள்ளும் வாயுவானது நுரையீர-லுட் சென்று இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, உடம்பின் எல்லாப் பக்கத்தும் சுத்தரத்தம் பரவச் செய்கின்றது. சிறிதுநேரம் வாயுவை உட்கொள்ளாமல் இருப்போமாயின், சுத்தவாயு உட்புகுதலும் அசுத்தவாயு வெளிப்படுதலும் இன்மையால், உயிரிழக்க நேரும். தோல்துருத்தி காற்று உட்புகுந்தால் விரிதலையும், அது வெளிப்படின் சுருங்குதலையும் நீங்கள் கண்டிருக்கலாம். அதுபோலவே, வாயு உள்ளே நிறைந்திருக்கின், மார்பு விரியும் ; அது குறைந்திருக்கின், மார்பு சுருங்கும்.

மார்பு விரிதற்கும் சுருங்குதற்கும் காரணமாயிருப்பது நுரையீரலுள் இருக்கும் ஐவ்வேயாகும். அந்த ஐவ்வானது யாதேனும் ஒரு காரணத்தால் சிறிதுநேரம் தன் தொழில் செய்ய இயலாது நின்று-

விடுமாயின், பின்னர் அது தானே தன் வேலையைச் செய்யத் தொடங்குதல் இயலாது ; அது மூச்சு-வாங்கி வெளிவிடும்படி பிறரொருவர் துணைசெய்ய-வேண்டும்.

நீரில் வீழ்ந்து அமிழ்ந்தவர்களை வெளியே எடுத்-துப் பார்க்குமிடத்து, அவர் ஆவி நீங்கியவர்போற் காணப்படுவர். ஆயினும், பெரும்பாலோர் அவ்-வாறு உண்மையில் ஆவி நீங்கினவர் ஆகார். நுரை-யீரலின் ஐவ்வு மீண்டும் முன்போல் தன் தொழிலைச் செய்தற்கு நாம் சில செயல்கள் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால், வாயு உட்செல்லும். அவர்கள் உயிர்பெற்று உய்தல் கூடும். ஆயின், இறந்துபோன-வர் திறத்தில் நாம் செய்யும் முயற்சி ஒன்றும் பயன் தாராது.

நீரில் விழுந்து மூச்சுத்திணறியவர்களை எடுத்த-தும், முதன்முதலில் அவர்களின் மார்பு முதலிய இடங்களி லிருக்கும் உடைகளை அவிழ்த்துவிட-வேண்டும். பின்னர், அவர்களைத் தரைமேற் கிடத்தி, தலையின்கீழும் கைகளின்கீழும் தலையணையையாவது கனமான துணிகளையாவது வைத்து, தலையையும் தோள்களையும் உயர்த்தவேண்டும் ; அதன்பின் நாக்கு உள்ளே போய்விடாதபடி, அதனை இழுத்துப் பிடித்துக்கொள்ளவேண்டும்; அவரது தலைக்குப் பின்-னால் இருந்துகொண்டு, அவருடைய முன்கைகளைப் பற்றி, மெதுவாகவும் அமைதியாகவும் இழுத்து,

அவர் தலைக்கு மேலாக வரும்படி செய்யவேண்டும். இவ்வாறு செய்யின், மார்பு விரியுமாகலின், சுத்தவாயு உட்புகக் கூடும். சிறிது நேரத்தின் பின், கைகளைப் பற்றி, அவருடைய விலாப்புறங்களின் நேராகக் கொண்டுபோய், மார்பின்மேல் வைத்து அழுத்த



வேண்டும். அப்பொழுது மார்பு சுருங்குமாதலின், உள்ளிருக்கும் அசுத்த வாயு வெளிப்படும். மேற்கூறியவாறு மாற்றி மாற்றி, கைகளைத் தலைக்குமேலும் மார்பின்மேலும் ஒரு நிமிடத்தில் 15 தடவை கொண்டுவரவேண்டும். இவ்வாறு செய்கையில் அவர் தாமாக மூச்சுவாங்கத் தொடங்கின், அப்பொழுது நம்முடைய உதவியை நிறுத்திவிட்டு, நம் கைகளால் அவருடம்பில் நன்கு தேய்க்கவேண்டும். தேய்ப்பதனால், உடலில் சூடு உண்டாகுமாதலின், இரத்தவோட்டம் தொடங்கும்.

நீருள் விழுந்து ஆழ்ந்துகிடந்தவர்களின் வாய்க்குள் சேறு மண் முதலானவை புகுந்திருக்குமாதலால், அவர்களை யெடுத்ததும், அவர்கள்வாய்க்குள் விரல்விட்டு அவற்றை எடுத்துவிடல் வேண்டும்.

அவர்களைத் தரையில் குப்புறக் கிடத்தி, கைகளைத் தலைக்குமேல் சேர்த்துவைக்க வேண்டும்; மார்பிற்கு அடியில் தலைக்கணை அல்லது துணிமூட்டைகளை அமைத்துவைக்க வேண்டும். அவர்கள்உடம்பினுள்ளிருக்கும் நீர் வெளிப்படும்படி முதுகில் அழுத்த



வேண்டும். அதன்பின், அவர்களை மல்லாந்து படுக்கவைத்து, அவர்களின் நாக்கை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். பின்னர் முற்கூறியவாறு மூச்சு வாங்குதற்கான முறைகளைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதனால் உடல் தளர்ச்சியடையுமாதலின், அப்பொழுது அவர்களுக்கு வெப்பம் அவசியமாகும். ஆதலால், வெம்மை தரத்தக்க உடைகளையாவது, வெந்நீர்க்குப்பிகளையாவது, மிதமாகச் சுடுகின்ற செங்கல்லையாவது, அவர்களின் கால், வயிறு, தொடை, அக்குள் இவ்விடங்களில் வைக்கவேண்டும்; ஆனால், அவற்றால் உடம்பு வெந்துபோகாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். இரத்த வோட்டம் ஆரம்பித்தபின் சூடான காபி அல்லது தேத்தண்ணீர் பருகும்படி கொடுக்கவேண்டும். அதனால், உடலில்

சூடு உண்டாகும்; இரத்தவோட்டம் நன்கு பரவும். உணர்ச்சியில்லாத சமயத்தில் எந்த வகையான உணவும் கொடுத்தல் ஆகாது.

111

உடைகளில் நெருப்புப் பற்றுதலால் எரியுண்டு இறந்தவர் பலரைப்பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். உடைகளில் நெருப்புப் பற்றிய சமயங்களில் செய்ய வேண்டியவற்றைக்குறித்து இங்குச் சில கூறுவோம்:

நெருப்புக்குச்சியில் விரைவாகத் தீப்பற்றி எரியாவிடின், நாம் யாது செய்கின்றோம்? அதனைத் தலைகீழாகப் பிடிக்கின்றோம். அப்பொழுது, நெருப்பு மேல்நோக்கி எரியும் இயல்புள்ளது என்பது அறியலாகும். ஒருவர் உடையில், நெருப்புப் பற்றிக்கொள்ளின், அவர் நின்றுகொண்டிருத்தல் கூடாது. நின்றுகொண்டிருந்தால் நெருப்பு விரைவில் மூண்டு எரியும் என்பது மேல் உதாரணத்தால் தெளிவாகும். ஆதலால், உடையின் முன்பாகத்தில் தீப்பற்றிக்கொண்டால், தரையில் மல்லாந்து படுக்கவேண்டும்; பின்பக்கத்திலாயின், கவிழ்ந்து படுக்கவேண்டும்; அவ்வாறு படுத்தால், அனற்கொழுந்து மேல்நோக்கி எரிய இடமில்லாமையால், விரைவில் அணைந்துவிடும். உடை எளிதில் அவிழ்க்கத் தக்கதாயிருப்பின், நெருப்புப் பற்றியதும் அதனை அவிழ்த்து எறிந்துவிடுதல் சிறந்தது; அன்றேல், தரையிற் படுத்துப் புரளுதலும் அமையும்.

ஒருவர் உடையில் கனல் பற்றிக்கொண்டால், நீ என்ன செய்யவேண்டும்? கனமான முரட்டுத்-துணியையோ, அல்லது கம்பளி, சாக்கு முதலியவற்-றையோ சுருட்டி, எரியும் பாகத்தின்மேல் போட-வேண்டும். அவ்வாறு செய்யின் கனற்கொழுந்து அணையும். பின்னர், தீப்பற்றிய உடையை மெதுவாக அவிழ்க்கவேண்டும் ; அவிழ்க்க முடியாதாயின், கத்த-ரித்து எடுக்கவேண்டும் ; எரியுண்டு புண்பட்ட இடத்-தில், நெய், வெண்ணெய், விளக்கெண்ணெய் இவை-போன்றவற்றில் பஞ்சைத் தோய்த்து வைக்கவேண்-டும். இத்தருணங்களில் கனலை நீரால் அணைத்தல் கூடாது. கழுத்தின் பக்கம், மூளை, இருதயம், சுவா-சப் பை இவற்றில் எரி உற்றிருக்குமாயின், ஆபத்துக்கு இடமாகும். ஆதலால், உடனே டாக்டருடைய உத-வியை நாடுதல் அவசியமாகும்.

மேற்கூறியவாறு எல்லாவித அபாயங்களுக்கும் உதவிசெய்வது சாலப் பயன்தருவதாகும். சாதாரண-மான காலங்களில் இத்தகைய செயல்களைப் பிறருக்-குச் செய்து பழகினால்தான், அபாயகாலங்களில் துணிவாக நின்று உதவிபுரிதல் கூடும். ஆதலின், இம் முறைகளைச் செய்து பயிலுதல் வேண்டும்.

### வினாக்கள்

1. உடம்பிலுள்ள சுத்த ரத்தத்திற்கும் அசுத்த ரத்தத்திற்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.
2, உடையில் நெருப்புப் பற்றிக்கொண்டால் அவர்கள் யாது செய்யவேண்டும் ?

## 6. ராஜா, அண்ணாமலைச் செட்டியார்

நமது தமிழ்நாட்டில் உழுதொழில் புரிவோரே பலராயினும், வாணிகம் செய்து வளம்பெருக்கும் வணிகரும் பண்டுபண்டே வாழ்ந்து வந்துள்ளனர். சிலர் கலத்தில் சென்று கடலைக் கடந்து பிறநாடு புக்கு ஆங்குப் பொருள் தேடி வந்தனர். அவ்வாறு இக்காலத்தில் அயல்நாடுகளில் தங்கி, பொருளீட்டி வரும் வணிகப் பெருமக்கள் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களே ஆவர்.

இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு பகுதி இக்காலத்தில் செட்டிநாடு என்று வழங்குகின்றது. அந்நாட்டில் வாழும் வணிகப்பெருமக்கள் 'நகரத்தார்' என்றும் வழங்கப்படுகின்றனர். அன்னார் அண்மைக்காலம்வரை கோயில்களைப் பழுதுபார்த்தலிலும், பாழ்பட்டவற்றைப் புதிதாக அமைத்தலிலும், கும்பாபிடேகம் முதலிய திருவிழாச் செய்தலிலும், இவை போன்ற பிற திருப்பணிகளிலும் பெரும்பொருளைச் செலவிட்டுப் பெயர்பெற்றனர்; இப்போது சிலகாலமாக கல்வித்துறையில் கருத்தூன்றி, அதனை வளர்த்தலில் ஈடுபட்டுள்ளனர். இத்துறையில் முன்னின்றவர் ராஜா, சர். அண்ணாமலைச் செட்டியாரே என்னலாம்.

செட்டிநாட்டில் பெயர்பெற்று விளங்குங் கானாடுகாத்தான் என்னும் நகரில் முத்தையா செட்டி-

யார் என்பவர் பெருந்திருவினராய் வாழ்ந்துவந்தார். அவர் சிதம்பரம் நடராஜர்கோயிலில் பல திருப்பணிகள் புரிந்தும் அன்னசத்திரம் அமைத்தும், சிவ பக்தி மிக்கவராய்ச் சிறப்புற்றிருந்தனர். காசிமாநகரத்திலும் பெரியதொரு சத்திரம் அமைத்துள்ளனர். முத்தையா செட்டியார் புண்ணியப்பேற்றால் மூவர் மக்களைப் பயந்தார்; அவருள் இளையவரே மேற்கூறிய ராஜா, சர். அண்ணாமலைச் செட்டியார். அவர் 1881 செப்டெம்பர்மாதம் 30 ஆந் தேதியில் பிறந்தார்.

அண்ணாமலைச் செட்டியார் தம் இளம்பருவத்தில் தம் குலத்தொழிலாகிய வாணிகத்தில் ஈடுபட்டு, அதன் பலதுறைகளிலும் உள்ள நுட்பங்களை நன்கு அறிந்தார். அவருக்குப் பத்தொன்பதாம் வயதில், தந்தையார் முத்தையா செட்டியார் இவ் வுலகவாழ்வை நீத்தார். அதன்பின் குடும்பத்தில் பிரிவினை நடந்தது. பாகம் ஆனபின் நம் செட்டியார் பத்து ஆண்டுகள் தம் தொழிலில் முழுக்கவனத்தையும் செலுத்திவந்தார்; தொழிலில் எவ்வித விவாதமும் ஏற்படாதவாறு கருத்தூன்றி ஒழுங்காக நடத்திவந்தார். அதனால் தொழில் பெருகிற்று; வருவாயும் மிக்கது. செல்வம் பெருகியபின்னும் செட்டியார் முன்போலவே தம் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தார்.

அண்ணாமலைச் செட்டியார் தம் நாட்டில்மட்டுமன்றி, இலங்கை, பர்மா, மலேயா இந்நாடுகளுக்கும் சென்று முக்கியமானவற்றைக் கண்டறிந்து வந்தார்.



அவருக்குப் பெரிய நகரங்களையும் அரசியல்முறைகளையும் கண்டு அறிதலில் பெருவிருப்பம் உண்டு. அதனால் 1910-இல், தம் தமையனார்குமாரர் ஸர். முத்தையா செட்டியாரோடும், அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த மில்லர் என்பவரோடும் ஐரோப்பாவிற்குச் சென்று, இங்கிலாந்தில் பலமாதங்கள் தங்கி, அந்நாடு முழுவதையும் சுற்றிப்பார்த்தார். அரசியல் நடவடிக்கைகளையும், நாட்டாண்மைக் கழகங்களின் செயல்களையும் நன்கு அறிந்தார். அம்முறைகளைப் பின்பற்றி நம் நாட்டிலும் நடைபெறுதல் வேண்டும் என்பது அவர் கொண்ட கருத்து.

செட்டியார் நம் நாட்டிற்கு வந்தபின், பொதுமக்களுக்குத் தொண்டுசெய்தலில் உளங்கொண்டு காரைக்குடி யூனியனுக்குத் தலைவரானார். அவர் கானாடுகாத்தானில் வாழ்ந்துகொண்டே நாள்தோறும் அதிகாலையில் எழுந்து, குதிரைவண்டியில் காரைக்குடிக்குச் சென்று, அங்கு நடைபெறவேண்டிய பணிகளுக்கெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டு, ஊருக்குத் திரும்பிவிடுவார். இவ்வாறாக 1913 முடிய, தலைவர்பதவியைத் திறம்பெற ஆற்றி வந்தார்; நகராண்மைக்கழகத்தின் அநுபவத்தினால், நாட்டாண்மைக்கழகத்திலும் உறுப்பினராகி, கழகச்செயல்களை நன்கு ஆற்றுவித்தார்; தம்முடைய ஊரில் மக்கள் விருப்பத்தின்படி 'யூனியன்' சபையை ஏற்படுத்தினார். செட்டியாரின் தொண்டுகளை அறிந்து, அரசாங்கத்தார் 'ராவ் பஹதூர்' என்னும் பட்டம் அளித்துச்

சிறப்பித்தனர். பின்னர் 1916-இல் அவர் சென்னைச் சட்டசபையில் ஓர் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். அதனால் சிலகாலம் சென்னையில் தங்கியிருப்பாராயினர்.

நம் செட்டியாருக்கு இளமைமுதற்கொண்டே நாட்டில் கல்வியைப் பரப்புதலில் விருப்பம் மிகுதி. அதனால், சமயம் நேர்ந்தபோதெல்லாம் கல்விக்காக மிக்க பொருளை உதவி செய்துவந்தார்; 1915-ஆம் ஆண்டில் மதுரை 'அமெரிக்கன் காலெஜ்' மாணுக்கர்களுக்கு ஏற்றதொரு விடுதி அமைத்துக்கொடுத்தார்; 'மதுரைக் கல்லூரி' க்கு 30,000 ரூபாய் நன்கொடை நல்கினர். அவர்தமையனர் திவான்பகதூர் இராமசாமிச் செட்டியார் சிதம்பரத்தில் உயர்தரக் கலா சாலையை அமைத்து நடத்திவந்தார். நம் செட்டியார் ஒரு கல்லூரி அமைத்தற்குக் கருத்துக்கொண்டு, மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரோடு ஆலோசித்து உறுதிசெய்தார். பின்னர், அதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்தலைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், தமையனர் இராமசாமிச் செட்டியார் மரணமடைந்தார். அதனல் அவர் நடத்திய கலாசாலையைக் கவனிக்கும் பொறுப்பு ஏற்பட்டதாதலின், சிதம்பரத்திலேயே கல்லூரியையும் அமைக்க நிச்சயித்தார். 1918-இல் சிதம்பரத்தில் கல்லூரியை ஏற்படுத்தி, அதற்கு, தம் அன்னையாரின் ஞாபகமாக, 'மீனாட்சி காலெஜ்' என்று பெயரிட்டார்; அதற்காக

சிதம்பரத்தை யடுத்த 'திருவேட்களம்' என்னுமிடத்தில் பெரிய கட்டடங்களை எடுப்பித்தார்.

1923-இல் நம் செட்டியார் அரசாங்கசபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அவ்வாண்டிலே 'இம்பீரியல் பாங்கு' நிர்வாகிகளுள் ஒருவராக வைஸ்ராயினுல் நியமனம் பெற்ருர். இவற்ருல் பொதுத்தொண்டாற்ற விருப்பம்கொண்ட அவருக்கு அதற்குத் தக்க வாய்ப்புக் கிடைத்தது. மீண்டும் தொடர்ச்சியாக இரண்டுமுறை அரசாங்கசபை உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அவரது திறமையை நன்கு அறிந்த அரசாங்கத்தார் 1922-இல் அவருக்குத் திவான்பஹதூர் பட்டத்தையும், 1923-இல் 'ஸர்' பட்டத்தையும் அளித்து அவரைச் சிறப்பித்தனர்.

சிதம்பரம் ஸ்ரீ மீனுட்சி காலெஜ் ஆண்டுதோறும் அபிவிருத்தி அடைந்துவந்தது. பின்னர் 1924-இல் மீனுட்சி தமிழ்க்கல்லூரி, வடமொழிக் கல்லூரி, போதனுமுறைக் கல்லூரி, போதனுமுறைக் கலாசாலை இவற்றை ஏற்படுத்தி, புகழ்பெற்ற பேராசிரியர்கள்தலைமையில் அவற்றை நடத்திவந்தார். இவ்வாறு பலதிறப்பட்ட கல்லூரிகளை நடத்திவருகையில், அங்கு ஒரு பல்கலைக்கழகம் அமைக்கவேண்டுமென்னும் அவா செட்டியாரின் உள்ளத்தில் எழுந்தது. அதனை அவர் தம் நண்பர்களுக்குத் தெரிவிக்க, அவர்களும் ஆதரவளித்தனர். அதனுல், 1929-இல் 'அண்ணுமலைப் பல்கலைக் கழகம்' தோன்றிற்று.

பல்கலைக்கழகத்திற்கு வேண்டிய பலப்பல கட்டடங்கள் கட்டப்பட்டன. மாணுக்கர்களுக்கு இல்லங்களும், ஆசிரியர்களுக்கு வீடுகளும் அமைக்கப்பட்டன. காடாயும் வயல்களாயும் இருந்த இடங்களிலெல்லாம் கண்ணைக் கவரும் கட்டடங்கள் எழுந்தன. ஆதலின், திருவேட்களம் ‘அண்ணாமலை நக’ராயிற்று. இன்று, சிதம்பரம் ரயில்நிலையத்திலிருந்து ஒருமைல் தொலைவு வரை பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பல்வேறு கட்டடங்களும், நீர்நிலைகளும் மின்சாரநிலையமும் பிறவும் அமைந்து பொலிவுற்று விளங்குகின்றன.

ஸர். அண்ணாமலைச் செட்டியார் ஆற்றிவந்த பெருஞ்செயல்களை அறிந்து மதித்த அரசாங்கத்தார், 1929-இல் அவருக்கு ‘ராஜா’ (அரசர்) என்னும் உயரிய பட்டத்தை அவர்வழிவழியாக (hereditary) வருமாறு அளித்து, தம் கடமையை ஆற்றினர். இத்தகைய சிறப்புப்பட்டத்தைப் பரம்பரையாகப் பெற்றவர் நம் நாட்டில் வேறு யாருமிலர். செட்டியார் கல்விக்குச் செய்த பெருந்தொண்டினை மதித்துச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் டாக்டர் (LL. D.) என்னும் பட்டத்தை நல்கிச் சிறப்பித்தனர்.

இந்தியாவிலிருந்து தனியாகப் பிரியும் பர்மாவில் வாழ்ந்துவரும் இந்தியர்களுக்கு வேண்டிய பாதுகாப்பைப் பெறுதற்காக, அவர்களின் பிரதிநிதிகளாகச் சென்ற குழுவிற்குத் தலைவராய் நம் ராஜா செட்டியார் 1935-இல் இங்கிலாந்துக்குச் சென்றார்; அங்குப் பார்லிமெண்டில் முக்கியஸ்தர்சிலரைச் சந்தித்-

துப் பேசி, சென்ற காரியத்தை நிறைவேற்றினர்; பின்னர் அங்கிருந்து தம் மனைவியாருடன் அமெரிக்கா-வுக்குச் சென்று முக்கியமான இடங்களைக் கண்டு விரைவில் இங்கிலாந்துக்குத் திரும்பினர்; இங்கி-லாந்தில் பிரசித்திபெற்ற பல பல்கலைக்கழகங்களைப் போய்ப் பார்வையிட்டு அவற்றின் செயல்முறைகளை அறிந்தார்; பின்னர், பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி இந்நாடுகளுக்குச் சென்றார்; பிரான்ஸில் இருக்கையில், பிரெஞ்சு இந்தோ-சைனாவில் இந்தியர்களுக்கு நேர்ந்த கெடுதியைக்குறித்துப் பிரெஞ்சுஅரசாங்கத்தாருக்குத் தெரிவித்து, நன்மை செய்வதாக அவர்களிடமிருந்து வாக்குறுதிபெற்றுத் திரும்பினர்.

நம் ராஜா செட்டியாருக்கு, கட்டடங்களைக் கட்டுவதில் விருப்பம் அதிகம். அவர் மேல்நாடுகளில் செய்த சுற்றுப்பிரயாணத்தால் நாகரிகமுறையில் கட்டடங்களைக் கட்டும் மாதிரியை அறிந்திருந்தார். சென்னையில் அடையாற்றை யடுத்து, கடற்கரையில் பெரியதோர் அரண்மனையைப் புதுமுறைப்படி, தோட்டம் நீர்நிலை முதலியவற்றை ஏற்படுத்தி அமைத்தார்; இவ்வாறே செட்டிநாடு என்னும் ஊரிலும் உயர்வாகிய அரண்மனையைக் கட்டினர். செட்டிநாட்டில் அவரது அரண்மனையில் கவர்னர் முதலிய பலரும் விருந்தாளிகளாகத் தங்கியுள்ளனர்.

ராஜா, ஸர் அண்ணுமலைச் செட்டியார் நகரத்தார்-சங்கத்தின் தலைவராய்ப் பல ஆண்டுகள் இருந்து, தம் இனத்தவருக்குச் சிறந்த உரிமைகளும் நன்மைகளும்

கிடைக்கச் செய்தார். அவர் சமீப காலத்தில் தமிழ்-இசையை நாடெங்கும் பரப்பி வளர்த்தற்கு வேண்டும் பொருளை நல்கி, சென்னையில் அதற்கொரு நிலையமும் ஏற்படுத்தினார். இச் செயலைத் தமிழ்மக்கள் பெரிதும் பாராட்டி வாழ்த்தினர்.

பலவகைக் கல்விநிலையங்களுக்கும், ஆஸ்பத்திரி-களுக்கும், கோயில்திருப்பணிகட்கும், நம் ராஜா செட்டியார் ஒரு கோடிக்குமேலாகச் செலவிட்டுள்-ளார். அவரைப்போன்று சொந்தப்பொருளில் பல்-கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்தினவர் நமதுதேசத்தில் பிறர் ஒருவருமிலர். இப் பெருஞ்செயல் ராஜா செட்டியாருக்கும் தமிழ்நாட்டுக்கும் அழியாப் புகழை நிலைநிறுத்தும்.

நம் செட்டியார் ராஜாவாயினும் எளிய வாழ்க்-கையை மேற்கொள்வார். அவர் வைகறையில் துயிலெழுந்து, நீராடி, காபி பருகுவார்; ஆறுமணிக்கு, சிறந்த நூல்களைப் படிக்கத் தொடங்குவார்; பின்னர், அன்று ஆற்றவேண்டிய செயல்களைப்பற்றி ஆராய்-வார். அவருக்குத் தோட்டவேலையைச் செய்வித்தலி-லும் உலாவுதலிலும் மிக்க விருப்பமுண்டு. இசைக்-கலையில் பற்று அதிகமாதலின், அவர் ரேடியோவின்-மூலம் நல்ல பாட்டுக்களைக் கேட்பது வழக்கம். அவருடைய செயல்முறைகளை நம் நாட்டுப் பெரு-மக்களும் இளைஞர்களும் முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகி, நாட்டுக்கு நன்மைசெய்து, தாமும் நலம் பெற்று வாழ்வார்களாக!

## அருஞ்சொற்பொருள்

கலம்-கப்பல் பணி-வேலை.
அண்மை-சமீபம். திரு-செல்வம்.

## வினாக்கள்

1. அண்ணாமலைச் செட்டியார் சிதம்பரத்தில் காலெஜ் ஏற்படுத்தியதற்குக் காரணம் என்ன ?
2. ராஜா, செட்டியார் 1935-இல் ஐரோப்பாவிற்குச் சென்றபோது என்ன காரியங்களை நிறைவேற்றினார்?
3. ராஜா, செட்டியாரின் நித்தியச்செயல்களை எழுதுக.

## பயிற்சி

1. 'அதனால், தொழில் பெருகிற்று ; வருவாயும் மிக்கது.'

இவற்றை ஒருவாக்கியம் ஆக்குக.

2. 'அதனை அவர் தம் நண்பர்களுக்குத் தெரிவிக்க, அவர்களும் ஆதரவளித்தனர்.

இதில் முக்கிய வாக்கியம் எது ?

3. பொறுப்பு, வாய்ப்பு, கண்ணைக்கவரும், மாதிரி : இவற்றைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க.

# 7. பரதன்

[பரதன் படைகளோடு கங்கையின் வடகரையில் நிற்கின்றான். குகன் வந்து வணங்கிக் கூறுகின்றான்.]

குகன்—அண்ணலே ! தாம் முடிபுனைந்து நாட்டை யாளுதலைத் தவிர்ந்து சடைபுனைந்து காட்டை யடைந்தது என்னை ?

பரதன்--ஐய! என் தந்தையார் மரபின் வரன்முறையில்நின்று வழுவிவிட்டார். மூத்த புதல்வன் அரசாளுவதன்றோ முறைமை! அவர் தமது அரசியலை முறையின்றி எனக்கு அளித்திருக்கின்றார். ஆதலால், அண்ணலார் அருங்கானகம் அடைந்துள்ளார். யான் என் அண்ணலை அயோத்திக்கு அழைத்துப்போய் அரசராக்கக் கருதி வந்திருக்கின்றேன்.

குகன்—அண்ணலே, நுமது அறிவுடைமையும் அன்பும் அளவிடக்கூடுமோ! நும் தாயின் வேண்டுகோளுக் கிணங்கித் தந்தையா ரளித்த அரசினை வெறுத்துத் தவவேடங்கொண்டுவந்த நுமது பெருந்தகைமை என்னே! ஆயிரம் இராமர் ஒருங்கு சேரினும் நுமக்கு ஒப்பாவரோ? கதிரவன் வானத்திலுள்ள பல ஒளிகளையெல்லாம் மறைத்துத் தன் ஒளியைப் பரப்புதல்போல, தாம் தம் மரபின் மூதாதையரின் புகழையெல்லாம் மறைத்துத் தமது புகழைப் பெருக்கினீர். நும் பெருங்குணங்களையும் பேரறிவையும் அறிவில்லாத அடியேன் எவ்வாறு புகழ்ந்துரைக்க முடியும்?

பரதன்—அன்ப, நம் அண்ணல் இங்கு யாண்டுத் தங்கியிருந்தார்?

[இராமர் தங்கியிருந்த இடத்தைக் குகன் காட்ட, பரதன் காண்கின்றான்.]

அண்ணலே, உமது திருமேனி இந்தப் புழுதியில் பொருந்திற்றே! இந்தப் புல்லணையோ உமக்கு நல்லணை யாயிற்று! அந்தோ! என் அண்ணியாரின் அடிமலர் இக் கடுங்கானில் நடக்கப் பொறுத்ததோ! அவரது மலர்மேனி இம் மண்மேல் படிந்ததோ! ஆ! அவர் இவ் வின்னல்களை யெல்லாம் எவ்வாறு பொறுத்தாரோ! என்னாலன்றே இத்துணை இன்னல் விளைந்தது! என் அண்ணலார் இந்த மண்ணில் படுத்திருந்தார் என்பதை யறிந்தும் என் உயிர் போகவில்லையே! என்னினும் கொடியார் யார் உளர்! (குகனை நோக்கி) இளவல் இருந்த இடம் யாது? (என்று வினவுகின்றான்.)

குகன்—ஐய, இளவல் இரவு முழுவதும் இமைத்த கண்ணை மூடினான் அல்லன்; கண்களில் அருவிநீர் பாய, பெருமூச்செறிந்து, வில்லைத் தரையில் ஊன்றி, கங்குல் முழுதும் காத்து நின்றான்.

பரதன்—இலக்குவன் அன்பே அன்பு! யான் இராமபிரானுக்கு எல்லையில்லாத இடர் விளைத்தேன். என்னால் நேர்ந்த இடையூறுகளை அவன் நீக்குகின்றான். அவனன்றே இராமருக்குத் துணைவன்! என் அன்பும் என் அடிமைத்தனமும் என்னே! (குகனைப் பார்த்து) அண்ணலே, தாம் இந்தக் கங்கைவெள்ளத்தினின்று எங்களைக் கரையேற்றுவீராயின், துன்பவெள்ளத்தினின்று கரையேற்றியவராவீர்.

[பரதன் முதலியோர் குகன்உதவியால் கங்கையைக் கடந்தனர்.]

[பரதன் படைகளோடு இராமரிருப்பிடத்தை நோக்கி வருதலைக் கண்ட இலக்குவன் போர்க்கோலம் புனைந்து இராமரிடம் கூறுகின்றான்.]

இலக்குவன்—அண்ணலே, பரதன் பெரும்படைகளொடு அதோ வருகின்றான். தேவரீரை வஞ்சனையால் அரசிழக்கச் செய்ததுமன்றி, காட்டில்நின்று ஓட்டுதற்கும் வருகின்றான்போலும்! அவன்படைகளை இப்பொழுதே நொடியளவில் எமனுலகம் அனுப்புகின்றேன்; அடியேனுக்குக் கட்டளை தாரும்.

இராமர்—தம்பி! உன் திறனை நான் நன்கறிவேன். நீ இவ் வேழுலகங்களையும் கலக்க எண்ணினும் அதை முடிப்பாய். உன்னை விலக்க யாராலும் ஆகாது. ஆயினும், நான் சொல்வதைக் கேள். நமது குலத்திற் பிறந்தவர் யாருமே இதுகாறும் தீவினை செய்திலர். பரதனும் அத்தகையனே. அவன் செயல்எல்லாம் வேதத்தில் விதித்தனவே. அவன் என்னை அழைத்துப்போய் அரசாளுவிக்கக் கருதி வருகின்றான்; என்னோடு அமர்புரிய வருகின்றானல்லன். பரதன் தருமதேவதை; நன்மைக்கு அச்சாணி. என்மேலுள்ள அன்பினால் அவன்பால் ஐயம் கொண்டனை! சிறிது பொறு. பரதன் செயலை நீயே காண்பாய்.

[பரதன் கைகளைத் தலைமேல் கூப்பி அழுது-கொண்டு விரைந்துவந்து, இராமர்திருவடிகளில் விழுந்து வணங்கிக் கூறுகின்றான்.]

பரதன்—அண்ணலே, தாம் அறத்தை நினைந்திலீர் ! முறையைத் துறந்தீர் ! அருளை நீத்தீர் ! இது தமக்குத் தகுவதோ !

இராமர்—தந்தையார் நலனுற் றிருக்கின்றாரா ?

பரதன்—ஐய ! தமது பிரிவாகிய நோயினாலும், என்-னைப் பெற்ற பாவியின் வரமாகிய காலனாலும், அவர் வானுலகை யடைந்தார்.

[இராமர் தந்தையைக் குறித்து அழுது புலம்பி, வசிஷ்டர்சொற்படி உரிய கடன் ஆற்றி, மறுநாட்-காலையில் பரதனிடம் கூறுகின்றார்.]

இராமர்—தம்பி, தந்தையார்ஆணையின்படி நீ ஆட்சி-புரியாமல் தவவேடந்தாங்கி இங்கு வந்தது ஏன் ?

பரதன்—பாவியின் வயிற்றில் பிறந்த யான் தவஞ் செய்தலும் அடுக்காது ; சாகவும் துணிந்தே-னின்று ! இப் பழியை எவ்வாறு கடப்பேன் ? முதற்புதல்வராகிய தாம் தவம்புரியக் காட்-டுக்கு வந்தால், முறையின்றி யான் அரசுபுரிய-லாகுமோ ! யான் உமக்குப் பகைவனே ! தந்தையார் செய்த தவறும் தாய்செய்த தீமை-யும் தீருமாறு தாம் நாட்டிற்கு எழுந்தருளி, முடிசூடி, அரசாளுவீராக.

இராமன்—அறிஞ, மக்கள் தொழுதற்குரிய கடவுளர் தாய்தந்தையரே. அவரினும் பெரியார் இலர். தந்தையாரின் கட்டளைப்படி நான் இவ் வறத்தை மேற்கொண்டேன். இப்பொழுது உன் வேண்டுகோளால் அதனை விட்டுவிடல் ஆகுமோ? புதல்வர் தம் பெற்றோருக்குப் புகழை உண்டாக்கவேண்டுமேயன்றிப் பழியை உண்டாக்குதல் தகாது. அவருக்குப் பழியுண்டாகுமாறு யான் அரசுபுரியேன். தந்தையார்வரத்தின்படி அரசாட்சி உனக்கே உரியது. அதனை நீ ஆட்சிபுரிவாயாக.

பரதன்—தம்முடைய அரசு எனக்கு உரியதாயிற்று எனின், எனக்குரிய அரசாட்சியை யான் தமக்குத் தருகின்றேன். தாம் முடிசூட்டி ஆட்சிசெய்யவேண்டும்.

இராமன்—தம்பி, என்பால் உள்ள அன்பினால் அரசாட்சியை எனக்குத் தருகின்றாய். அதனை நான் ஏற்றுக்கொள்ளுதல் முறையாகாது. வாய்மையினும் தூய்மை மற்றொன்றுளதோ! பதினான்கு ஆண்டு இன்றோடு கழிந்துவிட்டதோ! பதினான்கு ஆண்டும் யான் காட்டில் தவம்புரிய, என் விருப்பின்படி நீ ஆட்சிசெய்வாயாக. தந்தையாரின் கட்டளைப்படி யான் அரசுபுரிய உடன்படவில்லையா? அவ்வாறே என் ஆணையின்படி நீ அரசுபுரிதல் வேண்டும்.

வசிஷ்டர்—(இராமனை நோக்கி) நான் கூறுவதைக் கேட்பாயாக. குரவர்ஐவருள்ளும் கலைகளை யுணர்த்திய ஆசானே பெரியோன் என்று முன்னோர் கூறியுள்ளார். யான் உனக்குப் பலப்பல விச்சைகளைக் கற்பித்திருக்கின்றேன். ஆதலின், என் ஆணையை நீ மறுத்தல் தகாது. இப்பொழுதே நாட்டுக்கு வந்து முடிசூடி ஆட்சிசெய்.

இராமர்—(வசிஷ்டரை வணங்கி,) சுவாமி, அடியேன் விண்ணப்பத்தைக் கேட்டருள்க. ஒருவர் ஒரு செயலைச் செய்ய மேற்கொண்டபின், யாராயினும் அதனை மறுத்தல் அறமாகுமோ! தாய் பணித்ததும் தந்தை ஏவியதுமாகிய செயலைச் செய்யாத கீழ்மகன் நாயினும் இழிந்தவனுவனன்றோ! பெற்றோர்பணியை மேற்கொண்டபின் தாங்கள் பணிப்பது தகுவதோ! ஆராய்ந்தருள்க.

பரதன்—ஆயின், நாட்டை ஆள்பவர் ஆள்வாராக. நானும் காட்டிற்கு வருகின்றேன்.

[அப்பொழுது வானத்திலிருந்து பரதனை நோக்கி வானோர் கூறுகின்றனர்.]

இராமன் தந்தையின் கட்டளைப்படி பதினான்கு ஆண்டும் காட்டிலேயே இருக்கவேண்டும். நாட்டைக் காப்பது நின் கடன்.

இராமர்—வானவர்கட்டளையை மறுக்கலாகாது. நான் உன்னை வேண்டிக்கொள்கின்றேன். நீ நாட்டுக்குச் சென்று ஆட்சிசெய்வாயாக.



பரதன்—அவ்வாறாயின், தாம் பதினான்கு ஆண்டு கழிந்ததும் அயோத்திக்கு வந்து அரசை மேற்கொள்ளவேண்டும். இன்றேல், யான் எரியில் மூழ்கி இறப்பேன். இது உண்மை

இராமர்—அவ்வாறே ஆகுக.

பரதன்—அண்ணலே, தம் பாதுகைகளைத் தந்தருள்க. அவை அரியணையிலிருந்து ஆட்சி புரியும். யான் தம் கட்டளைப்படி நடக்கின்றேன்.

[பரதன் பாதுகைகளைக் கொணர்ந்து அரியணையி லேற்றி, நந்திக்கிராமத்தில் இருந்து தவம்புரிந்து- வந்தான்.]

## அருஞ்சொற்பொருள்

இன்னல்-துன்பம். எண்ணினும்-நினைத்தாலும்.

கங்குல்-இரவு. இதுகாறும்-இதுவரையும்.

## வினாக்கள்

1. 'ஆயிரம் இராமர் ஒருங்கு சேரினும் நமக்கு ஒப்பா வரோ?' சந்தர்ப்பம் கூறுக.

2. பரதன் வருதலைக் கண்ட இலக்குவன் இராமரிடம் யாது கூறினன்?

3. வசிஷ்டருக்கு இராமர் கூறிய மறுமொழி என்ன?

## பயிற்சி

1. 'நமது அறிவுடைமையும் அன்பும் அளவிடக் கூடுமோ!'

இதைச் செய்திவாக்கியம் ஆக்குக.

2. பெருக்குதல், இளவல், கங்குல், துன்பம், விதித்தன, தீமை, பழி, கீழ்மகன்:

இவற்றின் எதிரிடைச் சொல்லை எழுதுக.

## 8. வங்கி

மாதவன்—அப்பா, இப்போது ஒருவர் வந்தாரே; அவர் யார்? எதற்காக வந்தார்?

தந்தை—அவர் இவ் வூரிலிருக்கும் துணிவியாபாரி. உன் தமக்கை கலியாணத்துக்கு வாங்கிய துணிவகையில் பாக்கியிருந்த பணத்துக்காக வந்தார். அவருக்கு எண்ணூறு ரூபாய் கொடுத்தேன்.

மாத—நீங்கள் ரூபாயோ, 'நோட்டோ' கொடுக்கவில்லையே; ஏதோ ஒரு கடிதமல்லவா கொடுத்தீர்கள்.

தந்—ஆமாம், அது வெறுங்கடிதமன்று. அதற்குச் 'செக்' என்று பெயர். அதைக் கொண்டுபோய் 'இம்பீரியல் பாங்க்' என்னும் வங்கியில் கொடுத்தால், அதில் குறித்த தொகையைக் கொடுப்பார்கள்.

மாத—அப்பா, 'வங்கி' என்பது என்ன? அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

தந்—சொல்கிறேன், கேள். 'வங்கி' என்பது பிறர் பணங்களைக் குறைந்த வட்டிக்கு வாங்கி, அதனினும் சிறிது உயர்ந்த வட்டிக்கு வேண்டுவோர்க்குக் கடனாகக் கொடுத்து உதவிபுரியும் நிலையம். ஒவ்வொரு வங்கிக்கும் கிளைகள் பலப்பல பட்டணங்களில் அமைக்கப்பட்டிருக்-

கும். அதன் அமைப்புக்குச் சில விதிகள் உண்டு. புதிதாக ஒரு வங்கியைத் தொடங்குபவர், தம் வங்கிக்கு முதற்பொருள் இத்துணை என்றும், அம் முதல் இத்துணைப் பங்குகளால் ஆவது என்றும் வரையறுத்துக் கொள்வர்; ஒவ்வொரு பங்கிற்கும் உரிய தொகையில் செம்பாதியைப் பங்குக்காரரிடம் வாங்கிக்கொண்டு, பாதியை நிறுத்திவைப்பர். தம்மிடம் நிறுத்திவைக்கப்பட்ட தொகையை வங்கியில் கேட்கும்போது அவர்கள் உடனே கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

மாத—வங்கியில் சேர்ந்த பங்குத்தொகையைத்தானே கடனாகக் கொடுப்பார்கள்?

தந்—பங்குத்தொகைமாத்திரம் வங்கியை நடத்தப் போதாது. அதனால், குறைந்த வட்டிக்குச் செல்வர்களிடம் பணம் கடன்வாங்கிக்கொள்வர். அப் பணத்திற்கு 'டிபாஸிட்டு' என்று பெயர். அது பல வகைப்படும். செல்வர் சிலர் இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு என்று காலங் குறித்துக் கடன் கொடுப்பர். குறித்த அத்தவணைக்குமுன் முதலைப் பெற முடியாது. ஆனால், ஆறு மாதத்துக்கு அல்லது ஆண்டுக்கு ஒருமுறை வட்டியை வாங்கிக்கொள்ளலாம். இம்முறை டிபாஸிட்டுக்கு நிர்ணயத்தவணை டிபாஸிட்டு (Fixed Deposit) என்பது பெயர்.


EIAR
CURRENT. ACT.
SAVINGS. BANK
BILLS & DRAFTS
ENQUIRY & T.T
PAYMENTS
CH. E PRASAD

மாத—இம்முறையில் கடன்கொடுப்பவருக்கு என்ன நன்மை?

தந்—இந்த 'டிபாஸிட்டு'க்கு வட்டி விகிதம் அதிகம். அன்றியும், குறித்த காலத்தில் தவருமல் வட்டியைப் பெற்று வாழ்க்கையை நடத்தலாம்.

மாத—சரி, அப்பா. மற்ற 'டிபாஸிட்டுக்கள்' யாவை?

தந்—சொல்கிறேன், கேள். சிறிய வருமானமுள்ளோர், வங்கியில் சிறுகச் சிறுகப் பணஞ் செலுத்தி முதலைச் சேர்க்கலாம். இம்முறை, சேமநிதி டிபாஸிட்டு (ஸேவிங்ஸ் பாங்க்) எனப்படும். இது ஏழைமக்களுக்கு மிகப் பயன்படும். இதற்கும் வட்டி உண்டு. ஆனால், வட்டி விகிதம் குறைவு. இந்தத் தொகையிலிருந்து ஒருவாரத்தில் குறிப்பிட்ட அளவே பணத்தை எடுக்கலாம்.

மாத—அப்பா, இன்னும் வேறு முறையும் உண்டோ?

தந்—உண்டு. நடைமுதல் கணக்கு (கரண்ட் டிபாஸிட்) என்பது ஒன்று உளது. இக் கணக்கில் ஒருவர் தமது தொகை முழுவதையும் ஒரே தடவையில் வாங்கிக்கொள்ளக்கூடும்; சில்லறையாகவும் வாங்கலாம். அதற்கு வட்டி விகிதம் மிகக் குறைவு. குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாயுள்ள பணத்துக்கு வட்டி கொடுப்பதில்லை. இம்முறை வணிகர்முதலியோருக்குப் பெருநன்மையைத் தரும். நடைமுதல்கணக்குக்கள்

ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவை-யானபோதெல்லாம்நடைமுதல்கணக்கில்உள்ள பணத்தைச் 'செக்' மூலமாய் வாங்கிக்கொள்-ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையமே வங்கி என்ற பெயரைப் பெறும். கடன்வாங்கிக் கடன்கொடுக்கும் ஸ்தாபனம்எல்லாம் இப் பெயரைப் பெற உரியனவல்ல.

மாத—அப்பா, இப்பொழுது எந்தக் கணக்கிலிருந்து பெறுவதற்கு நீங்கள் செக் கொடுத்தீர்கள் ?

தந்—நடைமுதல் கணக்கிலிருந்து பெறுதற்குச் 'செக்' கொடுத்தேன்.

மாத—'செக்'கிலும் பலவகை உண்டோ ?

தந்—இரண்டுவகை உண்டு. "'செக்'குத் தொகையை இன்னாருக்காவது, இதனைக் கொண்டுவருபவர்க்-காவது கொடுக்க" என்று எழுதப்பட்டிருக்குஞ் 'செக்' பேரர் செக் (Bearer Cheque) எனப்படும். செக்கில் குறிப்பிட்டுள்ளவருடைய கையெ-ழுத்தில்லாமலே, 'செக்' கொண்டுவந்தவ-ருடைய கையெழுத்துக்கொண்டு அத்-தொகையை வங்கியில் கொடுத்துவிடுவார்கள். அதனால், இச் 'செக்'கை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளவேண்டும். மற்றொருவகை 'ஆர்டர் செக்' எனப்படும். இதில் "இன்னாருக்-காவது, அவருடைய உத்தரவு பெற்றவருக்காவது கொடுக்க" என்று எழுதப்பட்டிருக்கும். இதில்

குறிக்கப்பட்டவருடைய கையொப்பம் அவசியம் வேண்டும்.

மாத—நாம் வங்கியில் பணத்தைப் பற்றுவரவு செய்வதனால் நன்மை என்ன, அப்பா?

தந்—நம் கையில் இருந்தால் அதைக் கள்வர் கவர்ந்து செல்லலாம். அன்றியும், வட்டியில்லாமல் போகும்.

மாத—பிறருக்குக் கடன் கொடுக்கலாமே!

தந்—கொடுக்கலாம். அவர்கள் வட்டியை ஒழுங்காகத் தருவதில்லை. அன்றியும், நமக்கு வேண்டும்போது அவர்களால் தரமுடியாது. வழக்குத் தொடுத்துச் சிலரிடம் பொருளைப் பெறநேரும். சில சமயங்களில் முதலுக்கே மோசம் வந்துவிடுவது முண்டு.

மாத—வங்கியினால் நமக்கு நஷ்டம் வாராது என்பதற்கு என்ன உறுதி உளது?

தந்—மாதவ, இது நல்ல கேள்வி. வங்கிக்கு நஷ்டம் வரின், பங்காளிகளிடம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்ற பாதிப் பங்குத்தொகையிலிருந்து நம் தொகையைப் பெற்றுவிடலாம். ஒவ்வொரு வங்கியும் ஆண்டுக்கு ஒருமுறையோ, இருமுறையோ வரவுசெலவுக் கணக்கை அனுப்பும். அதனால் அதன் நிலைமையை நாம் அறியலாகும். பெரும்பாலும், அது நம்மை ஏமாற்ற இடமில்லை. அன்றியும், அரசாங்கத்தார் ஒவ்வொரு வங்கியின் கணக்குக்களை அவ்-

வப்பொழுது பரிசோதித்துச் செய்யவேண்டு பவற்றைச் செய்து, மக்களுக்கு நஷ்டம் வாராமல் காப்பர்.

மாத—வங்கியை நடத்துவோர் அதனால் அடையும் பலன் என்ன ?

தந்—வங்கியில் "நடைமுதல் கணக்கு" வைத்துக் கொள்பவர் ஒவ்வொருவருடைய கணக்கிலும் குறைந்தது இவ்வளவு ரூபாய் இருக்கவேண்டும் என்று விதி உளது. அவ்வாறு உள்ள தொகை மிகக் குறைந்த வட்டியில் நெடுங்காலம் இருக்கும். அத் தொகையையும் பங்குத் தொகையையும், குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கும் பிற தொகைகளையும் அதிக வட்டிக்குக் கடன் கொடுப்பதனால் அதிக இலாபம் வரும். இரண்டு, மூன்று சதவீதம் கடன்வாங்கி, ஏழு, எட்டுச் சதவீதம் கடன் கொடுத்தால், அதனால் இலாபம் உண்டல்லவா ? ஆண்டுதோறும் அந்த இலாபத்தில் ஒரு பகுதியைச் சேமநிதியாக ஒதுக்கிவைப்பர். அதுவும் எல்லாச்செலவும் போக, எஞ்சிய இலாபத் தொகை எல்லாப்பங்குக்காரருக்கும் பகுத்துக் கொடுக்கப்படும்.

மாத—வங்கி முறையினால் நமக்கு வேறு நன்மை உளதோ ?

தந்—வெளியூரில் உள்ள ஒருவருக்குப் பணம் அனுப்ப வேண்டுமாயினும், அவர் பெயருக்குச் 'செக்'

அனுப்பலாம். தபாலில் அனுப்பி, மணியார்டர்-செலவு செய்யவேண்டாம்.

மாத— இத்தனை நன்மைகள் இருக்கின்றனவா? அப்பா, எனக்கு ஒரு சந்தேகம். நீங்கள் கணக்கு வைத்துக்கொண்டிருக்கும் வங்கியின் கிளை இல்லாத ஊரில் உள்ள ஒருவருக்குச் 'செக்' அனுப்பினால், அவர் என்னசெய்வார்?

தந் — அவர் தாம் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் அச்'செக்'கைக் கொடுத்தால் அத்தொகையைப் பெற்றுவிடலாம். அவ் வங்கிக்கும் என் வங்-கிக்கும் பற்றுவரவுக் கணக்கு இருக்கும்; இல்லாவிட்டாலும், அதைப் பெற்றுக்கொள்-ளும் முறை அவர்களுக்குத் தெரியும். அவ-ருக்கு ஒரு வங்கியிலும் கணக்கில்லையாயின், கையெழுத்திட்டு, கணக்குள்ளவரிடம் கொடுத்தால், அவர் வாங்கிக் கொடுப்பார்.

மாத —அப்பா, இன்று அனேக அரிய விஷயங்களை அறிந்துகொண்டேன்.

தந் — மாதவா, நீ வங்கியைப்பற்றி அறியவேண்டி-யவை இன்னும் எத்தனையோ இருக்கின்றன. வங்கியின் வகை, அமைப்பு, விதிகள் முதலிய-வற்றை விரிவாய் விளக்கும் புத்தகமொன்றை உனக்குத் தருகிறேன். அதைப்படித்துஅறிந்து-கொள். விளங்காதவற்றிற்கு என்னைக் கேள். சொல்லுகிறேன்.

## வினாக்கள்

1. 'வங்கி' என்பது யாது? அதனைத் தொடங்கும் முறை எப்படி?
2. 'நிர்ணயத்தவணை டிபாஸிட்' டைப்பற்றி எழுதுக.
3. 'செக்' கின் வகைகளுள் ஒன்றைத் தெரிவிக்க.
4. வங்கியை நடத்துபவருக்கு லாபம் எப்படிக் கிடைக்-கின்றது?
5. மாதவனுக்கு எவ்விஷயத்தில் சந்தேகம் உண்டாயிற்று? அதற்குச் சமாதானம் என்ன?

---

## 9. மனோன்மணி

மதுரைமாநகரில் ஜீவகன் என்னும் அரசன்-ஒருவன் அரசு செலுத்திவந்தான். அவனுக்குக் குடிலன் என்பவன் மந்திரியாய் இருந்தான். குடிலன் ஒப்பற்ற சூழ்ச்சித்திறம் உள்ளவன்; தன்னலமொன்றே கருதுபவன். அவன் அரசனிடம் பற்று மிக்கவன்போல் நடித்து, அவனைத் தன்வயப்படுத்திக்-கொண்டான்; பின்னர், செல்வமும் செல்வாக்கும் பெருக்கிக்கொள்ளக் கருதி, முதுநகராகிய மதுரை அதற்கு இடங்கொடாது என்று எண்ணி, அரசனை மதுரையின் நீங்கித் திருநெல்வேலியில் தங்கி அரசு-செலுத்துமாறு செய்தான். குடிலன்வசப்பட்டு நிற்ற-லால் அரசனுக்கு யாது நேருமோ என்று இரங்கி, அரசன் குலகுருவாகிய சுந்தரமுனிவர் அவனுக்குத்

துணையாயிருந்து காக்கக் கருதி, திருநெல்வேலிக் கருகில் ஓர் ஆசிரமம் அமைத்து அதில் தங்கியிருந்தார்.

முனிவர் அங்கு எழுந்தருளியிருப்பதை யறிந்து ஜீவகன் அவரை யழைப்பித்து, தன் அரண்மனை, கோட்டை முதலியவற்றைக் காட்டி வியந்து கூறினான். அரசனது அறியாமையை அறிந்த முனிவர், அவன்-குடும்பத்திற்கும் கோட்டைக்கும் நன்மையுண்டாகச் சில கிரியைகள் செய்யவேண்டுமென்று கூறி, அதற்காக அரண்மனையில் ஓர் அறையைத் தமக்கு உரியதாகப் பெற்று, ஆசிரமத்துக்குத் திரும்பினார்.

ஜீவகனுக்கு மனோன்மணி என்னும் மகள் ஒருத்தி இருந்தாள். அவள் உருவிலும், அழகிலும், நற்குண நற்செயல்களிலும் ஒப்புயர்வற்றவள். அவளுக்கு வாணி என்பவள் உயிர்த்தோழியாய் இருந்தாள். அவளும் சிறந்த ஒழுக்கமும் தெளிந்த அறிவும் உடையவள்.

ஒருநாள் கோட்டையைக் காணவந்த சுந்தர முனிவர் மனோன்மணியைக் கண்டார்; அவள் தன் கனவிற் கண்ட அரசனை விரும்பி அதனால் உடல் தளர்-வுற்றிருந்ததனைக் குறிப்பால் உணர்ந்தார். உணர்ந்-தவர் ஜீவகனிடம் மனோன்மணிக்கு மணவினை நிகழ்த்த வேண்டுமென்றும், அவளுக்குத் தக்க மணாளன் சேரநாட்டரசன் புருஷோத்தமனே யென்றும், மண-வினையை எளிதில் நடத்த வல்லவன் நடராஜன் என்பவனே என்றும் அறிவுறுத்தி அகன்றார். ஜீவகன்,

நடராஜனைக்குறித்து வாணியின் தந்தை கூறிய கோட்சொற்களை உளங்கொண்டு, குருமொழியை உட்-கொள்ளானாய், குடிலனோடு ஆலோசித்தான்.

குடிலன் தன்னலமே கருதுவோனாதலின், சேர-வேந்தனுக்கு மனம் நிகழின் தன் எண்ணத்திற்குக் கேடு வரும் என்ற அச்சத்தாலும், ஒருகால் தன்-மகனுக்கே மனோன்மணியும் அவளுக்குரிய அரசும் கிடைக்கக்கூடும் என்று எண்ணிய பேராசையாலும் முனிவர் கருத்துக்கு மாறாகக் கூறினான். "அரசே, பெண்வீட்டார் மணம்பேசிச் செல்லுதல் இழிவா-கலின், முதலில் சேரவேந்தன்மனக்கருத்தை அறிதல் வேண்டும். அதற்குப் பழைய விவாதங்கள் சிலவற்றை மேற்கொண்டு ஒரு தூது அனுப்பவேண்டும். அப்போது மணவினைக்குரிய செய்திகளையும் அறிந்து வரலாம" என்று வஞ்சகமாகத் தெரிவித்தான். அரசன் அவன்கூற்றை நம்பி, அவன்மகன் பலதேவ-னைச் சேரனிடம் தூதனுப்பினான்.

சேரவேந்தன்புருடோத்தமன் தொடர்ச்சியாகச் சில நாட்களில் கனவில் ஒரு காரிகையைக் கண்டு, அவள் இன்னவள் என்று அறியப்படாமையின், மனம் அழுங்கி யாருடனாயினும் போர் செய்ய நேர்ந்தால், அதனால் கனாத் தவிர்தல் கூடும் என்ற எண்ணத்தால் போரை எதிர்நோக்கியிருந்தான். அப்பொழுது பலதேவன் சென்று, தன் தந்தை கற்பித்தவாறு, சேரனை அவையில் இழிவாகப் பேசினான். உடனே சேரன் சினமூண்டு போர்க்கோலங்கொண்டு பாண்-

டியநாட்டின்மேல் படையெடுத்தான். அதனை யறிந்த ஜீவகனும் போருக்குச் சித்தமாயினான். ஆகவே, இருதிறப்படையும் திருநெல்வேலிக் கருகில் கைகலந்தன. அப்போரில் படைவீரர்க்குள் நிகழ்ந்த குழப்பத்தினால் பாண்டியனுடைய படைகள் சின்னபின்னமாகிச் சிதறுண்டதனால் அவன் தப்புவது அரிதாயிற்று. அவ்வமயத்தில், கோட்டைக்காவலில் நியமிக்கப்பட்டிருந்த நாராயணன் என்னும் வீரன் சில குதிரைப்படைகளோடு வந்து திடீரென்று பகைவர்படைமேற் பாய்ந்து அரசனைக் காப்பாற்றி, கோட்டைக்குள் சேர்த்தான்.

ஜீவகன் தனக்கு நேர்ந்த மானக்கேட்டினால் வருந்தி நாராயணனுடைய அறிவுரையால் ஒருவாறு தேறியிருக்கும்போது, சேரன் விடுத்த தூதுவன் வந்து, போரில் தோற்றதற்கு அறிகுறியாக ஒருகுடம் தாமிரவருணிநீரும் ஒரு வேப்பந்தாரும் தந்தால் போரை நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாள் போர்புரிந்து கோட்டை முதலியவற்றை யழித்துவிடுவதாகவும் தன் அரசன் கூறியவாறு தெரிவித்தான். ஜீவகன் அதற் குடன்படாமல் பின்னும் போர்புரிய முடிவுசெய்து, தன் அரண்களை நோக்குங்கால், அவை ஒருநாள் முற்றுகைக்கும் தாங்காதவாறு அழிவுற்றிருப்பதைக் கண்டான். அவ்வாறு நேர்ந்த காரணத்தை அரசன் தன் அமைச்சனை வினவ, அவன் தன் பழம்பகைவனாகிய நாராயணனை முடித்தற்கு அதுவே தருணம் என்றெண்ணி, அரண்காவலிலிருந்த

நாராயணன் அதனை விடுத்துப் போர்க்களம் புக்கதே குழப்பம் முதலியவற்றிற்குக் காரணம் என்று பொய்க்-கதை கூறி அரசனை நம்புவித்தான். அதனை உண்மை-யென்று நம்பிய அரசன் நாராயணனைக் கழுவேற்று-மாறு கட்டளையிட்டான்.

அவ்வமயத்தில் சுந்தரமுனிவர் அரசனை விரைவில் வருமாறு ஆள்விடுத்தமையால் நாராயணன் கழு-வேற்றப்படவில்லை. முனிவர் அரண்மனையிலிருந்த தமது அறைமுதல் புறத்தேயிருந்த தமது ஆசிரமம்-வரை ஒரு சுருங்கை யமைத்திருந்தார். அதன் வழியாக அரசனையும் அவன்மகளையும் அழைத்துப்போகவே தாம் வந்ததாக அரசனுக்குத் தெரிவித்தார். அரசன் போருக்கஞ்சிப் புறம்போதல் தகாது என்று கூறி மறுக்க, பின்னரும் முனிவர் அறிவுறுத்தியதனால் தன்மகளைமட்டும் நள்ளிரவில் அவரோடு அனுப்ப உடன்பட்டான். முனிவரும் அவ்வாறே ஒப்பி அங்கிருந்து அகன்றார்.

ஜீவகன் தனக்கு நேருந் தீமையைக்குறித்தும் மகளைப் பிரியும் வருத்தம்பற்றியும் மனங்கலங்கி, முனிவர்மொழியிலும் ஐயுற்று, குடிலனை வருவித்து முனிவர் கூறிய செய்தியைத் தெரிவித்து, அவன்-கருத்தை அறியலானான். குடிலன் அதுவே தக்க தருணமென்று கருதி, மனோன்மணியை அவ்வாறு அனுப்புவது நன்மையேயென்றும், ஆயினும் மண-வினை முடிக்காமல் அனுப்புவது தகுதியன் றென்றும் கூறி, அன்றிரவே பலதேவனுக்கு அவளை மணம்-

புரிவித்து இருவரையும் சேர்த்து விடுத்தல் நன்றென்று அரசன் கருதுமாறு தூண்டினான்.

பின்னும் குடிலன் தனக்குத் தெரியாமல் முனிவர் அமைத்த சுருங்கையைக் காண விழைந்து, முனிவர் பெற்றுக்கொண்ட அறைக்குட் சென்று நோக்கி அவ் வழியைக் கண்டான். அவ்வழியே சென்று, வெளி-யேறிப் பார்க்க, பகைவரின்பாசறை அண்மையில் தோன்றிற்று. மேல் நடக்கும் போரில் தனக்கு ஏதேனும் தீங்கு நேரலாம் என்ற அச்சத்தாலும், மனோன்மணியின் மணம் அவ்விரவே நடந்தேறும் என்னுந் துணிபினாலும், அச் சுருங்கைவழியைச் சேர-னுக்குக் காட்டி அவனையழைத்துச் சென்று பாண்டி-யனை அவன்கையகப்படுத்தின், ஒருகால் தன்னையே சேரன் அரசனுக்கக் கூடும் என்னும் அவாவினாலும், குடிலன் சேரனைக் காணச் சென்றான். செல்லுகையில் வழியில் சேரனைக் கண்டு மகிழ்ந்து வணங்கி, தன் கருத்தைத் தெரிவித்தான். உடனே அவ்வரசன் தன் காவலரைக் கூவி வருவித்து, குடிலன்காலிலும் கைகளிலும் தளைபூட்டுமாறு ஆணையிட்டான்; பின், குடிலனை நோக்கி, "வஞ்சிவேந்தர்க்கு விருப்பு வெற்றிமட்டுமன்று. உன்னைப்போன்ற ராஜத்துரோ-கிகளைக் கண்டுபிடித்துப் பகையரசரைக் காப்பதும் குறிக்கோள்" என்று கூறி, சுருங்கைக்கு வழிகாட்டு-மாறு பணித்தான். அவ்வுரைகளைக் கேட்ட குடிலன் திடுக்கிட்டு, "'கெடுவான் கேடுசூழ்வான்' என்னும் நீதிக்கு நாம் இலக்கானோமே" என்று எண்ணிக்

கவன்று, அரசன் ஆணைப்படியே வழிகாட்டிச் செல்வானாயினன்.

குடிலன் வஞ்சகவுரையை மேற்கொண்டு மனோன்மணியைப் பலதேவனுக்கு மணம் புரிவிக்க உறுதி செய்த ஜீவகன் அச் செய்தியை மனோன்மணிக்கு அறிவித்தான். அச்சொல், அவளுக்குக் காதில் நாராசம் காய்ச்சி விட்டதைப்போல் இருப்பினும், தன் தந்தைக்கு நேர்ந்த இடையூற்றை யறிந்து காலநிலைக்கேற்ப நடத்தலே நன்மையென்று உணர்ந்து, அதற்கு உடன்பட்டாள்; பின்னர், தந்தையை வணங்கி, தன் தோழியாகிய வாணி அவள்கருத்தின்படி நடராஜனை மணம்புரிந்துகொள்ளவும், நாராயணன் தண்டனையை மாற்றிச் சிறையிலிடவும் ஆணையளிக்குமாறு தந்தையை வேண்டிக்கொண்டாள். ஜீவகன் அவ்வாறே கட்டளையிட்டு, மணவினைக்கு வேண்டுபவற்றைச் சித்தஞ்செய்தான். நள்ளிரவில் முனிவரும் நடராஜனும் அரசனிடம் வந்தனர். தாம் வருவதற்குள் குடிலன் செய்த சூழ்ச்சியையும், அதற்கு அரசன் உடன்பட்ட நிலைமையையும் அறிந்து வியப்புற்று அரசன் எண்ணியவாறே நடத்த முனிவர் இசைந்தார்.

அரசன் சுருங்கையின் அருகிலிருந்த அறையை மணவறைக்கேற்றவாறு அலங்கரித்து, அங்கு அமைச்சரோடும் முனிவர், நடராஜன், பலதேவன், நாராயணன் முதலியவரோடும் வந்து, குடிலன்வரவினை எதிர்நோக்கியிருந்தான். நெடுநேரமாகியும் குடிலன் வாராததனால், மணவினைச்சடங்குகளைத் தொடங்கி,

பலதேவனுக்கு மாலைசூட்ட மனோன்மணியை யழைக்-குமளவில், குடிலன் வழிகாட்ட வந்த புருடோத்-தமன், முனிவர் அறையை அடைந்து, அடுத்த அறை-யில் நடக்கும் ஆரவாரச்செயல் யாது என்று நோக்கி-னன்; அப்பொழுது, தான் கனவிற்கண்ட காதலி திரையினின்று வெளிவந்து, பலதேவன்முன் கையில் மாலையோடு பாவைபோல் செயலற்று நிற்றலைக் கண்டான். கண்டதும், பள்ளத்துட்பாயும் வெள்-ளம்போல் கடிதிற் சென்று, யாருமறியாதவாறு திடீரென்று அவ்வறையிற் புகுந்து மனோன்மணி-யின்முன் சென்று நின்றான். தன் உள்ளத்துள் அமர்ந்திருந்த காதலனைக் கண்முன் கண்ட மனோன்-மணி மணமாலையை அவன்கழுத்திலிட்டு, பரவச மடைந்து, உணர்விழந்து, அவன்தோள்மேல் சாய்ந்து மூர்ச்சித்தாள்.

அயலான் ஒருவன் அவையுட் புக்கதையும் மனோன்-மணி அவனுக்கு மாலைசூட்டியதையும் கண்ட ஜீவகன்-முதலியோர் துணுக்குற்று உள்ளங் கொதித்துப் பொருதற்கு எழுந்தனர். அப்பொழுது சுந்தரமுனி-வர் கையமர்த்திச் சமாதானப்படுத்தினர். புரு-டோத்தமன், குடிலன் தன்னிடம் வந்து கூறியசூழ்ச்சி-யுரையையும், தான் அதற்குடன்படாது அவனைத் தளையிட்டு ஜீவகனிடம் ஒப்பிக்க உடன்கொண்டு-வந்ததையும் கூறி, குடிலனை அவர்முன் நிறுத்தினன். புருடோத்தமனது அருங்குணத்தையும் பெருஞ்-செயலையும் அறிந்து அனைவரும் வியந்து புகழ்ந்தனர். சுந்தரமுனிவர் ஆணையின்படி ஜீவகன் மணமக்களை

வாழ்த்தி மகிழ்ந்தான். அனைவரும் உவகைக்கடலில் திளைத்தனர்.

## அருஞ்சொற்பொருள்

முதுநகர் - பழையநகரம்.
கிரியைகள் - செயல்கள்.
கூற்று - கூறுவது.
அழுங்கல் - கெடுதல், இரங்குதல்.
சின்னபின்னம் ஆகல்- துண்டு துண்டாதல்.
தார் - பூமாலை.
நள்ளிரவு - நடு இரவு.
தளை - விலங்கு
நாராசம் - இரும்புக்கம்பி
கடிது - விரைவு.
திளைத்தல் - குளித்தல்.

## வினாக்கள்

1. சுந்தரமுனிவர் திருநெல்வேலிக் கருகில் தங்கியிருந்தது ஏன் ?
2. ஜீவகன் குடிலன்வசப்பட்டிருந்தான் என்பதற்கு ஓர் உதாரணம் தருக.
3. புருஷோத்தமன் பாண்டியனோடு போர் தொடங்கக் காரணம் என்ன ?
4. மனோன்மணியின் நற்குணத்தைத் தெரிவிக்க.
5. வாணி, நடராஜன், பலதேவன் : இவர்களைப்பற்றிக் குறிப்பு எழுதுக.

## பயிற்சி

1. மணாளன், புருஷோத்தமன் : பிரித்தெழுதுக.

2. இப்பாடத்திலிருந்து கலவை வாக்கியத்திற்கு இரண்டு உதாரணம் தருக.

3. குழப்பம், பாசறை, குறிக்கோள், பாவைபோல், பரவசம், ஒப்பிக்க : இவற்றைச் சொந்தவாக்கியத்தில் அமைக்க.

## 10. நல்ல சமாரியன் உவமை

இயேசுநாதர் சமயவுண்மைகளை விளக்குவதற்கு அநேக உவமைகளைச் சொல்லியுள்ளார். அவைகளுட் சிறந்தது 'நல்ல சமாரியன் உவமை' ஆகும். உவமை என்பது இங்கு நீதிவிளக்கக் கதையைக் குறிக்கும்.

ஒருநாள் ஒரு யூதசமயப் பண்டிதன் இயேசுநாதரைக் குற்றத்தி னுட்படுத்தக் கருதி, "போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுதற்கு யாது செய்யவேண்டும்?" என்று வினவினான். நித்திய ஜீவன் என்பது தன் செயல்களெல்லாம் ஈசுவரன் நினைவானே நடக்குமாறு விட்டிருக்கும் ஜீவனாகும்.

பண்டிதன்வினவைக் கேட்ட இயேசுநாதர், "பிரமாண ஆகமத்தில் என்ன எழுதியிருக்கிறது?" என்றார். அதற்கு அவன், "கடவுளிடம் உன் முழு இருதயத்தோடும், உன் முழுஆத்மாவோடும், உன் முழுப்பலத்தோடும், உன் முழுமனத்தோடும் அன்பு வைத்து, நீ உன்னிடம் அன்புவைப்பதுபோலப் பிறனிடத்திலும் அன்பு வை என்று எழுதியிருக்கிறது" என்றான். "அப்படிச் செய்வாயானால் உஜ்ஜீவிப்பாய்" என்றார் இயேசுநாதர். அதற்குமேல், அவன் "பிறனுவான் யாவன்?" என்றான். அவர் "ஒரு மனிதன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும் வழியில் திருடர்வசம் அகப்பட்டான். அவர்கள் அவனுடைய ஆடைகளை உரிந்துகொண்டு அவனை யடித்துக் குற்-


ES

றுயிராகவிட்டு ஓடிப்போயினர். அவ்வழியே சென்ற ஓர் ஆசாரியன் அவனைப் பார்த்து, ஒரு பக்கமாய் விலகிப்போனான். ஒரு லேவியனும் அவ்வாறே செய்தான். பின்னர், அவ் வழியே சென்ற வியாபாரி-யான சமாரியன் ஒருவன் அவனை அணுகிக் கண்டு மனமுருகி, அவன் காயங்களில் எண்ணெயும் திராட்-சை ரசமும் வார்த்துக் காயங்களைக் கட்டினான்; பின்பு, தான் சவாரிசெய்துவந்த கழுதையின்மேல் அவனை ஏற்றிச் சத்திரத்திற்குக் கொண்டுபோய் அவ் விரா முழுதும் கண்விழித்திருந்து, வேதனை தணிவதற்கான சிகிச்சைகள் செய்தான். மறுநாள் இரண்டு தீநாரி-யத்தை (தீநாரியம் பாலஸ்தீனத்தில் வழங்கிய ஒரு நாணயம். அதன் மதிப்பு ஒரு பென்னி) எடுத்துச் சத்திரக்காரன்கையிற் கொடுத்து, "நீ இவனை நன்கு பராமரி. அதிகமாகச் செலவானால் நான் மீண்டுவரும்-போது அதனை உனக்குத் தருவேன்" என்று சொல்லிச் சென்றான். திருடரிடம் அடிபட்டவனை இம் மூவ-ருள் எவன் பிறனாகக் கருதினான்?" என்று வினவினார். சமாரியன் என்ற பெயரை வாயாற் சொல்லவும் மன-மில்லாதவனாய், "அவனுக்கு இரங்கினவனே" என்று யூதன் விடையிறுத்தான். அப்பொழுது அவர் "நீயும் அங்ஙனமே செய்" என்றார்.

பிறனாவான் ஓர் யூதனே என்பது அப்பண்டிதன்-கொள்கை. ஆதலின், "உனக்குப் பிறனாவான் வேறு ஜாதியான்; அல்லனேல் வேறு சமயத்தான்" என்று இயேசுநாதர் சொல்லியிருந்தால், அவன் வாதஞ்

செய்திருப்பான். அவர் இக் கதையைச் சொல்லியதனால், "நம் உதவியை நாடுகிற எவனும் நமக்குப் பிறன்" என்னும் உண்மையை அவன் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

எருசலேம் என்னும் நகர் பாலஸ்தீனம் என்னும் நாட்டிலுள்ளது. அது யூதருடைய புண்ணியஸ்தலம். யூதருடைய ஒரே ஆலயம் அங்கேதான் இருந்தது. எரிகோ என்னும் ஊர் அதற்குச் சிறிது தூரத்தில் உணவுப் பொருள் வசதியும் நீர்வசதியும் உடையதாயிருந்ததனால், ஆலய கைங்கரியக்காரர் அநேகர் அங்கு வாசஞ் செய்தனர். ஆதலால், நாள்தோறும் அவர்கள் அவ்வழியே போக்குவரவு உடையவராயினர். ஆசாரியர் ஆலய ஆராதனம், பலி, தூபம், நைவேத்தியம் முதலிய முக்கிய பணிவிடைகள் செய்பவர். லேவியர் பாட்டுக் கைங்கரியம், வெளிப்பிராகாரக் காவல், ஆலயசுத்தம் முதலிய பணிவிடைகள் செய்பவர்.

துன்பத்தில் இருக்கும் ஒருவனுக்கு உதவுவதனினும் ஈசுவரகைங்கரியமே பெரிதென்று ஆசாரியனும் லேவியனும் எண்ணினர். ஐயோ பாவம்! மனிதசேவையே ஈசுவரகைங்கரியம் என்பதை அவர்கள் உணர்ந்திலர்.

பிறர்துன்பங் கண்டு இரங்கி உபகரிப்பதன்றோ உயர்செயல்? அதனினும் சமயாசாரங்கள், அநுஷ்டானங்கள், வைதிகச் சடங்குகள் உயர்ந்தனவோ?

தொட்டுமுட்டு, கண்டுமுட்டு, மடியாசாரம் முதலியன மனிதரைப் பிரிக்குமே யொழிய, ஒன்றுசேர்க்க மாட்டா. பிறன் துன்பங் கண்டு இரங்கி யுபகரித்த சமாரியனே பரமபுருஷன். எளியவர்களை வயிற்றிலடித்தும் பகற்கொள்ளை யடித்தும் பொருளீட்டி, தேவேந்திரபோகம் அனுபவிக்கின்ற முதலாளிகளும் பிரபுக்களும் ஈசுவரகிருபைக்குப் பாத்திரர் ஆகார். இவர்கள் பிறருக்கு இரங்கினாலன்றோ, இவர்கட்கு இறைவன் இரங்குவான் !

' அருந்தவே கூழும் பூண
  ஆடையும் வீடும் இன்றி
வருந்துவோர் எண்ணி லார்நம்
  மருங்குளார் எனவ றிந்தும்
விருந்திடாய் ; மணிமாடத்து
  மேவிநீ யொருவன் வாழப்
பொருந்தினாய் ; மனமே, மக்கட்
  போலிநீ விலங்கா னாயே.

ஏவல்செய் வோர்க்குக் கூலி
  இடைத்துகில் உணவாம் ; யாமோர்
காவல லெனினும் சோறு
  கலையன்றி ஒன்றும் காணோம் ;
ஆவலாய்ப் பொருளை யீட்டி
  அயலவர்க் காச் சுமந்தோம் ;
ஈவதை மேற்கொண் டோமேல்
  இணையில்வீ டடைவோம் நெஞ்சே.

என்னுஞ் செய்யுட்கள் கருதத்தக்கன.

இக் கதையில் அடிபட்டவன்குலம் கூறப்படவில்லை. அதனால் விளங்கும் உண்மை யாதெனில், நம் உதவியை நாடுபவர் யாவராயினும் அவருக்கு நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும் என்பதேயாகும்.

"மனித ஜாதியினரான ஜனங்களெல்லாரையும் அவர் ஒரே இரத்தத்தினாலேயே தோன்றுவித்துப் பூமியின்மீது எங்கும் குடியிருக்கச் செய்தார்" என்பது விவிலிய வாக்கு.

ஆதலால் கூலிவேலைக்காரர், இழிதொழில்புரிவோர், புறக்கணிக்கப்பட்டவர் ஆகிய இவர்களும், ஆசாரியர் முதலியவர்களும் ஒரே இரத்தத்தில் தோன்றுவிக்கப் பட்டவர்களே என்பதை உளங்கொள்ளவேண்டும்; கடவுளைத் தரிசிக்கவேண்டுமாயின், நாம் நம்மை எவ்வளவு தாழ்த்திக்கொள்ள வேண்டும் என்பதை நினைக்கவேண்டும்.

மேற்கூறிய கதையினால், கடவுள்பால் வைக்கும் அன்பினையும், மனிதர்பால் வைக்கும் அன்பினையும் நிரூபிப்பது மனிதசேவையே என்னுஞ் சிறந்த உண்மையை இயேசுநாதர் விளக்கியிருக்கின்றார்.

## அருஞ்சொற்பொருள்

| | |
|---|---|
| பராமரித்தல்-பேணிக்காத்தல். | அருந்த-உண்ண. |
| கைங்கரியம்-பணிவிடை. | கலை-உடை. |
| தொட்டுமுட்டு-(பிறரைத்) தொடுவதனால் வருந் தீட்டு. | அயலவர்-பிறர். |
| | இணை-சமானம், ஒப்பு. |

## வினாக்கள்

1. கள்ளரிடம் அடிபட்டுக் கிடந்தவனைக் கண்ட ஆசாரிய னும் லேவியனும் விலகிப்போய்விட்டது ஏன் ?
2. சமாரியனது நற்குணத்தைத் தெரிவிக்க.
3. 'எரிகோ' என்னும் ஊரைப்பற்றி அறிந்ததைச் சொல் லுக.
4. கடவுள் மனிதஜாதியினரெல்லாரையும் ஒரே இரத்தத் தால் தோற்றுவித்தார் என்னும் வாக்கியத்தினால் அறியவேண்டும் நீதி யாது ?

## பயிற்சி

1. அவ்வழியே சென்ற ஓர் ஆசாரியன் அவனைப்-பார்த்து ஒரு பக்கமாய் விலகிப்போனான். ஒரு லேவிய னும் அவ்வாறே செய்தான்.

இவற்றை ஒரு வாக்கியம் ஆக்குக.

2. 'பிறர்துன்பங் கண்டு இரங்கி உபகரிப்பதன்றோ உயர்செயல் ?'

இதைச் செய்தி வாக்கியமாக்குக.

3. 'இக்கதையில் அடிபட்டவன் குலம் கூறப்பட வில்லை.'

இதைச் செய்வினை வாக்கியம் ஆக்குக.

4. உருகி, ஒழிய, பாத்திரர், யாவராயினும் : இவற்றைச் சொந்தவாக்கியத்தில் அமைக்க.

## 11. சர்க்கரைத் தொழில்

மக்கள் உட்கொள்ளும் பொருள்களின் சுவைகள் கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு என்று அறுவகைப்படும். 'அறுசுவை உண்டி' என்பது நாலடி. சுவைகள் ஆறனுள் உயிர்களெல்லாம் மிக விரும்புவது இனிப்புச்சுவையே.

இனிப்புச்சுவை காய், கனி, கிழங்கு, தேன், கரும்பு முதலிய பல பொருள்களில் இயற்கையாய் அமைந்திருக்கின்றது. இனிப்புப் பொருள்கள் பல்வேறு உருவத்தையும், நிறத்தையும்; பெயர்களையும் பெற்று வேறுபட்டிருப்பினும், அவற்றில் நுகரப்படும் இனிப்புச்சுவையின் இயல்பு ஒன்றே. அச்சுவையை அளிக்குஞ் சர்க்கரை உடல்வளர்ச்சிக் குரிய பொருள்களுள் ஒன்று. ஒரு 'பவுண்டு' சர்க்கரையில் 1820 'காலரி' அளவு உடல்வளர்க்குஞ் சக்தி உளது என்று கணக்கிட்டுள்ளனர்.

சர்க்கரை பெரும்பாலும் தாவரப்பொருள்களிலிருந்தே எடுக்கப்படுகிறது. அவற்றுள் முக்கியமானவை கரும்பும், 'பீட்' என்னும் கிழங்குமே யாகும். மற்றவை இவ்விரண்டினைப்போல் அதிக அளவுச் சர்க்கரையைத் தாராததனால், மக்கள் இவ்விரண்டையுமே பயிரிடுகின்றனர். இவ்விரண்டனுள்ளும் முதன் முதல் கரும்பிலிருந்தே சர்க்கரை எடுக்கப்பட்டது. பனங்கருப்பட்டியையும் வெள்ளைச் சர்க்கரை

யாகச் செய்வதுண்டு. கரும்பு முதன்முதலில் இந்தியாவில் பயிரிடப்பட்டு, பின்னர் வெளிநாடுகளிலும் பரவிற்று. கரும்பு உஷ்ணமண்டலத்துப் பயிர். கரும்பு பயிரிடுவதற்கு ஏற்ற இடம் இந்தியா, கிழக்கு இந்தியத் தீவுகள், கியூபா, ஹவாய் போன்ற உஷ்ணமண்டல நாடுகளேயாகும். இது குளிர்நாடுகளில் பயிராகாது. கரும்பு நன்செய்வகையைச் சார்ந்தது. நீர்வளமும் நிலவளமும் மிக்குள்ள நாட்டிலேயே இது நன்கு வளரும். இதன் வளர்ச்சிக்கு 40 அங்குலத்துக்கு மேற்படாமல் மழை பெய்வது நலம். மழை மிகுதியாயின் கரும்பில் சாறு மிகும்; ஆனால் சர்க்கரைப் பொருள் குறையும்.

முற்றிய கரும்பைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி, ஒன்றிரண்டு கணுக்கள் நிலமட்டத்துக்கு மேல் தெரியுமாறு நிலத்தில் நட்டு, வாரம் இருமுறை பாத்திகள்நிறைய நீர்பாய்ச்சிவரவேண்டும். நிலத்தின்மேலுள்ள கணுக்களில் தளிர்கள் தோன்றித் தழைக்கும். கரும்பின் தோகைகள் கூர்மையவாய், சுரசுரப்புடையனவாய், தருப்பைப்புல்லைப்போல அறுக்கக் கூடியவையாயிருக்கும். கரும்பு பத்துப் பன்னிரண்டு அடி வரை உயர்ந்து வளரும். அது சாற்றை நிறைய அளிக்கவேண்டுமாயின், ஏறக்குறைய ஓராண்டு வளர்ந்து முதிரவேண்டும்.

முற்றிய கருப்பங்கழிகளை வெட்டித் தழைகளைக் கழித்து விடுவர். பின்னர் அக் கழிகளைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கரும்பாலைச்சக்கிரத்தில்



கொடுப்பர். அது அவற்றை நசுக்கிச் சாறுவேறு சக்கை வேருகப் பிரிக்க, சாறெல்லாம் ஒரு குழாய்வழியாக ஓடி வாயகன்ற பாத்திரம் ஒன்றில் விழும். அச் சாறு தூய்மையுடையதன்ருதலின், மங்கலான மஞ்சள்நிற முடையதாய் இருக்கும். அதிலுள்ள தூசு தும்புகளை நீக்குதற்கு வடிகட்டுவர்.

பின்னர், அவ் வடிகட்டின சாற்றை ஒரு பெரிய மிடாவில் ஊற்றிக் காய்ச்சுவர். அப்பொழுது அச் சாற்றில் உள்ள திரவப்பொருள் ஆவியாய் மாறி விட, திடப்பொருள் கீழே தங்கும். அதுவே சர்க்கரை யாகும். அச் சர்க்கரையை இளக்கி, சுண்ணும்புநீ-ருடன் கலந்து வடிகட்டின், அசுத்தப் பொருள்க-ளெல்லாம் சுண்ணும்புடன் ஒட்டிக்கொண்டு மேலே தங்கிவிடும். பின்னர், அதனை மீண்டும் காய்ச்சி நீரை வற்றச் செய்து, அச் சர்க்கரைப்பாகினைப் பெரிய தட்டுக்களில் பரப்பி உலரவைப்பர்.

இவ்வாறு சர்க்கரை தூய்மைப்படினும் அது தூய வெண்ணிறத்தை அடைவதில்லை. அதனுல் அச் சர்க்கரையை மற்றும் ஒரு முறை நீருடன் கலந்து, எலும்புத்தூள்களைச் சேர்த்து வடிகட்டி மீண்டும் காய்ச்சி வெள்ளைச்சர்க்கரை ஆக்குவர்.

சர்க்கரைப்பாகைக் கட்டியாக்கி வெல்லமாக்கு-வதும் உண்டு. அப் பாகினை மரவச்சுக்களில் ஊற்றி ஞல், அது அச்சின் உருவத்தைப் பெற்று, ‘அச்சு வெல்லம்’ என்று வழங்கப்படும். சர்க்கரை—பழுப்-

புச்சர்க்கரை, வெள்ளைச்சர்க்கரை, அஸ்கா முதலாக பலவகைப் படும். சர்க்கரையிலிருந்து கற்கண்டைச் செய்வர்.

நம் நாட்டில் திருவெண்ணெய்நல்லூர், இராஜ மஹேந்திரவரம், பீமன்பட்டனம், அஸ்கா முதலிய நகரங்களிலும், மைசூர்நாட்டில் அஷ்டக்ராமம் என்னும் ஊரிலும் ஆலைகள் அமைத்துச் சர்க்கரை செய்கின்றனர்.

கருப்பங்கொல்லையிலேயே ஆலைகளை அமைத்து இக் கைத்தொழிலைச் செய்வர். அது எளிது ; அதிகச் செலவின்றி நடைபெறுவது. அதனல் பயிர்த்தொழில் செய்யும் கிராமமக்களுக்கே மேலும் வருவாயை அளித்து உதவலாம். பெரிய எந்திர ஆலைகளை அமைத்து இத் தொழிலைச் செய்வதும் உண்டு. நெல்லிக்குப்பம் முதலிய ஊர்களில் இத்தகைய ஆலையை அமைத்துள்ளனர்.

பெரும்பாலும் மார்கழிமாதக் கடைசியில் கரும்பை வெட்டிப் பொங்கற்பண்டிகைநாளில் அதனைக் கடவுளுக்குப் படைப்பர் ; சர்க்கரைப் பொங்கலைச் சமைத்துப் படைத்து உணடு மகிழ்வர். கரும்பின் மேற்பட்டையைச் சீவிவிட்டு, பல துண்டுகளாக நறுக்கிக் கறித்துச் சுவைத்து இன்புறுவர். அவ்வாறு உண்பது இயற்கைமுறைப்படி உடல்நலம் தருவதாகும் என்று கூறுவர். யானைக்குக் கழையை முறித்துத் தின்பதில் விருப்பம் அதிகம்.

"சீனர் கி. மு. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் கரும்பைப்பற்றி அறிந்தனர். மகா அலெக்ஸாண்டர் இந்தியாவுக்கு வந்தபோது கரும்பைப்பற்றி அறிந்தாராயினும், கி. பி. 1000-க்குப் பிறகே ஐரோப்பியர் அரேபியர்மூலம் கரும்பைப்பற்றி நன்கு அறிந்தனர். அவ் வரேபியரோ எனின், பாரசீகரிடமிருந்தும் இந்தியரிடமிருந்தும் அதைப்பற்றி அறிந்தனர்" என்பர் ஓரறிஞர். வெனிஸ்நகரவணிகர் இந்தியச் சர்க்கரையையும் வாசனைத் திரவியங்களையும் விற்றே பெரும்பொருள் ஈட்டினர்.

மேல்நாட்டாருக்குக் கரும்புச்சர்க்கரை கிடைத்தற்கரிய பொருளா யிருந்தமையின், அதனை முதன்முதல் மருந்துக்குமட்டுமே பயன்படுத்தினர். சென்ற நூற்றாண்டுமுதல்தான் அது உணவுப் பொருள்களுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. அதனால் அச் சர்க்கரைத்தொழிலில் சம சீதோஷ்ண மண்டலத்தில் வாழும் மேல் நாட்டாருக்கும் உஷ்ண மண்டலத்தில் வாழும் கீழ்நாட்டாருக்கும் இடைவிடாத போட்டி ஏற்பட்டது.

அமெரிக்க ஐக்கியநாடுகளில் குடியேறிய வெள்ளையர் 'மெபில்' (Mable) என்னும் ஒருவகை மரத்திலிருந்து சாற்றை யிறக்கிச் சர்க்கரை காய்ச்சக் கற்றனர். மத்திய ஐரோப்பாவின் ஒருபகுதியாகிய 'ஸைலீஷியா'வில் மாடுகள் ஒருவகைக் கிழங்கை மிக்க ஆவலுடன் தின்பதை மக்கள் கண்டனர். அக் கிழங்கே 'பீட் ரூட்' என்பது. மேல் நாட்டில் கி. பி.

1802-இல் 'ஆர்சர்ட்' என்னும் பிரெஞ்சுக்காரரே முதன்முதல் 'பீட்' கிழங்கிலிருந்து சர்க்கரை செய்யத் தொடங்கினர். கி. பி. 1806-இல் நெப்போலியன் கரும்புச்சர்க்கரை வியாபாரத்தைத் தடைசெய்ததனால் ஆங்கில வர்த்தகர் அதனைப் பிரெஞ்சு நாட்டில் சில ஆண்டுகள்வரை விற்க இயலவில்லை. அரசனது ஆதரவைப்பெற்ற 'பீட்' சர்க்கரைத்தொழில் மிக்க வளர்ச்சி பெற்றது.

'பீட்' கிழங்கில் நூற்றுக்கு நான்கு விகிதமே சர்க்கரைப் பொருள் இயல்பாகக் காணப்பட்டது. ஆயின், இரசாயன ஆராய்ச்சியின் பயனாக இருபது சதவிகிதம் சர்க்கரைப்பொருள் கொண்ட பீட் பயிரிடப்பட்டது. கரும்பிலுள்ள விகிதத்திலும் சிறிது அதிகமாகவே 'பீட்'டில் சர்க்கரை அமைந்துளது. அது சமசீதோஷ்ண மண்டலத்திலேயே பயிராகும். அதனால், அமெரிக்க ஐக்கியநாடுகளிலும் ஜெர்மனியிலும் 'பீட்' சர்க்கரைத்தொழில் அதிகம் நடைபெறுகின்றது.

'பீட்' கிழங்குகளைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி, கொதித்துக்கொண்டிருக்கும் வெந்நீரையுடைய கலங்களில் போட்டு மூடிவிடுவர். கிழங்கின் ரஸம் வெந்நீருக்குள் இறங்கும். பல கலங்கள் ஒன்றுக்கொன்று அண்மையில் வட்டமாக அமைக்கப்பட்டிருக்கும். எல்லாப் பாத்திரங்களும் அடியில் ஒரு குழாயால் இணைக்கப்பட்டிருக்கும். ஒரு பாத்திரத்திலுள்ள கிழங்கிலிருந்து சாறுமுழுதும் வெந்நீரில்

இறங்கியவுடன், அந்நீரை மற்றொரு பாத்திரத்தில் அக் குழாய்வழியாகச் செல்ல விடுவர்; இவ்வாறே எல்லாக் கலத்திலும் உள்ள கிழங்குகளிலிருந்தும் சாற்றை இறக்குவர். பின்னர், கருப்பஞ்சாற்றை வடிகட்டிக் காய்ச்சிச் சர்க்கரை எடுப்பதுபோல், அதிலிருந்து சர்க்கரை செய்வர். 'பீட்' கிழங்கின் சாற்றில் அசுத்தப்பொருள்கள் அதிகமா யிருக்கு-மாதலின், அச் சர்க்கரையை நன்றாகச் சுத்தஞ்செய்த பின்னரே உபயோகப்படுத்தலாம்.

கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதிய-மானின் முன்னோர்கள் கரும்பைத் தேவருலகினின்றும் இங்குக் கொண்டுவந்தனரென்று தமிழ்ப் பழம்பாட்டு ஒன்று கூறும். 'அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தி-யும், அரும்பெறன் மரபின் கரும்பிவண் தந்தும்' என்-பது அறிக. கரும்பின் எந்திரத்தைப்பற்றிய குறிப்பும் பழம்பாட்டில் காணப்படுகின்றது. இவற்றால் கருப்-பஞ்சர்க்கரை செய்யுந் தொழில் தமிழ்நாட்டுப் பண்டைத்தொழில்களுள் ஒன்று என்று நன்கு உணரலாகும்.

சர்க்கரை, வெல்லம், கற்கண்டு முதலியவற்றைத் தனியேயும், உணவுப்பண்டங்களிற் சேர்த்தும் உண்பர். காபி, தேநீர், கோக்கோ முதலிய பானவகைகளுக்கு இது இன்றியமையாதது. பாயசம், பொங்கல், லட்டு முதலிய உணவுவகைகளுக்கும் சர்க்கரை வேண்டும்.

## அருஞ்சொற்பொருள்

கைப்பு-கசப்பு.

ஆலை-எந்திரம்.

கழை-கரும்பின்கோல்

ரஸம்-சாறு

ஆவுதி-யாகத்தில் இடும் நெய் முதலியன.

இவண்-இவ்வுலகத்தில்

## வினாக்கள்

1. கரும்பு பயிரிடுவதற்கு ஏற்ற இடம் யாவை ?
2. கரும்பைப் பயிரிடும் முறையை எழுதுக.
3. கருப்பஞ் சாற்றை எடுக்கும் முறை யாது ?
4. கருப்பஞ்சாற்றைச் சர்க்கரையாக்கும் முறை தெரிவிக்க.
5. "பீட்" என்னும் கிழங்கிலிருந்து சர்க்கரை செய்வது எப்படி ?
6. சர்க்கரைத் தொழில் தமிழ்நாட்டில் பண்டைத் தொழில் என்பதை எதனால் அறியலாகும் ?

## பயிற்சி

1. பனஞ்சாற்றைக் கருப்பட்டியாக்கும் முறையை அறிந்து எழுதுக.

2. பாத்தி, நறுக்கி, ஊற்றி, காய்ச்சி, வடிகட்டி, முறித்து :

இவற்றைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க.

3. 4, 5-ஆம் பத்திகளில் கூறப்பட்டுள்ள செய்தி என்ன ?

4. 'மழை மிகுதியாயின் கரும்பில் சாறு மிகும் ; ஆனால் சர்க்கரைப் பொருள் குறையும்.'

இது என்ன வாக்கியம் ?

5. எல்லாக் கலத்திலும் உள்ள கிழங்குகளிலிருந்தும் சாற்றை இறக்குவர்.

இதைச் செயப்பாட்டுவினை யாக்குக.



## 12. மாஹாமஹோபாத்யாய, டாக்டர், வே. சாமிநாதையர்

தமிழ்மொழியில் பன்னூறு ஆண்டுகளுக்குமுன்னர், புலவர் பலரால் இயற்றப்பட்ட செய்யுட்கள் பல உள்ளன. அவற்றின் பின் தோன்றிய சிலப்பதிகாரம் முதலிய காவியங்கள் சில உள. அவை தமிழ்நாட்டின் வரலாறுகளை அறிதற்குச் சிறந்த கருவிகளாய் இருக்கின்றன. இத்தகைய சிறப்புவாய்ந்த அச் செய்யுட்களெல்லாம் பிற்காலத்தில் படிப்போரில்லாததனுல் அழிந்தும் சிதைந்தும் சீர்கேடுற்றிருந்தன. அவ்வாறிருந்த செய்யுட்களைத் தேடிக் கண்டு பிடித்து எல்லாரும் படிக்கத்தக்க முறையில் அச்சிட்டு உதவியவர் மகாமகோபாத்யாய, டாக்டர், சாமிநாதையரவர்களே. ஐயரைத் தமிழறிஞர்கள் நன்கு அறிவார்கள்; பிறஅறிஞரும் அவருடைய பெருமையை ஒருவாறு அறிவார்கள்.

சோழநாட்டில் கும்பகோணத்துக்கு மேற்கில் உள்ள உத்தமதானபுரத்தில் வேங்கடசுப்பையர் என்பவருக்குப் புதல்வராக 1855-ஆம் ஆண்டு பிப்ரவரிமாதம் 19-ஆந் தேதியில் நம் ஐயர் பிறந்தார். அவர் இளமையில் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடத்தில் படித்துவந்தார். அதனேடு தம் தந்தையாரிடத்தில் நிகண்டு, சதகம் முதலிய நூல்களையுங் கற்ருர்; தந்தையார் இசையில் தேர்ந்தவராதலின் அவரிடத்தில் சங்கீதமும் பயின்ருர்.

பின்னர் ஐயர் தமிழ்நூல்களில் ஆர்வங்கொண்டு அரியலூர் சடகோப ஐயங்காரிடம் சில பிரபந்தங்களைப் படித்தார்; அதன்பின் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் இலக்கண நூல்கள் சிலவற்றைப் பாடங்கேட்டார்.

வேங்கடசுப்பையர், மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் புலமையை யறிந்து, தம் புதல்வரை உடன்கொண்டு சென்று அவரிடம் தம் கருத்தைத் தெரிவித்தார். அவர் சிறுவரின் கல்வியறிவை யறிந்து மகிழ்ந்து ஒரு நல்ல நாளில் பாடங் கற்பித்தார். ஐயரும் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் கற்றுவந்தார்.

அக்காலத்தில் ஐயர் அங்கிருந்த கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இசை பயின்றுவந்தார். பின்னர் அதனை நிறுத்திவிட்டு, தமிழையே கற்க ஆர்வங்கொண்டது தமிழ்மொழி செய்த தவப்பயனாயிற்று.

ஐயர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் ஆறு ஆண்டுகள் தமிழ்நூல்களைக் கற்றார்; பின்னர், ஆசிரியர் சிவபதமடைந்ததனால், திருவாவடுதுறைமடாதிபதிகளான சுப்பிரமணியதேசிகரிடம் பாடங்கேட்டும், மற்றையோர்க்குப் பாடஞ் சொல்லியும் வந்தார். அதனால் அவர்கல்வி நிரம்பியது.

கும்பகோணங் கல்லூரியில் தமிழாசிரியராயிருந்த தியாகராஜ செட்டியார் 1880-ஆம் ஆண்டில் தம் பதவியிலிருந்து விலகியபோது, நம் ஐயரை அப்

பதவியில் அமர்வித்தார். ஐயர் அங்கு ஆசிரியராய் இருந்த காலத்தில் பழைய தமிழ்நூல்களை ஆராய்ச்சி செய்துவந்தார். அப்பொழுது சேலம் திரு. இராமசாமி-முதலியாரின் வேண்டுகோளின்படி சீவகசிந்தாமணி என்னும் பெருங்காவியத்தைப் பதிப்பிக்கத்தொடங்கி, அதில் நேர்ந்த துன்பத்தைப் பொருட்படுத்தாது, ஊக்கத்தோடு வேலைசெய்து, 1887-இல் அதனை வெளியிட்டார்; பின்னர், அவ்வாறே ஒவ்வொரு பழைய நூலையும் ஆராய்ந்து, தக்க ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு வெளியிட்டுவந்தார். அதனால் அவருடைய புலமையும் திறமையும் நாட்டில் பரவின. தமிழறிஞர்கள் அவரைப் பாராட்டினர்; தமிழ்ப்-பற்றுள்ள பெருஞ்செல்வர் ஆதரித்தனர். இவை ஐயருக்கு மேலும்மேலும் ஊக்கத்தை மிகுவித்தன.

ஐயர், 1903-ஆம் ஆண்டில் சென்னை நகர அரசாங்கக் கல்லூரியில் தமிழாசிரியராக நியமனம் பெற்று வேலை பார்த்துவரும்பொழுது, அங்கிருந்த பேராசிரியர் பூண்டி, அரங்கநாத முதலியாரின் பேரன்பும் நன்மதிப்பும் பெற்றார். 1905-இல், சென்னை யரசாங்கத்தார் அவருக்கு ஆயிரம் ரூபாய் சம்மானம் செய்தனர். 1906-ல் மகாமகோபாத்தியாயர் என்னுஞ் சிறப்புப் பட்டம் அவருக்கு அளிக்கப் பட்டது. அதுவரை நாட்டுமொழிப் புலவர் எவருக்-குமே அப் பட்டம் கொடுக்கப்படவில்லை. அதனால் ஐயரைத் தமிழறிஞர் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

1918-இல் தமது முதுமை காரணமாகக் கல்லூரியிலிருந்து விலகியபின், நம் ஐயர் தமிழ்நூல்களைப் பதிப்பதிலேயே காலம் முழுவதையும் பயன்படுத்தி வந்தார்.

1924-இல் சிதம்பரத்தில் அண்ணாமலைச்செட்டியாரால் நிறுவப்பட்ட தமிழ்க்கல்லூரியில், செட்டியாரின் வேண்டுகோளுக் கிணங்கி, தலைமையாசிரியர்-பதவி யேற்று, மூன்று ஆண்டுகள் சிறப்புடன் அதை நடத்திவந்தார். 1925-இல் மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில், டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரின் முயற்சியினால் தமிழறிஞர்கள் ஐயருக்கு ஐயாயிரம் ரூபாய்ப் பொற்கிழி நல்கிப் பாராட்டினர். அவ்வமயம் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஐயருக்குத் தாட்சிணாத்ய கலாநிதி என்னும் பட்டம் நல்கிச் சிறப்பித்தார்கள். 1927-ம் ஆண்டின் தொடக்கத்தில் சிதம்பரக் கல்லூரியிலிருந்து விலகி, ஐயர் சென்னையில் தம் இல்லத்தில் வாழ்ந்துவந்தார்.

1932-இல் சென்னைப் பல்கலைக்கழகத்தார் ஐயருக்கு டாக்டர் என்னும் பட்டத்தை நல்கிக் கௌரவித்தனர். பின்னர் 1935-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டுவிழாவை, சென்னைவாசிகள் மிக்க சிறப்புடன் நடத்தி, அவருக்கு மூவாயிரம் ரூபாய் அளித்துப் பாராட்டினர். அப்பொழுது வந்திருந்த அன்பர் ஒருவரின் வேண்டுகோளின்படி ஐயர் தமது சரித்திரத்தை 'ஆனந்தவிகடன்' பத்-

திரிகையில் எழுதிவந்தார். ஆனால் அது முற்றுப் பெறாதது தமிழ்மக்களின் துரதிர்ஷ்டமேயாகும். ஐயர் தம் வாழ்நாளின் பிற்பகுதியில், பல பெரியோர்களின் சரித்திரம் முதலியவற்றைச் சொல்லி, அவற்றை எளிய நடையில் எழுதுவித்தார். அவை யாவும் மாணாக்கர்களுக்கு நல்லறிவைப் புகட்டுவனவாகும்.

நம் ஐயர் சலியாத உழைப்பும் தளராத ஊக்கமும் உள்ளவர்; குறித்த தொழில்களைத் தவறாமல் நாள்தோறும் நடத்திவருபவர்; சில மணி நேரம் பழைய நூல்களைப் படிப்பார். பாடஞ்சொல்லும் நூல்களை முன்பு பன்முறை படித்திருப்பினும், அப்பொழுதும் ஒருமுறை படிப்பது அவர்வழக்கம். அவர் மாணாக்கருக்கு உற்சாகம் உண்டாகும்படி நயமாகப் பொருள்விரித்துப்பாடஞ் சொல்வார்; சிறிது கற்றவர்களையும் பாராட்டி ஊக்கம் அளிப்பார்; தீங்கு செய்தவருக்கும் நன்மையே செய்வார்; தமக்குப் பிறர் செய்த சிறு உதவியையும் மறக்கமாட்டார்; தாம் அறிந்த பெரியோர்களின் செயல்களைப் பலரிடத்தும் பாராட்டிக் கூறுவார்; குருபக்தியில் தலைசிறந்தவர். ஒருகால், சோழவந்தான் பெரும்புலவர் சண்முகம்பிள்ளை தமக்கு நல்கிய பொருளைத் தம் ஆசிரியரின் புதல்வரிடத்தில் கொடுத்து மகிழ்வுற்றார். தம்மைச் சார்ந்தவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் ஐயருக்கு நிகரானவர் யாருமே இல்லை. ஐயர் ஏழைகளிடத்தில் மிக்க இரக்கமுள்ளவர்; எல்லாரிடத்தும் இனிமையாகப் பேசுபவர்; தெய்வபக்தி மிக்கவர்;

136120

இரவில் நெடுநேரம் தியானம்செய்துகொண்டிருப்பார்.

தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்த்தொண்டே செய்துவந்த நம் ஐயர் 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் 28-இல் உலகவாழ்வினை நீத்து மேலுலகம் அடைந்தார். அவர்பிரிவு தமிழ்மொழிக்கு ஈடுசெய்ய முடியாத பெருங்குறையே.

தமிழ்மக்கள் ஐயரின் பெருந்தொண்டினைப் பாராட்டி, அவர்புகழ் என்னாளும் நிலைநிற்கும்படி, 1948-இல் அவருடைய உருவச்சிலையை நிறுவியுள்ளனர். அது அவர் ஆசிரியராயிருந்து விளங்கிய சென்னைநகர ஆசாங்கக் கல்லூரியில் பலரும் காணத்தக்க இடத்தில் வைக்கப்பட்டுளது.

நம் ஐயரைப்போல நிறைந்த தமிழ்ப்புலமையும் சிறந்த பணியாற்றுதற்கு ஏற்ற பெருந்திறனும் உடையவர் இனித் தோன்றப்போகின்றார்களா !

### அருஞ்சொற்பொருள்

ஆர்வம்-விருப்பம்.
சம்மானம்-வெகுமதி.
பொற்கிழி-பணமுடிப்பு.
தாக்ஷிணாத்ய கலாநிதி-தென்திசைமொழியின் கலைக்கு நிதி.

### வினாக்கள்

1. ஐயர் தமிழ்மொழிக்குச் செய்த நன்மை யாது ?
2. ஐயர் முதன்முதலில் பதிப்பித்த நூல் எது ?

3. ஐயருக்குக் கிடைத்த பட்டப் பெயர்கள் யாவை? அவற்றை நல்கியவர் யாவர்?

4. ஐயரது எண்பதாம் ஆண்டு விழாவைக் குறித்து எழுதுக.

5. ஐயர் பாடஞ்சொல்லும் முறையைத் தெரிவிக்க.

6. சோழவந்தான் சண்முகம்பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், T. C. ஸ்ரீநிவாஸையங்கார்: இவர்களைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

## பயிற்சி

1. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை ஐயருக்கு ஒரு நல்ல நாளில் பாடங்கற்பித்தார். தியாகராஜ செட்டியார் தம் பதவியில் ஐயரை அமர்வித்தார்.

2. இவை ஐயருக்கு மேலும்மேலும் ஊக்கத்தை மிகுவித்தன.

இவ் வாக்கியங்களைத் தன்வினை வாக்கியங்க ளாக்குக.

1. அரசாங்கத்தாரால் 'மகாமகோபாத்தியாயர்' என்னும் பட்டம் ஐயருக்கு அளிக்கப்பட்டது.

2. அண்ணாமலைச் செட்டியாரால் தமிழ்க்கல்லூரி நிறுவப்பட்டது.

இவற்றில் செயப்பாட்டுவினையைச் செய்வினை ஆக்குக.

## 13. வானொலி

இந்த நூற்றாண்டு மின்சார காலம். மக்கள் மின்சாரத்தை எத்தனை வகையில் உபயோகித்துக்கொள்ள இயலுமோ, அத்தனை வகையிலும் உபயோகித்து-வருகின்றனர்.

வானவெளியில் பரவிவரும் ஒளியைத் தக்க மின்சாரக் கருவிகளைக்கொண்டு கேட்கின்றோம். ஆதலால் அதனை ' வானொலி ' அல்லது ரேடியோ (Radio) என்று வழங்குகின்றோம். இக்காலத்தில் ரேடியோவை அறி-யாதவர் சிலரே இருப்பர்.

வானொலியின் மூலமாக நிகழ்ச்சிகளை நடத்து-வதன் முக்கிய நோக்கம் ஜனங்களுடைய மனக்கவலை-களை நீக்குதலும், இடையிடையே அவர்களுக்குப் பல விஷயங்களைப்பற்றிய அறிவைப் புகட்டுதலும் ஆகும்.

வானொலியில் தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. நகரவாசிகளுக்கும் கிராமவாசி-களுக்கும், முதியருக்கும் இளைஞருக்கும், ஆடவருக்-கும் பெண்டிருக்கும், மதப்பற்றுள்ளவருக்கும், விஞ்-ஞானம் பொருளாதாரம் முதலிய பற்பல அறிவுத்-துறைகளிலும் பிற துறைகளிலும் கருத்துள்ளவர்க-ளுக்கும், மாணுக்கர்களுக்கும் தொழிலாளர்களுக்கும்,

வியவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பயன்படுமாறு விஷயங்களைப் பகுத்து, தக்கவரைக்கொண்டு அவ் விஷயங்கள் ஒலிபரப்பச் செய்கின்றனர்.

வானவெளி முழுவதும் எத்தனையோ கோடிக்கணக்கான ஒலியலைகள் இங்கும் அங்குமாகக் குறுக்கிட்டு வலையைப்போலப் பின்னிக் கிடக்கின்றன. அவை நம்முடைய சாமானியக் காதுகளுக்குக் கேட்பதில்லை. ஆயினும், அவை வானவெளியில் சஞ்சரித்தவண்ணமாகவே இருக்கின்றன. அமைதியுடையதாய்த் தோன்றும் வானவெளி உண்மையில் அமைதி உடையதன்று. எப்பொழுதும் சலனம் உடையது; இப்படிப்பட்ட வானவெளியில் 'ஈதெர்' என்பது நிறைந்திருக்கிறது என்று விஞ்ஞானிகள் சொல்லுகின்றனர்.

பக்தன் தெய்வத்தை வருணிக்கிறதுபோலவே இக்காலத்து விஞ்ஞானிகள் ஈதெர் என்பதை வருணிக்கிறார்கள். எங்கும் நிறைந்திருப்பதாயும், யாவற்றையும் எளிதில் ஊடுருவிச்செல்ல வல்லதாயும், நுண்ணினும் நுண்ணியதாயும் உள்ள ஈதெர்தான் வானொலியின் வாகனம். அது நம் பேச்சில் ஏற்படும் ஒவ்வோர் ஒலிமாறுபாட்டையும், இழுப்பு, துடிப்பு, எடுத்தல், படுத்தல் முதலிய ஓசைவேறுபாடுகள் எல்லாவற்றையும் தன்மீது ஏற்றிக்கொண்டு நாற்புறமும் சென்று பரப்புகிறது.

விஞ்ஞானிகள் தங்கள் உழைப்பாலும், விடாமுயற்சியாலும் இப்போது ஈதெர்அலைகளைத் தம்

இஷ்டம்போல் உண்டாக்கக் கற்றிருக்கின்றனர். ஒலிகளை ஈதெரில் உண்டாகிப் பரவும் ஈதெர்அலைக-ளாக மாற்றுவதற்கும், அப்படி உண்டாகிய அலை-களைப் பரவச்செய்வதற்கும், அவற்றைப் பிறஇடங்-களில் ஏற்பதற்கும், ஒலியலைகளாக மீண்டும் அவற்-றை மாற்றுவதற்கும் வேண்டிய கருவிகளை அமைத்-திருக்கின்றனர்.

பேச்சையும், பாட்டு முதலியவற்றையும் திறந்த-வெளிகளிலிருந்து 'ஒலிபரப்புதல்' செய்வதில்லை. ஏனெனில், பக்கத்தில் நாய்குரைப்பது, பறவை ஒலிப்-பது, கழுதை கத்துவது, நரி ஊளையிடுவது முதலிய ஒலி பரப்பப்பட்டு, இடையூறு விளைவிக்கும். ஆதலின், பிறஒலி கலப்பதற்கு இடமில்லாத தனியறையில் இவ் வகை 'நிகழ்ச்சி'களை நடத்துவர். இவ் வறை 'நிகழ்ச்சியறை' (Studio) எனப்படும்.

நிகழ்ச்சியறையில் வெளியொலி உள்ளே புகா-திருக்கத் தக்க ஏற்பாடு செய்திருப்பர். அங்கு ஜன்-னலே இருக்காது. கரும்புச்சக்கையோடு வேறு சில பொருள்களையும் சேர்த்து இறுக அழுத்திப் பலகை-யாகச் செய்து, அப்பலகையால் உட்புறச்சுவரை மறைத்திருப்பர். நிலைகளில் இடைவெளி இல்லாதபடி கதவை நன்றாகப் பொருத்தி, நன்கு படிந்து சார்த்தும்-படி அமைத்திருப்பர். ஆதலின், வெளியிலிருந்து சிறுகாற்றும் உள்ளே புக முடியாது. தரையில் கனத்த இரத்தினகம்பளங்கள் விரித்திருக்கும். உள்ளே

பிரகாசமான விளக்கு அமைத்திருப்பர். நல்ல காற்றைத் தூசு இல்லாமல் தூய்மைப்படுத்தி, உடம்புக்குச் சௌகரியமா யிருக்கும் அளவு குளிர்வித்து, உள்ளே செல்ல விடுவர். இப்படிச் செய்வதனைக் காற்றைச் சரிபடுத்தும் ஏற்பாடு (Air conditioning) என்பர்.

தமிழ்நாட்டில் சென்னைநகரிலும் திருச்சிராப்பள்ளியிலும் 'ஒலிபரப்பு' நிலையங்கள் (Studio) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இக்காலத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் வானொலியை மகிழ்வுடன் வரவேற்கின்றனர். அது நோயினாலும், பிற சௌகரியங்களாலும் வீட்டினுள் அடைபட்டுக்கிடப்பவர்களுக்குத் தோழனாய் இருந்து அவர்கள் துன்பத்தைப் போக்குகிறது ; மனிதசஞ்சாரம் அதிகம் இல்லாத மலைப்புறங்களிலும் பனிப்பிரதேசங்களிலும் வனாந்தரங்களிலும் தனியாயிருந்து வருந்துபவர்களுக்கு அருள்வள்ளலாயிருந்து ஆறுதலையும் உற்சாகத்தையும் அளித்துவருகிறது ; கடல்நடுவே கப்பலில் அடைபட்டு, காற்றாலும் நெருப்பாலும் பாறையாலும் வெடிகுண்டுகள் முதலியவற்றாலும் ஆபத்துக்கு உள்ளாகித் தத்தளிக்கும் மாலுமிகளுக்கு உயிரைக் காக்கும் இரக்ஷகனாயும், ஆபத்தில் உதவுந் துணைவனாயும் இருந்துவருகிறது; ஆகாய விமானத்தில் சஞ்சரிப்போருக்கும் நீரில் மிதந்தும் நீரில் மூழ்கியும் செல்லுங் கப்பலில் இருப்பவர்களுக்கும் பூமியில் நிகழுஞ் செய்திகளை உடனுக்-

குடன் அறிவிக்கும் கிளைஞனாய் இருக்கிறது. அது வெளிநாட்டுச் செய்திகளை உடனுக்குடனே கொண்டு வந்து அறிவிக்குந் தூது; கல்லார்க்கேயன்றி, கற்றவர்க்கும் கல்வி கற்பிக்கும் ஆசிரியன்; சிற்சில நோய்-



களுக்குச் சிகிச்சை செய்யவல்ல மருத்துவன்; மதவிஷயங்களைப் போதிக்குங் குரு; போர்க்களத்தில் பல வகையாகத் துணைசெய்யுங் கருவி.

புத்தகங்களைப் படிப்பதும், அவற்றினின்றுசெய்திகளைத் தெரிந்துகொள்வதும் சற்றுச் சிரமமானவை. ஒருவர் சொல்ல மற்றொருவர் கேட்டுத் தெரிந்துகொள்வது அறிவை ஏற்கும் வழிகளுள் மிக்க இலேசான வழி. இதற்கு வானொலி தக்க உதவி செய்கிறது.

ஒரே மொழியைப் பேசும் மக்கள் அனைவரையும் ஒன்றாக்குவதற்கும் வானொலி சிறந்தசாதனமாயுளது.

மொழியின் ஒற்றுமையால் மனவொற்றுமையும் பிற ஒற்றுமையுணர்ச்சிகளும் பிறக்கும் அன்றோ?

கிராமவாழ்க்கையில் விருப்பம் குறைந்து-கொண்டே வரும் இந்நாளில், வானொலிமூலம் நகரங்-களில் நடக்குஞ் சொற்பொழிவுகளையும் நாடகங்களை-யும், சிறந்த சங்கீதசபையில் நிகழும் பாட்டுக்கச்சேரி-யையும் நாள்தோறும் கேட்க இயலுவதனால், கிராம-வாசிகள் அங்கிருந்தே நாகரிகவாழ்க்கையின் சிறந்த அனுபவங்களையும் அனுபவிக்க முடியும். ஆதலால், இனி, கிராமவாழ்க்கையில் வெறுப்புத் தோன்றாது.

வானொலி நாட்டிலுள்ள சிறுவர் சிறுமியரின் அறிவை வளர்க்கும்; தேசங்களை ஒன்றாக இணைக்-கும்; மக்கள்மனத்தில் வெறுப்புக்களை நீக்கும்; உலகமக்கள் தாங்கள் அனைவரும் சகோதரர்கள் என்-பதை உணரச் செய்யும்.

வானொலியிலும் கிராமபோனைப் பயன்படுத்து-கின்றனர். மிகச்சிறந்த சங்கீத வித்துவான்களின் சங்கீதத்தையும் சிறந்த சொற்பொழிவாளரின் சொற்-பொழிவையும் ஒலித்தட்டுக்களில் பதிவுசெய்வர். இதனால், அவர்கள் ஆயுட்காலத்தில் அவர்கள் இல்லாத இடத்திலும்; பிற்காலத்திலும் அவற்றைக்கொண்டு கேட்டு மகிழலாம்.

சண்டையில் நிகழுஞ் சிற்சில நிகழ்ச்சிகளை இவ்-வாறு ஒலிப்பதிவு செய்து வெளியிடுகின்றனர். 'கிரிக்கட்' விளையாடிக்கொண்டிருக்கும்போதே, அவ்

விளையாட்டுநிகழ்ச்சிகளை, அவ்வப்போது ஒருவர் கூறிக்கொண்டேயிருக்க, கேட்டு, நாம் அதை நேரே காண்பதுபோல மகிழ்கின்றோம்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக இவைபோன்ற பல நன்மைகளை இன்னும் பெறுவோமாக.

## அருஞ்சொற்பொருள்

விஞ்ஞானம்-ஸயன்ஸ்(Science)

நுண்ணியது-நுட்பமானது; ஸூக்ஷ்மமானது.

எடுத்தல்-குரல் உரத்துச் சொல்லுதல்.

படுத்தல்-குரல் தாழ்த்திச்சொல்லுதல்

மாலுமி-கப்பலோட்டி.

கிளைஞன்-சுற்றத்தவன்

## வினாக்கள்

1. ரேடியோ நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் என்ன ?
2. 'ஈதெர்' என்பதைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லுக.
3. 'வெளியிடங்களிலிருந்து ஒலிபரப்புதல் செய்வதில்லை.' ஏன் ?
4. 'நிகழ்ச்சியறை' என்பது என்ன ?
5. 'நிகழ்ச்சியறை'யைக்குறித்து அறிந்தவற்றை எழுதுக.
6. 'வானொலி'யின் நன்மையைக்குறித்துச் சுருக்கமாக எழுதுக.

## 14. செங்குட்டுவனின் வடநாட்டுச் செலவு

பண்டைக்காலத்தில் நம் தமிழ்நாட்டில் மேற்குப் பகுதியை ஆண்ட சேரவேந்தருட் பலர் இமயமலை-வரை சென்று தமது புகழை இமயத்தில் பொறித்த-னர். அத்தகைய பேரரசருள் ஒருவன் செங்குட்டுவன்.

செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் வெள்ளிமாடம் என்னும் மாளிகையில் வாழ்ந்துவந்தான். அவன் ஒரு-நாள் மலைவளங்காண்டற்குத் தன் தேவியோடு, பரி-வாரங்கள் சூழச் சென்றான். அவன் வருகையை யறிந்த மலைவாழ்நர் யானைமருப்பு, அகில், சாமரை, மிளகுக்கொடி, புலிப்பறழ், அரிக்குருளை, கரிக்களபம் முதலியவற்றைக் கொண்டுவந்து அவன்முன் வைத்து இறைஞ்சி, "ஏழ்பிறப்பு அடியேம், வாழ்க நின் கொற்-றம்!" என்று வாழ்த்தினர். பின்னர் அவர்கள், வேங்கைமரத்தின் கீழ் இருந்த கண்ணகியை அவள்-கணவனோடு தேவர்கள் வந்து அழைத்துச்சென்ற அதிசயச்செய்தியை அறிவித்தனர். அப்பொழுது அருகிலிருந்த புலவர் சாத்தனார் அச் செய்தியை விரித்துக் கூறினார். அதைக் கேட்ட செங்குட்டுவன் வியப்புற்று, கண்ணகிக்குக் கோயில் கட்டக் கருதி அதன்பொருட்டுக் கல் கொணர்தற்கு இமயம்செல்ல முடிவுசெய்து, அதனைப் பறையறைந்து நகரில் அறிவிக்குமாறு கட்டளையிட்டான். அச் செய்தியை அறிந்த பிறநாட்டு ஒற்றர்கள் தம் நாடு சென்று, அதனைத் தம் அரசர்க்குத் தெரிவித்தனர்.

பின்னர், செங்குட்டுவன் அரியணையில் வீற்றிருந்து படைத்தலைவரை நோக்கிக் கூறுவான்: "வடநாட்டரசர்கள் ஒரு சுயம்வரத்தில் குழுமியிருந்த போது, அவருட் சிலர், "தமிழ்நாட்டரசர் இமயத்தில் வில், புலி, கயல் பொறித்த நாளில், ஈங்கு எம்போலும் முடிமன்னர் இல்லை" என்று கூறி இகழ்ந்தனராம். இச் செய்தியைத் தீர்த்தயாத்திரை செய்து வந்த தாபதரால் அறிந்தேன். அவ் வரசர் கூறிய இழிசொல் எனக்கேயன்றி, சோழபாண்டியருக்கும் இகழ்ச்சியைக் கொடுப்பதாதலின், அம் மன்னரது முடித்தலையில் படிவக்கல்லை ஏற்றிக் கொணர்வேன்; இன்றேல், குடிகளை வருத்துங் கொடுங்கோலன் ஆகக்கடவேன்" என்று திருவோலக்கத்தில் வஞ்சினங் கூறினான். அப்பொழுது பெருங்கணி யெழுந்து அரசனை வாழ்த்தி, "வெற்றியடையப் புறப்படுவதற்கு இதுவே நல் ஓரை; புறப்படுக" என்றான். உடனே அரசன் தன் வாளும் குடையும் எடுத்து நாட்கொள்ளுமாறு ஆணையிட்டான். அப்பொழுது முரசுமுழங்கின; படைவீரர் ஆரவாரித்தனர்; ஐம்பெருங்குழுவும் "செங்குட்டுவன் வெல்க" என்று கூறி, பட்டத்து யானையின்மேல் அரசவாளுங் கொற்றக்குடையும் ஏற்றி நகர்ப்புறத்தே வைத்தனர்.

மறுநாட் காலையில் செங்குட்டுவன் எழுந்து, இறைவனை வணங்கி, அந்தணர் வாழ்த்த, நன்முகூர்த்தத்தில் யானைமேல் ஏறிப் புறப்பட்டான். அப்பொழுது, சூதர், மாகதர், வைதாளிகர் அரசனது

புகழைக் கூறி வாழ்த்தி உடன்சென்றனர்; கரிபரி-வீரர்களும் வாட்படைமறவர்களும் ஆர்ப்பரித்தனர். கடல்வரை பரவிய சேனைகளோடு சென்று நீலகிரியின் புறத்தில் அமைத்த பாடியில் அரசன் தங்கியிருந்தான். சிறிதுநேரத்தில் அங்கு வந்த முனிவரை அரசன் அடிவணங்கினான். அவர்கள் ஆசிகூறி, "அரசே, யாங்கள் பொதியமலைக்குச் செல்கின்றோம். நீ இமயத்திற்குச் செல்லுகையில் ஆங்கு வாழும் அருமறையந்தணர்க்குத் தீங்கு நேராதவாறு காப்பாயாக!" என்று கூறிச் சென்றனர். பின்னர், அரசன் ஆடல்-பாடல்களைக் கண்டு மகிழ்ந்து அரியணையில் வீற்றிருக்-கையில், களிறு, புரவி, தேர் பலவற்றோடும் யாத்தி-ரைக்கு வேண்டிய பண்டங்கள் ஏற்றிய சகடங்க-ளோடும் தன்னைக் காணவந்த சஞ்சயன் என்பானை வருவித்து உசாவினான். அவன் வணங்கி, "மன்னர்-ஏறே, தாங்கள் வடநாடு செல்வது படிவச்சிலை கொணர்தற்பொருட்டே யாயின், 'இமயத்தில் கல்-லெடுப்பித்துக் கங்கையாற்றில் நீர்ப்படை செய்து தருகிறோம்' என்று தங்கள்நட்பரசராகிய நூற்றுவர்-கன்னர் தெரிவித்தனர்" என்று கூறினான்.

அதனைக் கேட்ட செங்குட்டுவன், "நன்று, வட-நாட்டில் கனகன், விஜயன் என்னும் அரசரிருவர் தமிழ்வேந்தரின் ஆற்றல் அறியாது இகழ்ந்து கூறி-னராம். அதனால், படிவக்கல் எடுத்தலோடு அவருக்கு நம் ஆற்றலை அறிவித்தற்காகவும் இப் படையொடு புறப்பட்டுள்ளோம். இச் செய்தியை நம் நண்பரா-கிய நூற்றுவர்கன்னர்க்குத் தெரிவித்து, கங்கை-

யாற்றைக் கடத்தற்கு வேண்டிய ஓடங்களை அமைத்துவைக்கும்படி செய்வாயாக" என்று பணித்து, அவர்களை அனுப்பினான். பின்னர், செங்குட்டுவன் அப் பாடிவீட்டினின்று நீங்கி வடநாடு நோக்கிப் புறப்பட்டான். புறப்பட்டவன் சில நாளில் கங்கையை யடைந்தான் ; அங்கு முன்னரே சித்தஞ்செய்யப்பட்டிருந்த மரக்கலங்களில் ஏறி, தன் படைகளுடன் வடகரையை யடைந்தான். அவனை நூற்றுவர்கன்னர் எதிர்கொண்டு அழைத்துச் சிறப்புச் செய்தனர். பின்னர் அங்கிருந்து நீங்கி உத்தரகோசலத்தை யடைந்து பாசறையில் தங்கியிருந்தான்.

செங்குட்டுவன்வருகையை யறிந்த கனகவிசயர் என்னும் அரசர், உருத்திரன் விசித்திரன் முதலிய அரசர்களைத் துணைக்கொண்டு, "தமிழரசன் ஆற்றலைக் காண்போம்" என்று செருக்கி, பெரும்படையுடன் போருக் கெழுந்தனர். அவர் வருதலை யறிந்த செங்குட்டுவன், இரைவேட்டெழுந்த அரிமாவொன்று யானைக்கூட்டத்தைக் கண்டு பாய்வதுபோல, உள்ளம் பூரித்து அவர்களோடு பொருவானாயினான். பொரும் படையின் துகிற்கொடிகளால் ஞாயிற்றின் ஒளி மறைந்தது ; பறைகளும் வளைகளும் வயிர்களும் திக்கெல்லாம் நடுங்குமாறு ஒலித்தன ; தூசிப்படைகள் தம்முட் கலந்து பொருதன. அப் போரில் தோளும் தலையும் துணிபட்டு வேறாகிய கவந்தங்கள் கூத்தாடின. பிணக்குவியலிலிருந்து குருதிவெள்ளம் ஓடிற்று. பகையரசரின் நால்வகைப் படைகளையும் நூழிலாட்டிய சேரன் திறலை அறிந்த அரசர்கள் வேறுவேறு

வேடந்தாங்கி ஓடிப் பிழைத்தனர். அவர்களுள் கனக-விசயர் என்பார் தம் தேர்வீரர் ஐம்பத்திருவருடன் அகப்பட்டனர்.

தன் எண்ணம் ஒன்று நிறைவேறப்பெற்ற செங்-குட்டுவன் படைத்தலைவனாகிய வில்லவன்கோதையை நோக்கி, ''வடதிசையில் செல்லுமிடங்களிலெல்லாம் நான்மறைவல்ல அந்தணரைப் போற்றிக் காக்க'' என்று கட்டளையிட்டு, இமயத்திலிருந்து சிலை-கொணருமாறு அனுப்பினான்.

தான் பணித்தவாறு வில்லவன்கோதை சிலை-கொணரக்கண்ட சேரன் மகிழ்வுற்று, தன்னை எதிர்த்த கனகவிசயர்முடித்தலைமேல் அச் சிலையை யேற்றிக்-கொண்டு, கங்கையின் வடகரை சார்ந்தான். அங்கு ஆகமம்வல்லோரால் முறைப்படி சிலையை நீர்ப்படுத்தி, கங்கையின் தென்கரை சார்ந்து, தன் நண்பர் நூற்று-வர்கன்னரால் அமைக்கப்பட்ட பாடியில் பரிவாரங்க-ளுடன் தங்கினான். போரில் வீரச்செயல் புரிந்து வீரசொர்க்கம் புக்க படைவீரர்களின் மைந்தர்களையும் மாற்றாரை யழித்து வாகைசூடிவந்த பெருவீரர்களையும் வருவித்து, வெற்றியின் அறிகுறியாக அவர்களுக்குப் பொற்பூக்களை நல்கிப் பெரிது சிறப்புச் செய்தான்.

அச்சமயத்தில் ஆங்கு வந்த மாடலன் என்னும் மறையவன் செங்குட்டுவனைக் கண்டு வாழ்த்தி, தான் கங்கையாடப் போந்த காரணத்தைத் தெரிவித்து, பாண்டியநாட்டிலும் சோழநாட்டிலும் நிகழ்ந்த அரசியல்செய்திகளையும் விளங்க உரைத்தான்.

அவ்வளவில் நிமித்திகர்தலைவன் அரசனைநோக்கி, "வேந்தர்வேந்தே, வஞ்சியிலிருந்து புறப்பட்டு இன்றோடு முப்பத்திரண்டு மாதங்க ளாகின்றன" என்று தெரிவித்தான். உடனே, குட்டுவன் மாடலனுக்குத் துலாபாரதானம் செய்து, தன் நட்பரசராகிய நூற்றுவர்கன்னரை அவர்நாட்டுக் கனுப்பிவிட்டு, தன் நகருக்குப் புறப்பட்டான். வெற்றிபெற்று மீண்ட அரசனை நகரமாந்தர் எதிர்கொண்டனர். மகளிர் மலர்களைத் தூவி வாழ்த்தினர். அரசன் கோயில்புக்கு, மகளிர் அட்டமங்கலம் ஏந்த, மணியரங்கு அடைந்து வீற்றிருந்தான்.

மறுநாள் செங்குட்டுவன் மாடலன் எடுத்துரைத்த அறிவுரையைக் கேட்டு, நிலையாமையை உணர்ந்து, சிறைப்படுத்தப்பட்ட வடவரசரை விடுவித்து, ஒரு மாளிகையில் அவர்களை வசிக்கச் செய்தான்; அவர்களுக்கு வேண்டியவற்றை நல்கி உபசரிக்குமாறு வில்லவன் கோதைக்குக் கட்டளையிட்டான். பின்னர், மூதூர்களில் சிறைப்பட்டவரையும் விடுவித்துச் சிறைச்சாலைகளைத் தூய்மைசெய்யவும், அரசிறை செலுத்தாத நாடுகளில் அரசிறை தவிர்க்கவும் அமைச்சனுக்கு ஆணையிட்டான். அதன்பின் அந்தணர், புரோகிதர், நிமித்திகர் இவருடன் சென்று, பத்தினிக் கெடுத்த கோயிலில், இமயச் சிலையில் முற்றுவித்த பத்தினிக்கடவுளின் உருவத்தைப் பிரதிஷ்டை செய்து, அர்ச்சனையும் வேள்வியும் விழவும் எந்நாளும் நிகழுமாறு ஏற்பாடு செய்தான்.

## அருஞ்சொற்பொருள்

பொறித்தல்-எழுதுதல்.
பறழ், குருளை, களபம்: இளமைப் பெயர்.
தாபதர்-தவசிகள்.
வடிவம்-உருவம்.
ஓலக்கம்-கொலு.
கணி-சோதிடன்.
ஐம்பெருங்குழு-அமைச்சர் புரோகிதர் சேனபதிகள் தூதர் ஒற்றர்.
சூதர்-நின்றேத்துவார்.
மாகதர்-இருந்துபாடுவோர்.
வைதாளிகர்-புகழ்ந்து பாடுவோர்.
உசாவுதல்-விசாரித்தல்.
அரிமா-சிங்கம்.
வயிர்-ஊதுகொம்பு.
தூசிப்படை-முன்படை.
தூழிலாட்டுதல்-கொன்று குவித்தல்.
நிமித்திகர்-சோதிடன்.
துலாபாரதானம் - தன் எடையளவு பொன்னைத் தானஞ் செய்தல்.
அட்டமங்கலம்-கண்ணடி, சாமரை, விளக்கு முதலியன.

## வினாக்கள்

1. செங்குட்டுவனுக்குக் கண்ணகியின் செயலைத் தெரிவித்தவர் யார்?
2. குட்டுவன் கூறிய வஞ்சினம் யாது?
3. குட்டுவன் நீலகிரியில் இருந்தபோது நிகழ்ந்தன யாவை?
4. தன் நகருக்கு வந்தபின் குட்டுவன் செய்த செயல்களை எழுதுக.

## பயிற்சி

கொணர்தற்கு, எம்போலும், செல்லுகையில், துணைக்கொண்டு, செருக்கி, வருவித்து:

இவற்றை வாக்கியத்தில் அமைக்க.

## 15. அமைச்சன் அறிவு

அரசர்க்கரசன் விக்கிரமாதித்தன் உஜ்ஜயினிப்பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த காலத்தில் ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் அவனுக்குத் திறைகட்டி வணங்கிவந்தனர். விக்கிரமாதித்தன் வீரமும் அருளும் அறிவும் உடையவனாய், கூடுவிட்டுக் கூடுபாய்தல், அஷ்டமா சித்தி முதலியவற்றையும் அறிந்திருந்தான். உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தும் பேசுகின்ற பேச்சு அவனுக்கு விளங்கும்.

நூலறிவோடு நுண்ணறிவும் சொல்வன்மையும் வாய்க்கப்பெற்ற பட்டி யென்பவன் விக்கிரமாதித்தனுக்கு அமைச்சனாய் அமர்ந்திருந்தான். அவன் தன்னலம் ஒரு சிறிதும் கருதாது, அரசன்நலத்தையே கருத்திற்கொண்டு, அவனுக்கு வரும் இடையூறுகளை அகற்றிவந்தான். ஈடும் எடுப்பும் அற்ற அவ் வமைச்சனைப் பெற்ற விக்கிரமாதித்தன் யாதொரு குறையுமின்றி ஆட்சிபுரிந்தான். அவன் ஒவ்வோராண்டும் நாட்டில் ஆறு மாதமும் காட்டில் ஆறு மாதமும் காலங்கழிப்பது வழக்கம்.

விக்கிரமாதித்தன் தன் நகரத்திலிருந்த விஜயன் என்பவனோடு நட்புப்பூண்டு, தான் கற்றிருந்த கூடுவிட்டுக்கூடுபாயும் வித்தையை அவனுக்குக் கற்பித்து, அவனிடமிருந்து மகேந்திரஜாலத்தைக் கற்றுக்கொண்டான். விஜயனோடு நட்புக்கொள்வதனால்

தீங்கு விளையும் என்பதை அமைச்சன் அரசனிடம் நெடுநாளாகச் சொல்லிவந்தான். அரசன் அதனைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், விஜயன் அரசனைக் கெடுக்கக் காலம்பார்த்திருந்தான்.

ஒருமுறை விக்கிரமாதித்தனும் பட்டியும் காட்டில் வசித்துவந்தபொழுது, கழிக்கவேண்டிய ஆறுமாதத்தில் இருபத்தைந்து நாட்கள் எஞ்சியிருந்தன. அப்பொழுது அரசன் அமைச்சனைத் தன் பட்டணத்திற்கு அனுப்பிவிட்டு, தான்மட்டும் தனியே அக் கானகத்தில் வாழ்ந்துவந்தான். வேந்தன் வனத்தில் தனித்து வாழ்வதை அறிந்த விஜயன் அக்கணமே புறப்பட்டு, பல இடங்களிலும் அலைந்து திரிந்து, அரசன் இருக்கும் காட்டை அடைந்து, அவனைக் கண்டு வணங்கினன். தன் நண்பனைக் கண்ட மன்னவன் மனகிழ்ந்து ஓர் ஆலமரத்தின் நிழலில் தங்கி, அவன்மடிமீது தலையை வைத்துப் படுத்திருந்தான்.

அவ் வேளையில், அவ் வாலமரத்தில் ஒரு கூட்டில் இருந்த இரண்டு கிளிகளுள் ஆண் இறக்க, பெண்கிளி அதன்மேல் வீழ்ந்து அழுது புலம்புவதைக் கண்ட அரசன், மனமிரங்கி அப் பெண்கிளியின் துக்கத்தைத் தவிர்க்க எண்ணி, கூடுவிட்டுக் கூடுபாயும் மந்திரத்தை உச்சரித்து, தன் உடலை நண்பன்மடியில் கிடத்தி, தன் உயிரை ஆண்கிளியின் உடலில் புகுத்தினன். உயிர் பெற்றெழுந்த தன் நாயகனைக் கண்ட பெண்கிளி களிப்புக்கடலில் மூழ்கிற்று.

விஜயன் அரசன்உடலில் உயிர் இல்லாததைக் கண்டு, மன்னவன் இறந்த ஆண்கிளியின் உடலில் புகுந்துள்ளான் என்பதை அறிந்துகொண்டு, தன் எண்ணத்தை நிறைவேற்ற அதுவே தருணம் என்று எண்ணி, தன் கூட்டை விட்டு அரசன்கூட்டில் புகுந்தான் ; தன் கூடு அங்கிருந்தால் அரசன் அதற்குள் பாய்ந்து எழுந்திருப்பான் என்று கருதி, தீ வளர்த்து அதை அதில் இட்டு நீறுக்கிவிட்டு, உஜ்ஜயினி நகரவெல்லையை அடைந்து, தன் வரவை அமைச்சனுக்கு வழிச்செல்வோர்மூலம் அறிவித்தான்.

அரசன் காட்டில் வாழுங்காலம் பின்னும் இருபது நாள் இருப்பதைப் பட்டி அறிந்து, "இதென்ன ! ஒரு நாள் இருப்பினும் அரசர் நகரத்துள் வாரார். இதில் ஏதோ வஞ்சகம் இருக்கின்றது" என்று ஆராய்ந்து, விஜயன் நகரத்தில் இல்லை என்பதையும் விசாரித்து அறிந்து, "அந்தோ ! அப்பாவி விசயன் நம் அரசரை வஞ்சகமாகக் கொன்று அவர்கூட்டில்புகுந்து அவரைப் போல் வந்துள்ளான்" என்று எண்ணி வருந்தினன் ; பின் ஒருவாறு தேறி, நால்வகைப்படையொடு அவனை எதிர்கொண்டு அரண்மனைக்கு அழைத்து வந்தான். ஒரு தாதியைத் தனியே அழைத்து, "அரசருடைய தேவிமார் தாங்கள் கௌரிநோன்பு நோற்றுவருவதாகவும் இரண்டு மாதங்களே முடிந்திருப்பதாகவும் உரைத்து, இன்னுஞ் சில நாட்கள்வரை அரசன் அந்தப்புரத்திற்கு வரலாகாது என்று தடைசெய்யவேண்டும்" என்று கூறி விடுத்தான் ; அன்றியும்

அரசன் விக்கிரமாதித்தன் வஞ்சகஞ் செய்யப்பட்டான் என்பதை அவர்களுக்கு அறிவிக்குமாறும் ஆணையிட்டான்.

தாதியின்மூலம் அச் செய்தியை அறிந்த தேவிமார் தங்கள் நன்மையைக் கருதியவன் அமைச்சனே என்பதை உணர்ந்து அவ்வாறே அந்தப்புரத்திலுள்ள காவலாளர்களுக்குத் தம் கோன்பைக் கூறி, அரசன் உள்ளே வரலாகாது என்று தடுப்பித்தனர்.

அந்தப்புரத்தை அடைய எண்ணிச் சென்ற விஜயனைக் காவலாளர் காரணங் கூறித் தடுக்க, அவனோடு சென்ற அமைச்சனும் அது உண்மை என்று தெரிவிக்க, அவன் மீண்டுவந்து தன் அரண்மனையில் தங்கினான்; ஆடன்மகளிரின் இசையைக் கேட்டும், கூத்தைக் கண்டும் காலங்கழித்துவந்தான்.

மன்னவனைக் கண்டறியவேண்டும் என்னும் எண்ணமே அமைச்சன்மனத்தில் குடிகொண்டிருந்தது. "நம் அரசர் எந்தக் கூட்டில் பாய்ந்திருந்தாலும், தம் ஆற்றலும் புகழும் வெளிப்படுத்தாதிரார்" என்று துணிந்து, அவன் தூதர்களைப் பல திசைகளுக்கும் அனுப்பி, ஆங்காங்கு நிகழும் அதிசயங்களை அறிந்து வருமாறு அவர்களுக்கு ஆணையிட்டான்.

வனத்தில் பறந்து திரிந்த (விக்கிரமாதித்தனாகிய) கிளி வனசரன் ஒருவன் கட்டிய வலையில் சிக்கிக்கொள்ள, அவன் அதைக் கொண்டுபோய் மகதபுரியில் ஒரு வணிகனிடம் விற்றான். கிளி அவ் வணிகன்கடை-

யில் வியாபாரஞ் செய்ததுமன்றி, அவ்வூரில் நிகழ்ந்த வழக்குக்களையெல்லாம் தீர விசாரித்து, எள்ளுக்காய் பிளந்ததுபோல, வாதி பிரதிவாதி இருவர்மனமும் பொருந்தத் தீர்ப்புக்கூறி, 'நடுநிலை தவருத நீதிபதி' என்ற பேரும் பெற்றது.

பட்டியினல் ஏவப்பட்ட தூதருள் ஒருவன் மகதபுரிக்குச் சென்று அக் கிளியின் செயலைக் கண்டு வியப்புற்று, தன் நகரத்திற்கு மீண்டு வந்து, அதனைப் பட்டிக்கு அறிவிக்க, அவன் அக் கிளியே தன் அரசனுயிருக்கவேண்டும் என்று உறுதிகொண்டு, நால்வகைப் படையோடு அந்நகரை அடைந்து கிளியைக் கண்டான். பட்டியைக் கண்ட கிளி பறந்துவந்து அவன் தோளில் அமர்ந்தது. பட்டி அதனைக் கையிலேந்திக் கண்ணிலொத்தி மார்பில் அணைத்துக்கொண்டு, தன் தேசத்துக்கு மீண்டுவந்தான் ; கிளியைத் தனியே மறைவில் வைத்துக்கொண்டு அதன் வாயிலாக முன்பு நிகழ்ந்த எல்லாவற்றையும் அறிந்து, அதனைத் தன் மாளிகையில் வைத்திருந்தான்.

மறுநாட் காலையில் மந்திரி அந்தப்புரத்துக்குச் சென்று, தேவிமாரிடத்தில், தங்கள் கௌரிநோன்பு முடிந்ததென்று தாதிமூலம் அரசனுக்குச் செய்தியை அறிவிக்கச் சொல்லிவிட்டு, சபையை அடைந்தான். தேவிமார் தங்கள் ஆருயிர்மன்னவன் திரும்பி வந்துவிட்டான் என்பதைக் குறிப்பால் அறிந்துகொண்டு, அவ்வாறே செய்தனர். விஜயன் பட்டியோடு அந்தப்புரத்துக்குச் செல்லும்பொழுது, வழியில், "ஆட்டுக்

கிடாய்ச் சண்டையைப் பார்த்துவிட்டுப் போகலாம்" என்று அமைச்சன் கூற, அதற்கு அரசன் இணங்கி-ஞன். கிடாய்கள் இரண்டனுள் ஒன்று தேவிமாருடை-யது என்றும் மற்ருென்று அரசனுடையது என்றும் சொல்லி, "அரசே, தங்கள் ஆடு வெற்றிபெற்ருல் அந்தப்புரத்துக்குச் செல்லலாம் ; இன்றேல், வேறு பந்தயம் வைக்கும்படி நேரிடும்" என்று அமைச்சன் கூற, விஜயன் அதற்குச் 'சரி' என்று தலையை அசைத்தான்.

கிடாய்களிரண்டும் தீப்பொறி பறக்கக் கொம்-பொடு கொம்பு தாக்கி, நெடுநேரம் போரிட்டன ; இறுதியில் அரசன் ஆடு மண்டை உடைந்து இறந்தது. அதைக் கண்ட தேவிமார் கைகொட்டிச் சிரித்தனர். பெண்களும் தன்னை எள்ளி நகையாடும்படி ஆயிற்றே என்று வெள்கிய விஜயன், தன்னையும் மறந்து, கோபத்தால் அறிவையும் இழந்து, தன் கூட்டைவிட்டு, இறந்த ஆட்டின் கூட்டில் நுழைந்தான். அப்பொழுது பட்டி கிளியைக் கொண்டுவந்து, விக்கிரமாதித்தன் உடலரு-கில் விட, அது அக் கூட்டில் பாய்ந்தது. உடனே பட்டி விஜயன் புகுந்த கிடாயைத் தலைவேறு உடல்-வேருக வெட்டுவித்தான்.

விக்கிரமாதித்தன் பட்டியின் ராஜபக்தியையும் அறிவையும் பாராட்டி வாழ்த்தி, முன்போல் அற-நெறி தவருது குடிதழுவிச் செங்கோலோச்சிச் சிறப்பொடு வாழ்ந்துவந்தான்.

## அருஞ்சொற்பொருள்

அஷ்டமாசித்தி-அணிமா, மகிமா, லகிமா, கரிமா முதலிய எட்டு.
மகேந்திரஜாலம்-அற்புதச்செயல் செய்யும் வித்தை.
தாதி-செவிலி.
வனசரன்-வேடன்.
ஓச்சி-செலுத்தி.

## வினாக்கள்

1. விஜயன் விக்கிரமாதித்தனை எவ்வாறு மோசஞ் செய்தான் ?
2. நகருக்கு வந்த அரசன் விக்கிரமாதித்தனல்லன் என்று அமைச்சன் எவ்வாறறிந்தான் ?
3. அமைச்சன் அரசனைக் கண்டறிய யாது செய்தான் ?
4. பட்டியின் நுண்ணறிவு விளங்குமிடம் யாது ?

## பயிற்சி

1. யாதொரு, தவிர்க்க, தனியே, தடை, எந்தி, இன்றேல், தவறாது :

இவற்றை வாக்கியத்தில் அமைக்க.

2. 'உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் பேசுகின்ற பேச்சு அவனுக்கு விளங்கும்.'

இதில் எழுவாயைச் செயப்படுபொருள் ஆக்குக.

3. அரசன் தன் உயிரை ஆண்கிளியின் உடலில் புகுத்தினான்.

தன்வினை ஆக்குக.

4. 'காட்டில் வாழவேண்டிய காலத்தில் ஒருநாள் இருப்பினும் அரசர் நகருள் வாரார்.

எதிர்மறையை உடன்பாடு ஆக்குக.

## 16. ஆபிரிக்காத் தரைச்செலவு

மக்கள் உலகத்தில் தமக்குப் பழக்கமில்லாத நாடுகளில் பிரயாணம் செய்ய விரும்புவதற்குக் காரணம் பல உள. அவற்றுள் மக்கள்கண்களில் படாத கொடிய காட்டுமிருகங்களைப் படம்பிடித்தல் என்பதும் ஒன்று. நம் சரித்திரத்தலைவர் மேஜர் கோர்ட் ட்ரெட் என்பவர் அக் குறிக்கோளுடன் ஆபிரிக்காவில் தரைச்செலவை மேற்கொண்டார்.

மேஜர் கோர்ட் ட்ரெட் என்னும் பெரியாரும், அவர் மனைவியும், லா என்னும் பத்திரிகையாசிரியரும், நிழற்படம் பிடிக்குந் தொழிலில் கைதேர்ந்த க்ளவர் என்னுங் கலைஞரும், எர்ரோல் ஹிண்ட்ஸ் என்னும் ட்ரெட்டின் மைத்துனரும் ஜூலியஸ் என்னும் சுதேசியும் ஆபிரிக்காக் கண்டத்தின் தெற்கிலுள்ள கேப் டவுன் (Cape town) என்னும் நகரிலிருந்து வடக்கிலுள்ள எகிப்துநாட்டின் தலைநகரமாகிய கெய்ரோ (Cairo)-வுக்கு இரண்டு மோட்டார்வண்டிகளில் பிரயாணஞ்செய்தனர். இவ் விருநகரங்களுக்குமிடையே யுள்ள நேர்தொலைவு ஏழாயிரம் மைல். ஆயின், அவர்கள் வண்டிகளை ஓட்டிக்கொண்டு சென்ற தொலைவு பதின்மூவாயிரம் மைல்.

மேஜர் கோர்ட் ட்ரெட் குழுவினர் 1924-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24-ஆந்தேதி பிரயாணத்தைத் தொடங்கினர். அவர்கள் லிம்போபோ நதியை


1. கேப் டவுன்.
2. லிம்போபோ நதி.
3. புலவாயோ.
4. விக்டோரியா நீர்வீழ்ச்சி.
5. ஜாம்பளி நதி.
6. வட றொடீஷியா
7. தங்கனீகா.
8. யுகாந்தா.
9. சூடான்.
10. நூபியா பாலைவனம்.
11. நைல் நதி.
12. கெய்ரோ.

மெஸினு (Messina) என்னுமிடத்தில் கடக்கும்பொழுது அவ்வாற்றின் அகட்டில் உள்ள மணல் உலர்ந்து ஆழமாயிருந்ததனுல், மோட்டாரில் கழுதைகளைப் பூட்டி ஓட்டிச் சென்றனர். பின்னர் புலவாயோ (Buluwaya) என்னும் இடத்தை அடைகையில் விடாமழை பொழிந்ததனுல், அனைவரும் வண்டியிலிருந்து கீழே இறங்கி மண்வெட்டியால் சேற்றை அப்புறப்படுத்தி, புல்லும் தழையும் இட்டு வண்டிச்சக்கிரம் நகருமாறு செய்தனர். அப்பொழுது ஒரு மணிக்கு ஒரு மைலுக்குமேல் செல்ல இயலவில்லை.

இவ்வாறு சென்று அவர்கள் குவாய் (Gwaai) என்னும் ஆற்றை அடைந்தனர்; கரைபுரண்டு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் அவ்வாற்றின் குறுக்கே இடப்பட்டிருந்த குறுகிய அணையின்மீது வண்டிகளை ஓட்டிக் கடந்தனர். வண்டியின் இருபுறச்சக்கிரங்களுக்கப்பால் இரண்டு மூன்று அங்குலங்களே அணையின்பகுதி இருந்தது. 'கரணம் தப்பினுல் மரணம்' என்றவாறு, சிறிது தவறியிருப்பினும் அனைவரும் ஆற்றுவெள்ளத்தில் வீழ்ந்து இறந்திருப்பர்.

அவர்களுக்கு எதிரில் வெள்ளம் நிரம்பிய மற்றோர் ஆறு குறுக்கிட்டது. அதனைக் கடக்க அவர்களால் இயலவில்லை. முன்னும் பின்னும் பெருக்கெடுத்தோடும் ஆறுகள் இருந்ததனுல், எங்கும் செல்ல இயலாதவர்களாய், மூன்று வாரம் அங்கேயே தங்கவேண்டியதாயிற்று. அதனுல், அவர்கள் அக்காலம் முழுதும் பட்டினிகிடந்து வருந்தினர்.

பின்பு எதிரிலிருந்த ஆற்றில் வெள்ளம் சிறிது வடியவே, மணிக்கு இரண்டுமைல் வீதம் வண்டிகளை ஓட்டி, அதனைக் கடந்து விக்டோரியா நீர்வீழ்ச்சியை அடைந்து, ரயில்பாலத்தின் மூலமாய் ஜாம்பஸிநதி-யையும் கடந்தனர்; பின்னர் அக்குழுவினர் மத்திய வடக்கு ரொடீஷியாவிலுள்ள விப்ரோகன் ஹில்ஸ் என்னும் இடத்தை அடைந்து சிறந்த சாலை ஒன்றைக் கண்டு, நாள்தோறும் நூறு நூற்றைம்பது மைல்வீதம் பிரயாணம் செய்தனர். வழியில் ஓராற்றில் மூங்கி-லால் பாலங் கட்டி அதில் மண்ணைப் பரப்பி வண்டியை ஓட்டிச் சென்றனர். முதல்வண்டி சென்றவுடன் அப் பாலம் நொறுங்கிவிட்டதனால், அந் நாள்முழுதும் அப் பாலத்தை மீண்டும் கட்டி, இரண்டாம் வண்டி-யை ஓட்டிச் சென்றனர்.

மற்றோர் ஆற்றின் குறுக்கிலிடப்பட்ட மரப்பாலம் ரயில்வண்டியையும் தாங்கக்கூடிய வலிமையுடைய-தாகத் தோன்றினும், அம் மரங்களைக் கறையான் அரித்துத் தின்றிருந்ததனால் முதல்வண்டி கடந்து-கொண்டிருக்கும்பொழுதே அப்பாலம் நொறுங்கிவிட-வண்டி ஆற்றில் விழுந்து மூழ்கிவிட்டது. ஆனால், அதில் இருந்தவர் உயிர்தப்பினர். பின்சக்கிர மொன்று பெரும்பாறையில் மோதி நசுங்கிவிட்டது.

மேஜர் அண்மையிலிருந்த ஊருக்குச் சென்று அவ்வூரா ரனைவரையும் வேண்டி அழைத்துவந்து, கயிற்றைக் கட்டி இழுத்து அவ் வண்டியைக் கரை-சேர்த்தார். பின் அச்சு முறிந்துவிட்டது. அவர்கள்

பழுதுபட்டவற்றையெல்லாஞ் சீர்படுத்தி, மேலும் தம் பிரயாணத்தைத் தொடங்கினர். அவ்வாறு சென்றவர் சிங்கங்கள் மிகுதியாக வசிக்கும் பிரதேசத்தை அடைந்தனர்.

மேஜர் அங்கு ஒருநாள் மாலையில் உணவை உண்டு நீரற்ற ஓராற்றின் நடுவில் அங்கும் இங்கும் உலவிக்கொண்டிருந்தபொழுது, கரையில் இரண்டு சிங்கங்களைக் கண்டார்; உடனே தவழ்ந்துசென்று மெள்ளப் பார்க்கையில் ஐந்து சிங்கக்குட்டிகள் பூனைக்குட்டிகளைப்போலத் தம் தாய்தந்தையைச் சுற்றி விளையாடிக்கொண்டிருந்தன. அவர் மற்றோரிரவு பெரிய சிறுத்தை ஒன்றைப் படம்பிடித்தார்.

பின்னர், அவர்கள் ஒரு காட்டுயானைக்கூட்டம் சென்ற வழியில் சென்று, அதனைக் காண முயன்றனர். ஆனால் வழி தவறிவிட்டது. ஜூலியஸின் உதவியின்றேல் அவர்கள் அவ்விலங்குகளைக் கண்டிருக்க முடியாது. அவன் இங்குலுகுலு என்னும் பறவையைப் போல் ஒலிக்க, அப் பறவை மாற்றொலி கொடுப்பின் தான் செல்லும் வழி சரியானது என்று உணர்வான்; இன்றேல், வந்த வழியே திரும்பிச் சென்று புதுவழியில் செல்வான்.

மற்றொருநாள் அக்குழுவினர் நீரற்ற நிலப்பகுதிகளில் வளர்ந்திருக்கும் புதர்களைப் படம்பிடித்துக்கொண்டு தம் கூடாரத்திற்குத் திரும்பும்போது, வழியை அறியாது திகைத்தனர். அவர்களுடன்

சென்ற அந்நாட்டு மக்களாலும் வழியை அறியமுடியவில்லை. பொழுது போயிற்று. குடிப்பதற்கு நீர் சிறிதும் இன்றி அனைவரும் தவித்தனர்; இரவு முழுவதும் கடுங்குளிரால் வருந்தினர். மறுநாட்காலையில் ஜூலியஸ் அவர்களுக்கு இடத்தை அறிவித்தான்.

ஒருகால் ஒரு நதிக்கரையில் இருந்த புல்வெளியில் அவர்கள் கூடாரமடித்துத் தங்கியிருந்தனர். அது காட்டுயானைக்கூட்டம் நீர் குடிக்குந் துறை என்பதை அவர்கள் அறிந்திலர். அன்றிரவில் தாங்கள் சஞ்சரிக்கும் இடத்தில் மக்கள் இருப்பதை அறிந்த அக் கொடிய விலங்குகள் கூடாரங்களை மிதித்து அழிக்க எண்ணி விரைந்தோடிவந்தன. அதனை அறிந்த அக் குழுவினர் சட்டென்று தீ மூட்டிப் பெருநெருப்பை வளர்த்தனர். அவை அதனைக் கண்டு அஞ்சி ஒன்றும் செய்யாது மீண்டன.

ஆபிரிக்காக் கண்டத்தில், சிங்கம், களிறு, காண்டாமிருகம் முதலிய கொடிய மிருகங்களினும் காட்டெருமையே மிகக் கொடியது. அக் குழுவினர் காட்டெருமை மந்தை யொன்றைக் கண்டபொழுது, அதைப் படம் பிடித்தற்கு, ஒரு புதர்க்குள் ஒளிந்து தங்கியிருந்தனர். அவர்கள் அங்குத் தங்கியிருந்ததை மோப்பம்பிடித் தறிந்த அவ்வெருமைகள் பூமி அதிரும்படி குளம்புகளால் மிதித்து, பெருமுழக்கோடு ஓடிவந்தன. அவர்கள் அஞ்சி நடுங்கி, அண்மையிலிருந்த மரத்தின்மேல் ஏறியிருந்து உயிர்தப்பினர்.

ட்ரெட் குழுவினர் வடக்கு ரொடீஷியாவை விட்டுத் தங்கனீகா (Tanganyika) ப்பிரதேசத்தை அடைந்து, பல மலைகளைக் கடந்து சென்றனர். சில இடங்களில் செங்குத்தான மலைவழிகளில் வண்டிகளை ஓட்டிச் செல்ல இயலாமல் அந்நாட்டு மக்களின் உதவி-யைக் கொண்டு கயிற்றைக் கட்டி அவற்றை மேலே இழுத்தனர். ஒருதடவை ஒரு குன்றின்மேல் அவற்றை ஏற்றுதற்கு ஒருநாள் ஆயிற்று.

பின்னர் அவர்கள் யுகாந்தா (Uganda) ப்பிர-தேசத்தை அடைந்து நல்ல சாலைகளின் வழியாய்த் துன்பம் சிறிதுமின்றிப் பிரயாணஞ் செய்து, சூடான் (Sudan) பிரதேசத்தைச் சார்ந்தனர். அந்நாட்-டில் பெருக்கெடுத்தோடும் பேராறுகள் பல உள. அங்கிருந்த பாலங்கள் மூங்கிலால் ஆனவையாதலின், கனம் மிக்க மோட்டார்வண்டிகளை ஓட்டிச்செல்ல அவை ஏற்றவையாயில்லை. வழியில் உள்ள சகதி-நிலங்களிலிருந்து கொடிய கொசுகுகள் மேகக்கூட்-டத்தைப் போல வெளிவந்து, கடித்துத் துன்புறுத்-தின.

அவர்கள் கெய்ரோவை அடைய மூவாயிரம் மைல்களே இருந்தன. எங்கும் வானளாவி வளர்ந்த மரங்கள் செறிந்த வனங்களும், ஆழமான சதுப்பு-நிலங்களும், இறங்கு துறையும் பாலமும் இல்லாத வெள்ளம் நிரம்பிய நதிகளும் அவர்களுக்கு இன்னலை விளைத்தன. அவர்கள் ஆரப் நாட்டை அடைந்து அங்கிருந்த பெருவழிகளில் பிரயாணம் செய்து பின்பு

'நூபியன்' (Nubian Desert) பாலைவனத்தைக் கடந்த காலை, வழி தவறிவிட்டதனால் ஒன்றும் அறியாது மயங்கினர்; நாற்புறமும் மலைசூழ்ந்த வழியில் உணவும் நீருமின்றி இரண்டுநாள் வருந்தினர்; ஆறு நாட்களுக்குப் பிறகு ஒட்டகக்கூட்டம் செல்லும் ஒரு வழியைக் கண்டு நைல் நதியை அடைந்தனர்.

ஊக்கமும் உள்வலியும் படைத்த அக்குழுவினர் இவ்வாறு பதினாறுமாதம் பிரயாணஞ்செய்து 1926 ஜனவரி 24-ஆந்தேதியில் கெய்ரோ நகரத்தை அடைந்தனர். அந் நகரமக்கள் அவர்களை நன்கு வரவேற்றுப் பாராட்டிப் புகழ்ந்தனர். பின்னர், அவர்கள் தம் தாய்நாடாகிய இங்கிலாந்திற்குச் சென்று தாங்கள் கண்ட பொருள்களையும் பட்ட துன்பங்களையும் கூறி, கொடிய விலங்குகளின் படங்களைக் காட்டி மக்களை மகிழ்வித்தனர். மேஜர் கோர்ட் ட்ரெட்போன்ற வீரரின்மரபு வாழ்க!

## வினாக்கள்

1. ட்ரெட் குழுவினர் எங்குச் சிலநாள் பட்டினிகிடந்தனர்? ஏன்?
2. ஜூலியஸ் யார்? அவன் திறமையைத் தெரிவிக்க.
3. ட்ரெட்குழுவினர் காட்டுயானைகளினின்று எவ்வாறு தப்பினர்?
4. குவாய், தங்கனீகா, யுகாந்தா, கெய்ரோ: இவற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

## 17. பத்திரிகைச் செய்தி

### கல்வியின் லக்ஷயம் என்ன ?

சென்னை. ஏப். 25—

மாம்பலம் ஸ்ரீ சாரதா உயர்தர எலிமெண்டரிப் பாடசாலையின் வருஷாந்ததினமும் பெற்றோர்தினமும் 24-4-'49 மாலை 'மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாசன் தலைமையில் கொண்டாடப்பட்டன.

ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் தமது பிரசங்கத்தில் கூறியதாவது :—

இந்நாட்டில் அன்னியர் ஆட்சி மறைந்துவிட்டது; சுய ஆட்சி பரிமளித்து வருகிறது. சுய ஆட்சியில் நாம் சுகஜீவனம் காணவேண்டும். அதற்கு மார்க்கம் என்ன ? அது உங்கள் கையில் இருக்கிறது. எதிர்-காலத்தை உருவாக்கவேண்டிய சிறுவர்களாகிய நீங்-கள் எவ்வளவுதூரம் எச்சரிக்கையுடன் நடந்து-கொள்கிறீர்களோ அவ்வளவுக்கு உங்களுக்கு லாபம், நாட்டுக்கு நன்மை, உலகுக்குச் சமாதானம். நீங்கள் பக்குவம் பெறவேண்டும் ; பள்ளிப்படிப்பு எதற்காக என்பதை அறியவேண்டும். பரீட்சையில் தேர்வ-தென்பதுமட்டுங் கல்வி அன்று ; பரீட்சை படிப்பின் லட்சணலட்சியம் அல்ல. நம் பழைய பண்பை உணர்ந்து, அதற்கு உகந்தவாறு நல்ல பிரஜைகளாகி நாட்டுக்குப் பணியாற்றுவதே படிப்பின் லட்சிய-மாகும். படித்து, பகுத்தறிவு பெற்று அதை விசால-

மாக்கவேண்டும். படிப்பினால்மட்டும் காலக்ஷேபம் செய்ய முடியாது. வாழ்க்கையில் அநுபவங்களைச் சுலபமாகச் சமாளித்து, சிறப்பாக மீளுதற்குப் படிப்பு உதவவேண்டும்.

காலக்கிரமத்தில், வயதுவந்தவர்களுக்கு வாக்குரிமை கிடைக்கப்போகிறது. சட்டசபைகளுக்குத் தக்க பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கவேண்டும். அதற்கு வாக்காளர்கள் விழிப்புற்றவர்களாய் இருக்கவேண்டும். எந்த அளவுக்கு விழிப்புள்ளவர்களாகிறீர்களோ அந்த அளவுக்கு நாட்டின் க்ஷேமலாபத்தைக் கண்காணிக்க முடியும். வாழ்வின் லட்சியத்தை உணர்ந்து, உடல்நலத்தையும் கவனித்து, திடகாத்திரர்களாய், தேசப்பணி செய்ய முன்வாருங்கள். தன்நலன்மட்டுங் கருதாது பிறருக்கென எவன் வாழ்கிறானோ அவன்தான் சுகவாழ்வைக் காண்பவன் என்று நம்நாட்டு வேதாந்திகளும் மஹான்களும் கூறியுள்ளனர். இத் தர்மத்தைக் கடைப்பிடித்து நீங்கள் நடந்துகொள்வீர்களாக.

பின்னர், கவர்னர்ஜெனரல் ராஜாஜியின் திருவுருவப்படத்தைத் தலைவர் திறந்துவைத்து, அப் பெரியாரின் வாழ்க்கையைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துக்கூறி, அவருடைய சரித்திரத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு அவர் காட்டிய வழியைப் பின்பற்றுமாறு மாணவர்களுக்கு உபதேசஞ் செய்து முடித்தார்.

### வினாக்கள்

1. படிப்பின் லக்ஷ்யம் யாது ?
2. எவர் சுகவாழ்வைக் காண்பார் ?

## 18. சக்கிரவர்த்தி இராஜகோபாலாசாரியர்

உலகத்தில் அறிவு செல்வம் பதவி முதலியவற்றில் உயர்ந்தவரை மக்கள் போற்றினும், பிறர்நலன் கருதி உழைப்பவரையே எல்லாரினும் உயர்ந்தோராகக் கருதுவர். அவ்வாறு, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதைத் தம் குறிக்கோளாகக் கொண்டு, தமக்கென வாழாது, பிறர்க்குத் தொண்டாற்றும் பெரியாருள் சக்கிரவர்த்தி இராஜகோபாலாசாரியர் ஒருவர்.

சக்கிரவர்த்தி இராஜகோபாலாசாரியர் சேலம் ஜில்லாவில் ஹொசூர் என்னுங் கிராமத்தில் 1878-ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் ஒன்பதாந்தேதி சக்கிரவர்த்தி ஐயங்கார், சிங்காரம் அம்மையார் என்பவர்களுக்கு மூன்றும் மைந்தராய்த் தோன்றினர். அவர் தந்தையார் தாமே முதன்முதல் அவருக்குக் கல்வியைக் கற்பித்து ஐந்தாம் வகுப்பில் பாடசாலையில் சேர்த்தார். அவர் எல்லாப்பாடங்களையும் நன்கு கற்று வகுப்பில் தலைமாணுக்கராய்த் திகழ்ந்தார். எப்பொழுதும் புத்தகங்களைப் படித்துக்கொண்டேயிருப்பார்; தம் தந்தையார் தமக்குக் கொடுக்கும் பணத்தை வீண்செலவு செய்யாமல் நல்ல புத்தகங்களை வாங்குவார். கல்வியிற்போலவே விளையாட்டிலும் அவருக்கு மிக்க விருப்பம் உண்டு. அதனுல், அவர் சிலம்பவித்தையிலும் பயிற்சிபெற்ருர்.

பின்னர் ஆசாரியர் பெங்களூரில் உள்ள 'ஸென்ட்ரல் ஹிந்து கலாசாலை'யிலும், சென்னை 'பிரஸிடென்ஸி காலெஜ்'ஜிலும் சேர்ந்து கற்று, தம் பதினெட்டாம் வயதில் பீ. ஏ. பரீட்சையில் தேர்ச்சிபெற்று, சட்டக் கல்வியும் பயின்றார் ; சட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றபின், சேலம்நகரில் வழக்கறிஞர்தொழிலைத்-தொடங்கினர்.

ஆசாரியர் முதல்வழக்கிலேயே வெற்றிபெற்-றார். அவருடைய சட்டஅறிவின் நுட்பத்தையும், சொல்வன்மையையும் அறிந்து அவர்பகைவரும் அவரைப் பாராட்டிப் புகழ்ந்தனர். நெடுங்கால அனுபவமும் உலகியல் அறிவும் புகழும் பெற்ற வழக்-கறிஞரும் அவரோடு வாதாடித் தோல்வியுறுவர். அதனால், அவருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வருவாய் வந்ததில் வியப்பு ஒன்றுமில்லை யன்றோ ? 1900 முதல் 1918 வரை சேலத்தில் தம் தொழிலைச் சிறப்புடன் நடத்தி, பின்னர்ச் சென்னை-உயர்தர நீதிமன்றத்தில் அத் தொழிலை நடத்தினர்.

1894-இல் இராஜகோபாலாசாரியருக்கு அலர்-மேலமங்கை என்னும் அரிவையை மணம் புரிவித்த-தனர். இருவரும் இல்லறத்தைத் திறம்பட நடத்தி-வந்தனர். அவர்களுக்கு ஆண்மக்கள் மூவரும் பெண்-மக்கள் இருவரும் பிறந்தனர். ஏறக்குறைய, பதினைந்து ஆண்டுகள் மனையறத்தை மாண்புடன் நடத்திய அவ்வம்மையார் நோய்வாய்ப்பட்டு உயிர் துறந்தார். ஆருயிர் இல்லாளை இழந்த ஆசாரியர் துயர்க்கடலில்



மூழ்கினாராயினும், பின்னர் ஒருவாறு தேறி, தாயை இழந்த மக்களுக்குத் தாயுமாகி அவர்களை அன்புடன் வளர்த்துவந்தார். அவர் மறுமணம் செய்துகொள்ளவில்லை.

ஆசாரியர் இளமையிலேயே ஆராய்ச்சித்திறமையும் சீர்திருத்தக்கருத்துக்களும் உடையவர். அவர் ஹிந்துசமூகத்தில் காணப்பட்ட சில மூடப்பழக்கவழக்கங்களை வெறுத்தார்; ஜாதிசமய வேற்றுமைகளை ஒழிக்க உறுதிகொண்டார். அவர் தம் மனத்திற்பட்ட உண்மையை ஒளிக்காமல் யாவருக்கும் உரைப்பார்; அன்றியும், சொல்லியவாறே செயலில் செய்து காட்டுவார்.

அவர் நம் இந்துசமயத்தில் இருக்குந் தீண்டாமை என்னும் பழக்கத்தை ஒழித்தாலன்றி நாடு நலமுறாது என்று கருதி, அப் பணியில் ஈடுபட்டார்; தாழ்த்தப்பட்டோர்க்கும் ஏழைஎளியோர்க்கும் அறிவில்குறைந்தோர்க்கும் செய்யுந் தொண்டே ஆண்டவனுக்குச் செய்யுந் தொண்டு என்பதை நன்கு உணர்ந்தார்; சேலம் நகரசபைத்தலைவராய் இருந்தகாலை, சேலம் கலாசாலையில் ஹரிஜனச் சிறுவரைச் சேர்த்தார்; சேலம் கலாசாலையைச் சேர்ந்த உணவுவிடுதியில் அவ்வினத்து மக்கள் இருவரை வேலையாட்களாக நியமித்தார்.

இவற்றை யெல்லாம் கண்ட அந் நகர உயர்வகுப்பினர் அவரைத் தூற்றினர்; ஜாதியினின்று விலக்கினர். ஆசாரியர் அவற்றிற்குச் சிறிதும் அஞ்-

சாது, தாம் நல்லது என்று கண்டதைச் சாதித்து வெற்றிபெற்றார். சேலம் நகரசபையில் அவர் ஆற்றிய அரும்பெருந்தொண்டைக் கண்ட பலரும் அவருடைய நுண்ணறிவையும் தம்நலங் கருதாத் தகைமையையும் நிர்வாகத்திறமையும் பாராட்டினர்.

மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் இந்தியரின் உரிமைக்காக நடத்திய சத்தியாக்கிரகப் போர் ஆசாரியரின் மனத்தைக் கவர்ந்தது. 1919-இல் நம் நாடுமுழுதும் பிரயாணம்செய்த மஹாத்மாவை ஆசாரியர் சென்னைக்கு வரவழைத்து, அவர்கருத்துக்களை நேரில் அளவளாவி அறிந்தார்.

பின்னர், 1920-இல் ஒத்துழையாவியக்கம் தொடங்கிற்று. நம் தலைவர் தாம் பெரும்பொருள் ஈட்டிவந்த வக்கீல்தொழிலைத் துறந்தார்; தம் மைந்தரின் கல்லூரிப்படிப்பை நிறுத்தினார்; தமிழ்நாடெங்கும் பிரயாணஞ்செய்து, சட்டசபை, கல்விச்சாலை, நீதிமன்றம் முதலியவற்றில் சேராமை, கதருடுத்தல், மதுவிலக்கு, இந்துமுஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமையொழிப்பு என்னுந் திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூறினார். அவர் வேலூரில் அரசியலாரின் தடையுத்தரவை மீறிக் கூட்டத்தில் பேசியதற்காக மூன்றுமாதம் காவல்தண்டனை விதிக்கப்பட்டார்; நாட்டின் விடுதலைக்காகச் சிறைபுகுவதைத் தம் பெரும்பேறாகக் கருதினார்.

1922 மார்ச்சு மாதம் மகாத்மா காந்தி இராஜத்துவேஷக்குற்றஞ்சாற்றப்பட்டு ஆறு வருஷத் தண்-

டனை விதிக்கப்பட்டபோது அவருடைய கொள்கைகளை நாடு முழுதும் பரப்பிவந்ததுமன்றி, அவர் வெளியிட்டு-வந்த 'யங் இந்தியா' என்னும் ஆங்கிலப் பத்திரி-கையை ஆசாரியர் சிறப்புடன் நடத்திவந்தார். அவர் அதில் வெளியிட்டுள்ள கட்டுரைகள் சொற்செறிவும் பொருளாழமும் உடையனவாய், விடுதலைவேட்-கையை மக்கள்மனத்தில் வளர்த்தன.

1924-இல் நம் தலைவர் சேலம் ஜில்லாவிலுள்ள 'புதுப்பாளையம்' என்னும் ஊரில் 'காந்தி யாசிரமம்' என்னும் நிலையத்தை நிறுவி, கதர் உற்பத்தி, கள்-ளுண்ணாமை, தீண்டாமையொழிப்பு என்னும் வேலை-களில் ஈடுபட்டார்; கட்குடித்தலின் கொடுமையைக் கட்டுரைகள், சிறுகதைகள் இவற்றின் வாயிலாக விளக்கினார்.

1930-இல் மகாத்மா சட்டமறுப்புப்போரை மீண்-டுந் தொடக்க உப்புச்சத்தியாக்கிரகம் செய்தபோது, ஆசாரியர் ஏப்ரல் 13-ஆந் தேதி நூறு தொண்டரடங்-கிய படையுடன் திருச்சிராப்பள்ளியிலிருந்து திரு-மறைக் காட்டிற்கு நடந்துசென்று 30-ஆந் தேதி வேதாரணியக் கடற்கரையிற் உப்பை அள்ளிய குற்றத்திற்காக ஒன்பது மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். 1934-இல் சட்டசபைத் தேர்த-லில் கலந்துகொள்ளவேண்டும் என்று காங்கிரஸ் தீர்மானித்தபொழுது, நம் தலைவர் தமிழ்நாடுமுழுதும் பிரயாணஞ் செய்து, தேர்தலில் காங்கிரஸ் பெரு-

வெற்றி பெறச் செய்தார். அவர் சென்னைக் காங்கிரஸ்-சபைக்குத் தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டு, சென்னை மாகாண முதன்மந்திரியாய் இருந்து மதுவிலக்கு, உழ-வர்கடன்நிவாரணம், ஆலயப்பிரவேசப் பாதுகாப்பு, சுகாதாரம் இவற்றிற்குச் சட்டங்களை வகுத்தார்; விற்பனைவரியை விதித்து, நம் மாகாணவருவாயைப் பெருக்கினார்.

*1939*-இல் இரண்டாம் உலகப் போர் தொடங்-கிற்று. காங்கிரஸின் ஆணைப்படி நம் தலைவர் தம் பதவியைத் துறந்தார். போர்முயற்சியில் இந்தியர் ஈடுபடலாகாது என்று கூறியதனால் அவர்மேல் இராஜத்துரோகவழக்கு தொடரப்பட்டது. நீதி மன்-றத்தில் தாம் குற்றவாளியே என்று அவர் ஒப்புக்-கொள்ள, அதனால் நீதிபதி அவருக்கு ஓராண்டுச்-சிறைத்தண்டனை விதித்து, "நான் என் கடமையைச் செய்வதைத்தவிர வேறு என்ன சொல்வது! இன்று இருக்கும் அரசியல்நெருக்கடி நீங்கி, தாங்கள் மிக. விரைவில் விடுதலை பெற்று, மீண்டும் முதன்மந்திரிப்-பதவியை ஏற்று நாட்டுக்குத் தொண்டு செய்யின், நான் மிக மகிழ்வேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டார்.

போர் முடிந்தபின், மந்திரிப்பதவியை ஏற்று இந்திய அரசாங்கத்தை நடத்துமாறு நாட்டுத் தலை-வர்களை ஆங்கிலேயர் வேண்டிக்கொள்ள, ஜவஹர்-லால் நெஹ்ருவின் தலைமையில் மந்திரிசபை அமைக்-கப்பட்டது. மஹாத்மா காந்தி முதலானவர் நம்

ஆசாரியரின் நுண்ணறிவையும் மாசற்ற ஒழுக்கத்தையும் ஒப்பற்ற பணியையும் உணர்ந்து, அவரை ஓர் அமைச்சராய் இருக்குமாறு வேண்டிக்கொள்ள, அவரும் இயைந்து பணியாற்றினர்.

1947 ஆகஸ்டு 15-ஆம் தேதியில் நம் நாடு விடுதலை பெற்றது. அப்பொழுது இராஜகோபாலசாரியர் வங்காளத்துக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டார். சமயவேற்றுமையால் அமைதி குலைந்துகிடந்த அம் மாகாணத்திற்கு அவர் அஞ்சாது சென்று, அமைதியை உண்டாக்கினர்; எல்லாச் சாதியினரும் பாராட்டி மகிழுமாறு நடுநிலை தவருமல் தொண்டாற்றிவந்தார் பின்னர் 1948-இல் இந்தியாவின் கவர்னர்ஜெனரல் பதவியை ஏற்று நாட்டுக்குத் தொண்டு செய்துவருகின்ருர்.

நம் தமிழ்நாட்டுத்தலைவர் சக்கிரவர்த்தி இராஜகோபாலாசாரியர் இன்று இந்தியாவின் முடிசூடா மன்னராய் விளங்குகின்ருர். அவர் எங்கு எப்பதவியிலிருப்பினும் தமிழ்நாட்டின் உயர்வுக்கும், தமிழ்மக்களின் நன்மைக்கும், தமிழ்மொழியின் ஆக்கத்துக்கும் பணிசெய்யத் தவறுவதில்லை. உலகப்பேரறிஞருள் ஒருவரும், தலையாய அரசியல்ஞானியும், சிறந்த நூலாசிரியரும், ஆளுந்திறமை பெற்றவரும், பிறர்க்கெனவே வாழ்பவரும் ஆகிய சக்கிரவர்த்தி இராஜகோபாலாசாரியர் நெடுநாள் வாழுமாறு ஆண்டவன் அருள்புரிவாணுக.

## வினாக்கள்

1. எது ஆண்டவனுக்குச் செய்யுந் தொண்டு ?
2. நம் ஆசாரியார் சேலம் நகரசபைத் தலைவரா யிருந்த போது செய்தவை யாவை ?
3. ஆசாரியர் காந்தியாசிரமத்தை எங்கு அமைத்தார் ? அங்கு என்ன பணியை நிகழ்த்தினர் ?
4. 'நான் என் கடமையைச் செய்வதைத் தவிர வேறு என்ன சொல்வது !' சந்தர்ப்பம் கூறுக.

---

## 19. வீரத்தாயர்

நந் தமிழ்நாட்டில் பண்டைய வீரத்தாயர், தம் மக்கட்குத் தாம் ஊட்டும் பாலோடு வீரம் முதலிய-வற்றையும் ஊட்டினர். அதனல் மக்கள் பெருவீர-ராய் விளங்கினர்.

பொன்முடியார் என்னும் புலமை மிக்க வீரத் தாயர், "பெற்று வளர்த்தல் என் கடன். சான்றே னுக்குதல் தந்தைகடன். வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லன்கடன். நல்லொழுக்கம் கல்கல் வேந்தன்-கடன். வெல்வதற்கு அரிய போரில் பகைவரை அழித் துக் களிற்றையெறிந்து மீளுதல் என் காளைக்குக் கடன்" என்று, தாய் தந்தை முதலியோர்களின் கடமைகளை விளக்கியுள்ளார்.

வீரத்தாய், தன் சேய் பகைவீரர்தலையைத் துணித்து வாளின் முனை அழுந்தப் பெறுவானேல், அதுவே தனக்குத் தருமமும் தானமும் கருமமும் என்று கொண்டாள்.

வீரப்புதல்வனைப் பெறுவதே தருமம்; அவனைப் போர்க்கு விடுப்பதே தானம்; அவன் வெற்றிபெற்று மீள்வதும் விழுப்புண்பட்டு வீழ்வதும் ஆகியவற்றுள் யாதானு மொன்று கேட்டு மகிழ்கூர்வதே கருமம். இவ்வாறு கொண்ட தாயின் தகைமையன்றோ பெருந்-தகைமை!

எதிர்த்துவந்த படையைப் பொருமல், தன் இளம்புதல்வனுக்கு வேலைக் கொடுத்து, முன்னோரது நடுகல்லைக் காட்டி, 'செல்க போர்க்கு' என்று விடுத்-தாள் மறக்குடிமகள் ஒருத்தி.

போர்ப்பறை முழக்கங் கேட்டுத் தன் குலக்-கொழுந்தைத் தழுவி, வெள்ளையுடை விரித்துடுத்தி, பாறுமயிரில் எண்ணெய் தடவி வாரி முடித்து, 'போர்க்குச் செல்க' என்று ஏவினாள் மற்றொருத்தி.

"நடுகல்லிலே பொருந்தி நின்றான் என் தகப்பன்-போர்க்களத்திலே பட்டான் என் கணவன். பகைவர் முன் நின்று எதிர்த்துப் பூசலிலே விழுந்தனர் என் தமையன்மார். தன் சேனை கெடவும், கெடாமல் பின்னே நின்று பகையரசன்மேலே சென்று முள்ளம்-பன்றிபோலே அம்புபட்டுக் கிடந்தான் என் புதல்-வன்" என்றாள் வீரமகள் ஒருத்தி.

"முன்னொரு போரில் இவள்தகப்பன் யானையை யெறிந்து களத்தில் ஒழிந்தான். நேற்றைச் செருவில் இவள்கணவன் எதிர்த்தோரைக் கொன்று இறந்தான். இவ்வண்ணம் தந்தையுங் கணவனும் மாளப்பெற்றும், தனிமகனாகிய இவனையும் பறையொலி கேட்டுப் போர்க்கோலஞ்செய்து, 'களம் நோக்கிச்செல்' என்று விடுக்கின்றாளே! இவள் துணிவு கடிது, கடிது! இக்கடுஞ்செயலைக் கண்ட எனது உள்ளங் கெடுக" என்று வருந்தினார் மாசாத்தியார் என்னும் நல்லிசைப்புலவர்.

கொக்கிறகுபோல் நரைத்த கூந்தலையுடைய முதியவள் ஒருத்தி, தன் மகன் போரில்யானையை யெறிந்து கொன்று, தானும் இறந்தான் என்று கூறக் கேட்டாள். மகன் பிறந்தபொழுதினும் போரில் இறந்தபொழுது அவள் அடைந்த மகிழ்ச்சி பெரிது, பெரிது!

முதுமையிற் பெற்ற தனிமகனைப் போர்க்கனுப்பிப் பிரிந்த தாய், அவன் இறப்பிற்கு வருந்தாமல், அவன் பெரிய களிற்றைக் கொன்ற வீரச்செயலைக் குறித்த சிறப்பிற்கு மிக மகிழ்ந்தாள் எனில், அவளது உள்ளத்து உரன் சொல்லத் தரமோ?

முதியவள் ஒருத்தி, "உன்மகன் போரிற் படைக்குத் தோற்றுப் புறங்காட்டினான்" என்று பலர் கூறக் கேட்டு, "என் மகன் போரில் தோற்று மீண்டானாயின், என் உடம்பைத் துணித்து இறந்து

படுவேன்" என்று கையி லெடுத்த வாளோடு களத்திற் புகுந்தாள்; ஆவியிழந்து கிடக்கும் பிணங்களைப் புரட்டிப் பார்த்துச் செல்லுங்கால், மார்பிற்



புண்பட்டு இறந்துபட்ட தன் மகனுடம்பு கிடத்தலைக் கண்டு, அவனைப் பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி யுற்றாள்.

இத்தகைய வீரப்பெண்டிரின் ஒப்புயர்வற்ற வீரவுள்ளத்தை உள்ளினால், இக்காலத்துத் தமிழ்த்தாயர் வீரத்தாயராய் விளங்குவர்.

## அருஞ்சொற்பொருள்

மறம்-வீரம். எறிந்து-கொன்று.
சேய்-மகன் காளை-இளம்பருவத்தினன்.
களிறு-ஆண்யானை. செருமுனை-போர்க்களம்.

| | |
|---|---|
| விழுப்புண்-சிறந்தபுண் ; மாரிபிலும் முகத்திலும் படுங் காயம். | பாறுமயிர்-பறட்டைமயிர். |
| நடுகல்-போரில் இறந்த சிறந்த வீரரின் நினைவிற் காக நாட்டுங் கல். | உற்றுழி-உதவிவேண்டு மிடத்து. |
| | பூசல்-போர். |
| | உரன்-வலிமை. |
| | உள்ளினல்-நினைத்தால். |

## வினாக்கள்

1. தந்தை, அரசன், மகன் இவர்களுக்கு உரிய கடமைகள் யாவை ?
2. வீரத்தாய் எவ்வெவற்றைத் தன் தருமமும் தானமும் கருமமுமாகக் கொண்டாள் ?
3. 'இவள் துணிவு கடிது கடிது !'—யார் துணிபு ? கூறுக.
4. ஒரு தாய், தன்மகன் பிறந்தபொழுதினும் மிக்க மகிழ்ச்சியைப் பெற்றது எப்பொழுது ?

## பயிற்சி

1. உணர்ச்சி வாக்கியத்திற்கு இப் பாடத்திலிருந்து இரண்டு உதாரணம் தருக.

2. அவளது உள்ளத்து உரன் சொல்லத்தரமோ ? இதைச் செய்திவாக்கியம் ஆக்குக.

# I. கடவுள்வாழ்த்து

## 1. அப்பர்தேவாரம்

ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கு மெண்டோட் சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே. 1

பண்டனை வென்ற இன்சொல் பாவையோர் பங்க நீல
கண்டனே கார்கொள் கொன்றைக் கடவுளே கமல பாதா
அண்டனே அமரர் கோவே அணியணா மலையு ளானே
தொண்டனேன் உன்னை யல்லால் சொல்லுமா சொல்வி லேனே. 2

## 2. பெருமாள்திருமொழி

மீனோக்கும் நீள்வயல்சூழ் விற்றுவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலும் உன்பற்றலால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரஞ் செய்திடினுந் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே. 3

வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட்டம்மா,நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. 4

## 3. திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே. 5

## 4. இரக்ஷணிய யாத்திரிகம்

கன்னி பாலனாய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு சீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்பரி த்யாகமுஞ் சிலுவையிற் றந்த
என்னு பாசன மூர்த்தியை அஞ்சலித் திடுவாம். 6

# II. நீதிப்பகுதி

## 1. கோவிந்த சதகம்

### தோட்டிபோல் உழைக்கவேண்டும் ; துரைபோற் சுகிக்கவேண்டும்.

தோட்டியைப் போலுழைப் பார்பொருள் தேடிச் சுகிப்பதல்லாற்
பூட்டி யறைக்குட் புதைத்துவைத் தாற்புசி யாரெவர்க்கோ
ஈட்டிடத் தேன்பல பூவினிற் சென்றுசென் றீயெடுத்துக்
கூட்டி யிழப்பது வாமச்சு தாநந்த கோவிந்தனே. 1

### கொடுத்தாற் குறை வாராது

எடுத்தாலும் ஊறும் இறைத்தாலும் ஊறும் இடைநடுவே
மடுத்தால் மறிபடு மோமணற் கேணித்தண் ணீரதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கச் செல்வமுண் டானவ ரன்புடனே
கொடுத்தாற் குறைவரு மோவச்சு தாநந்த கோவிந்தனே. 2

### பொல்லாக்குணத்துக்கு நல்ல மருந் துண்டோ ?

உணத்தக்க நன்மருந் தாற்பிணி போமென் றுலகிலுள்ளோர்
பணத்துக்குக் கொண்டு பரிகரிப் பார்விடம் பாய்ந்துசெத்த
பிணத்துக்கும் பச்சிலை யுண்டுபுல் லோர்க்குப் பிறக்கும் பொல்லாக்
குணத்துக்கு நன்மருந் தேதச்சுதாநந்த கோவிந்தனே. 3

### நாய்வாலைக் குணக்கெடுக்க யாரா லாகும்?

இணக்கா திரார்வல் லிரும்பொடிந் தால்வைத் திருதலையும்
வணக்கா திரார்வில் நிமிர்ந்ததென் றூல்புல்லர் மாறுபடும்
பிணக்கர் தடுப்பவர் நாய்வாலை நீளப் பிடித்திழுத்துக்
குணக்கா ரெடுக்கவல் லாரச்சு தாநந்த கோவிந்தனே. 4

### கோவுக் கழகு செங்கோல்

பாவுக் கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக் கழகு மயிலுங் குயிலுங்கண் டாய்கமலப்
பூவுக் கழகு மணமுந் திருவும் புவிபுரக்கும்
கோவுக் கழகுசெங் கோலச்சு தாநந்த கோவிந்தனே.

—நாராயண பாரதி

## 2. அறநெறிச்சாரம்

பலகற்ரேம் யாம்என்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்ருர் கண்ணும் உளவாம் பலகற்ருர்க்
கச்சாணி அன்னதோர் சொல். 1

பிறர்க்கின்ன செய்தலின் பேதைமை இல்லை
பிறர்க்கின்ன தென்றுபேர் இட்டுத்—தனக்கின்ன
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
பித்தும் உளவோ பிற. 2

காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்கீறித்துப்
பாலொடு நெய்பெய்யுந் தாய்அனையார்—சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிந்து நாளும்
கொடுத்துமேற் கொண்டெழுகு வார். 3

உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுணைக் கால்அது கூராதாம்—தொக்க
உடம்பும் பொருளும் உடையான் ஓர் நன்மை
தொடங்காக்கால் என்ன பயன். 4

பாம்புண்ட பால்எல்லாம் நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீர் அமுதமாம்—ஓம்பற்
கொளியாம் உயர்ந்தார்கண் ஞானம் அதுபோல்
களியாம் கடையாயார் மாட்டு. 5

ஒன்ருக நல்ல துயிரோம்பல் ஆங்கதன்பின்
நன்ருய்ந் தடங்கிஞர் கீத்துண்டல்—என்றிரண்டும்
குன்ருப் புகழோன் வருகென்று மேலுலகம்
நின்றது வாயில் திறந்து. 6

—முனைப்பாடியார்

## 3. நீதிநெறி விளக்கம்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். 2

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். 3

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெலாம்
எற்றே இவர்க்குநாம் என்று. 4

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. 5

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
கெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. 6

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. 7

தம்முடை ஆற்றலும் மானமுந் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக—பின்னர்ச்
சிறுவரை ஆயினும் மன்ற தமக்காங்
கிறுவரை இல்லை எனின். 8

இகழின் இகழ்ந்தாங் கிறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப—இகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென் செய்யும்
நீர்வழிப் பட்ட புணை. 9

காலம் அறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை ஆளப் படும். 10

இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும் [டிப்பச்
வெங்கா ரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொ
சிங்கி குளிர்ந்துங் கொலும். 11

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். 12

—குமரகுருபர சுவாமிகள்

## 4. சிறுபஞ்சமூலம்

ஒருவன் அறிவானும் எல்லாம்யா தொன்றும்
ஒருவன் அறியா தவனும்—ஒருவன்
குணமடையக் குற்றமில் லானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானும் இல். 1

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்குந்
தெய்வதையும் என்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. 2

வார்சான்ற கூந்தல், வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடிஉயரத் தாங்கருஞ்சீர்க் கோலுயரும்
ஓவா துரைக்கும் உலகு. 3

## 5. பழமொழி

உணற்கினிய இன்னீர் பிறிதுழி இல்லென்னுங்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. 1

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால். 2

கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு—நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை ; இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு. 3

## 6. நாலடியார்

பாலொ டளாய நீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்—தேரின்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து. 1

உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாட்
சிறுதேரை பற்றியும் தின்னும்—அறிவினாற்
காற்றொழில் என்று கருதற்க ; கையினான்
மேற்றொழிலும் ஆங்கே மிகும். 2

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின். 3

## 7. திருக்குறள்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 1

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன் ;
ஆகுல நீர பிற. 2

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 3

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு அஃதே துணை. 4

மோப்பக் குழையும் அனிச்சம் ; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 5

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 6

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 7

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 8

யாகாவா ராயினும் நாகாக்க ; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 9

சொல்லுக சொல்லின் பயனுடைய; சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல். 10

தன்னெஞ் சறிவது பொய்யற்க ; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 11

நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற? 12

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 13

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். 14

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 15

கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாந் துணை. 16

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொ
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [ருள்

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 18

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். 19

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 20

ஞாலம் கருதினும் கைக்கூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். 21

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 22

சுற்றத்தால் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 23

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 24

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. 25

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 26

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 27

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 28

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 29

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 30

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 31

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. 32

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. 33

உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 34

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிந்த கேண்மை யவர். 35

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்
தீங்கு குறித்தமை யான். [கம்

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 37

குன்றின் அனையாரும் குன்றுவர்; குன்றுவ
குன்றி அனைய செயின். 38

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 39

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 40

## III. வரலாற்றுப் பகுதி

### கட்டபொம்மு கும்மி

ஆரும் அறியாம லேயிருக்க அத்த
சாமத்தில் பிற்கட்டு காலன் துரை
வீரநகரெனும் பாஞ்சைப் பதிதனை
வெல்லலாம் என்று விரைந்தடைந்தார். 1

மூளை பிடுங்கி உயிர்குடிப்பான் கட்ட
பொம்முமுரசம் முழக்கு வித்தான்;
வேளை விடியட்டும் பீரங்கி குண்டிட்டு
வேரறுப் போமென்று காலன் எண்ணி, 2

நேரும் குதிரை அணியணி யாய்வைத்து
நீளிட்ட செண்டாக் கொடியும் நட்டுக்
காரும் கடல்போல் நிறைந்த பட் டாளங்கள்
கம்மென் றிருந்த விடியு மட்டும். 3

மாமன் கெடிவேட்டூர் நாய்க்க ருடன்வடி
வாளுடை வீரர் சிலர் திரண்டு
சோமன் செகவீர ராமக் கட்டபொம்மைச்
சூழ்ந்து படைநிலை சோர்ந்து சொன்னார். 4

அப்படி அன்னவர் சொன்னவுடன் ஆண்ட
கட்ட பொம்முதுரை திட்ட மதாய்
முப்புரம் எரித்த ஈசுரன் ஈன்ற
முருகன் நமக்குத் துணையுண் டென்றார். 5

கற்பித்த வன்நம்மைக் காப்பானென்றேகதை
சொல்லுவார் நல்லோர் பெரியோர்கள் ;
சுப்ரமண்யத்தெய்வம் உண்டு நமக்குத்
துணைசெய்யும் சக்கம்மா தேவியுமே. 6

ஏகச் சமுத்திரம் என்படை என்சனம்
இல்லையென் றேவந்தான் காலன் துரை ?
சாகத் துணிந்த வனுக்குச் சமுத்திரம்
தன்முழங் காலள வென்றுரைப்பார். 7

நூறுக் கெழுதி முகித்த பிரமன்பின்
ஆறுக் கெழுதுவா னோ அழித்து
போருக்கு வந்தவர் பாருக் கிரையாகப்
பொன்றிட வென்று புகழ்கொள்ளுவேன். 8

தோடாய மாக இருக்கிறேன் என்றல்லோ
தொங்கலில் பிற்கட்டு காலன் வந்தான்
நாடாமல் பட்டாளம் ஓட அடித்துமே
நாட்டில் திசைக்கம்பய் நாட்டுகின்றேன். 9

காலனைக் கொல்கிறேன் பிற்கட்டை வெல்கிறேன்
கண்டதுண் டப்படை பட்டுவிழ
மூலபலச்சண்டை வாய்த்தது போல்சக
தேவிமுன் னிற்க அடித்தொழிப்பேன். 10

# IV. கதைப் பகுதி

## 1. நளவெண்பா

### சுயம்வர காண்டம்

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. 1

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு. 2

தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனல்நனைப்ப வேயடைந்தான்—கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள் வெய்யோற்
புக்கிருந்தா லன்ன பொழில். [கொதுங்கிப்

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்
முன்னப்புட் டோன்றும் முளரித் தலைவைகும் [தான்
அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு. 4

நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. 5

அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 6

வீமன் திருமகளாம் மெல்லியலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து. 7

இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல்—இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா விம்மினான் மும்மதநின்
றாளுங்கொல் யானை அரசு.

மன்னன் விடுத்த வடிவேல் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னாடல் சொல்லென்றாள் ஈங்கு. 9

அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு. 10

வாவி யுறையும் மடவனமே என்னுடைய
ஆவி யுவந்தளித்தா யாதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்று
பார்வேந்தன் பாவை பதைத்து. [ரைத்தாள்

மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. 12

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. 13

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்
ஏவற் றொழிலுக் கிசையென்றான்—ஏவற்கு [கோன்
மன்னவனும் நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென ஓரா திசைந்து. 14

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்—மங்கைபால்
தூதாக வென்றானைத் தோகையைத்தன் ஆகத்தாற்
கோதாக வென்றானைக் கோ. 15

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனோ விஞ்சைக் கிறைவனோ—தேவனோ
உள்ளவா சொல்லென்றாள் ஊசற் குழைமீது
வெள்ளவாள் நீர்சோர விட்டு. 16

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவாய் என்றான் தொடையிற்றேன் தும்பிக்கே
ஊட்டுவான் எல்லா முரைத்து. 17

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களும் நீயும்
எழுந்தருள்க என்றான் எடுத்து. 18

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே [துச்
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 20

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாய்ச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்
றாசலா டுற்றாள் உளம். 21

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா னாகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 22

கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. 23

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 24

## 2. பஞ்சதந்திரம்

### எலி தன் வரலாறு சொல்லிய கதை

உன்னிடம் எது நீயிங் குறைசரித் திரந்தா னேது
நின்னிடம் விட்டு மிங்கே நேர்ந்தகா ரணமே தென்ன
என்னிட நகரஞ் சம்ப காவதி யென்ப தீது
தன்னிலோர் தவசி மேவுந் தனிமட மொன்றுண் டென்றும். 1

பெருவளைக் குள்ளி ருப்பேன் பிஞ்ஞகன் சன்னி யாசி
தெருவெலாம் பிச்சை தேர்ந்து சிறிதுதான் புசித்து மீதி
ஒருசிறு பாத்திரத்துட் பெய்துவே றொன்றான் மூடி
வருபர தேசிக் கென்று வைத்தவ னுறங்கும் போதில், 2

வந்துநா னந்தச் சோற்றில் வயிறுகொண்டதைய ருந்தி
அந்தமா யோகி கையி லகப்படா தொளித்துக் கொள்வேன்
இந்தவா றனேக கால மிருக்குநாள் களிலே யோர்நாள்
புந்திகூர் ஞானி தன்பாற் பொருந்தின னொருசன் யாசி. 3

பொருந்திய வவனுந் தானும் பொருவில்சாத் திரங்கள் பேசி
இருந்தன ரநேக நேரம் யானும்வெம் பசியி னாலே
வருந்தியென் வளையை விட்டு வந்துபாத் திரத்திற் சோற்றை
அருந்திய சத்தங் கேட்டே யதட்டியே துரத்தி விட்டான். 4

எலிக்கிந்தக் குதிப்பைக் கண்டே யென்மனம் வேறா யிற்று
பலிக்குநா னுழன்றெ டுத்த பாத்தெலாந் தின்று கொண்டே
கெலிப்புட னுளதிங் கையா கிட்டினும் பிடிக்கக் கூடா
தெலிக்குளிப் படிநான் கண்ட தில்லையென் றிரங்கிச் சொன்னான்.

வேறொரு வளையில் வைகி வெம்பசி தனக்கு முன்போல்
சோறுநா னருந்தப் போனேன் துரத்திவந் தடித்தா னின்று
காறுமங் கவர்மடத்தைக் கருதவும் பயந்து திங்கள்
ஆறுமோ ராறும் வேறோ ரடவிபுக் கிருந்தேன் யானே. 6

திரவியந் தானே புத்தி திரவியந் தானே வித்தை
திரவியந் தானே சுத்தந் திரவியந் தானே சித்தி
திரவியந் தானே சத்தி திரவியந் தானே முத்தி
திரவியந் தானே யாதுஞ் செய்வதல் லாது முண்டோ. 7

## V. இயற்கை வருணனை

### தாமரை

குளமதனுக் கழகளித்துச் குளிப்பவர்க்கோர் விருந்தளித்துக்
களகளென நிமிர்ந்திலங்கு கண்கவருந் தாமரையே,
பளபளென நிறம்வீசிப் பறிக்கின்றாய் என்மனதை!
ஒளிருமுன்றன் திருவழகை உரைப்பதற்கு முடிகிலதே. 1

என்னென்று புகழ்ந்திடுவேன்! எப்படிநான் சொல்லிடுவேன்
உன்சிறப்பை உரைத்திடவே உறுசொற்கள் போதாவே!
நன்மலருள் தலையாகும் நாயகமே நீ என்பேன்
அன்னதுதான் சொன்னாலும் அஃதுனக்குச் சாலுமதோ! 2

அழகுள்ள பொருளெல்லாம் அழியாத இன்பமென்பர்
தழல்போல நிறம்வீசித் தண்பசுமை இலைநடுவே
குழவிகள்தம் மனபோலக் குளத்தினிலே விரிந்திலகும்
அழகுடைய நினைக்காணும் அந்நாளும் இன்பமன்றோ? 3

செங்கமல மாமலரே, சென்றுன்னைக் 'கொய்' என்றால்
எங்ஙனம் நான் செய்திடுவேன்? எப்படிநான் மனந்துணிவேன்?
அங்ஙனம்யான் செய்திட்டால் ஐயனுக்கோர் தீங்கிழைத்தேன்
மங்கிடுவாய் என்றாலும் மனந்துணியேன், மனந்துணியேன்! 4

—அ. கி. பரந்தாமனார், M.A.

---

## VI. தனிப் பாட்டுக்கள்

பூநக்கி ஆறுகால் புள்ளினத்துக் கொன்பதுகால்
ஆனைக்குக் கால்பதினே மூனதே—மானேகேள்
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததனைக்
கண்டதுண்டு கேட்டதில்லைக் காண். 1

சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி இட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவருஞ் சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை. 2

சத்துவம் புத்தி வித்தை சதுர்விதார்த் தங்க ளான
இத்தனை விதமுஞ் செல்வ மில்லையே வில்லை யாகும்
சத்துவம் புத்தி வித்தை சதுர்விதார்த் தங்க ளான
இத்தனை விதமுஞ் செல்வ மெய்திடி லெய்து மன்றே. 8

சுதியிலார் பாட்டுந் தங்கள் சுற்றமில் லாத நாடும்
மதியிலார் கவியும் நல்ல மனைவியில் லாத வீடும்
பதியிலா ரழகும் பாழே பார்க்கிலிங் கிவைபோ லல்ல
நிதியிலார்க் கெவையும் பாழே நினைக்கின்மூ வுலகி னுள்ளும். 9

கதிரவ னிலையேற் கண்ணிற் காண்பன மறையு மாபோல்
நிதியமொன் றிலையேல் யார்க்கும் நீதிமா ஞானம் போதம்
துதிபெறு கீர்த்தி யாண்மை சூழ்ச்சிமந் திரவி சாரம்
சதுரபி மான மெல்லாம் தன்னிலே மறைந்து போமால். 10

வறுமையா லேயா சிக்க வருமவர் தமக்கு மாவி
இறுமவர் தமக்குஞ் செய்யு மியற்கையொன் றுமே தென்னில்
உறுதிபோங் கைகால் சோரு முள்ளமுங் கலங்கு மெய்யும்
குறுகியே நடுங்கும் வாயுங் குழறுநல் லறிவும் போமே. 11

பொன்னின்மே லிருந்து சோற்றைப் புசித்தனை பொன்னும்
இன்னமு முனக்கு வெட்க மில்லையே என்று சூடா [போச்சே
கன்னன்முன் சொன்ன தென்றன் கருத்துளே வருத்த லாலே
நின்னைவந் தடைந்தே னென்னை நீயினிக் காப்பா யென்ன, 12

இரணியன் றன்னை நோக்கி லகுபத னன்க ணீயும்
திரமுடன் வந்து சேர்ந்த செல்வமுற் பிறப்பி லேயான்
பரவிய தெய்வந் தந்த பாக்கிய மன்றோ வென்று
புரைவற நண்பு கொண்டு பொருந்தியங் கிருந்துகொண்டே, 13

மந்தரன் மீன்கள் கொண்டு வரலகு பதனன் போகி
எந்தடை வேனு நல்ல இறைச்சிகள் கொண்டு செல்லச்
சுந்தர விரணி யன்போய்ச் சோறுகொண் டேக மூன்றும்
சந்ததங் கூடி யுண்டு தருக்கியங் கிருக்கு நாளில். 14

—வீரமார்த்தாண்டதேவர்.

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது. 3

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நீணிலத்தில் வந்ததற்பின்
வாரொன்று பூங்குழலாள் ஆய்ச்சிகையில் வந்தவுடன்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

முன்னமோர் ஊரின் பேராம் முதலெழுத் தில்லாவிட்டால்
நன்னகர் மன்னன் பேராம் நடுவெழுத் தில்லாவிட்டால்
கன்னமா மிருகப் பேராம் கடையெழுத் தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம் ஊரின்பேர் உரைசெய்வீரே. 5

சோலையை ஓரெழுத்தால் என்சொல்லும் தொக்கதன்
நீலப்பேர் எவ்வெழுத்தி னல்நிரம்பும்—மாலைக் [மேல்
கொடைவேந்தன் சென்னி குலநதியின் பேரைக்
கடைநின்ற ஓரெழுத்தால் காண். 6

## 2. முக்கூடற்பள்ளு

### பள்ளியர் ஏசல்

மூத்த பள்ளி :—நாவி என்றாய் பூனை என்றாய்
மருதூரிற்பள்ளி—நாவி
நானேடி பூனை மூளி
நாயும் நீயடி

இளைய பள்ளி :—வீலி யாட்டம் ஆடவேண்டா
முக்கூடற் பள்ளி—பேச்சு
மிஞ்சிப் பேசில் மூப்புப் பாரேன்
அஞ்சிப் பேசடி. 1

மூ. ப.— அஞ்சச் சொன்ன தென்ன என்னை
மருதூரிற் பள்ளி—உனக்
காசைப் பட்ட குடும்பனை நீ
அஞ்சச் சொல்லடி.

இ. ப.— கொஞ்சக் காரிக் கஞ்சு வானே
முக்கூடற் பள்ளி—இன்னும்
குட்டை யிற்போ டுனக்கவன்
கும்பிட் டஞ்சுவான். 2

மூ. ப.— குட்டை தன்னில் போட்ட தற்கோ
மருதூரிற்பள்ளி—அந்தக்
குடும்பனைப் பிணைப்பட்டுக்
கொண்டு மீட்டாய் நீ?

இ. ப.— சட்டை பண்ணு தேகுட் டையை
முக்கூடற்பள்ளி—நீயும்
சார்த்து வாய்க பூற்றுவாயுன்
தந்த்ர மல்லோடி. 3

## 3. குற்றாலக்குறவஞ்சி

### மலைவளம்

முழங்குதிரைப் புனலருவி கழங்கென முத்தாடும்;[டும்;
முற்றமெங்கும்பரந்துபெண்கள்சிற்றிலைக்கொண் டோ
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பொடித்துவெம்புதினை இடிப்போம்;
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும் ;
தேனலர்சம் பகவாசம் வானுலகில் வெடிக்கும் ;
வழங்குகொடை மகராசர் குறும்பலவீ லீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே.

—திரிகூட ராசப்பக் கவிராயர்

## மீனாட்சியம்மை குறம்

### குறவரியல்பு

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந்
தேறலும் வாய் மடுப்போம்
பசுந்தழையு மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையு நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள் குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே.

## 4. திருவரங்கக் கலம்பகம்

### மறம்

பேசவந்த தூத செல்ல ரித்த வோலை செல்லுமோ
பெருவ ரங்க ளருள ரங்கர் பின்னை கேள்வர் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள் பதி புகுந்து பாரடா
வாச லுக்கி டும்படல் கவித்து வந்த கவிகைமா
மகுட கோடி தினைய ளக்க வைத்த காலும் நாழியும்
வீசு சாம ரங்குடில் தொடுத்த கற்றை சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும்வேலுமே

## 5. புறநானூறு

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியும் உண்டீண் டுலகு புரப் பதுவே. 1

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே ;
குன்றும் உண்டு பாடினிர் செலினே.—கபிலர் 2

ஈன்று புறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. 3
—பொன்முடியார்

## 6. பாரதியார்பாட்டு

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்வோம் தலை சாயுதல் செய்வோம் [ம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோ

குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவருங் கப்பல்கள் செய்வோம். 2

காவியஞ் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப் போம் கொல்ல ருலை வளர்ப்போம்
ஓவியஞ் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத தொழிலனைத்து முவந்து செய்வோம். 3

## குறிப்புரை

### 1. கடவுள் வாழ்த்து

1. மழு-எரியிரும்பு. 2. பண்டனை - பண் + தனை 4. மாளாத-ஒழியாத. 5. ஆளா-ஆள் + ஆ-உனக்கு அடிமையாக ஆதற்கு. 6. கன்னி-மரியம்மை. பரித்தியாகம்-விடுதல். உபாஸனா மூர்த்தி-தியானஞ் செய்யப்படுந் தெய்வம்.

### III. 1. கோவிந்த சதகம்

இதனை இயற்றியவர் வெண்மணி நாராயண பாரதி என்னும் புலவர்; இந்நூலின் ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் ஒவ்வொரு பழமொழியை வைத்துப் பாடியுள்ளார். சதகம் என்பது நூறு செய்யுளைக் கொண்டதொரு நூல்.

1. சுகிப்பது-இன்பமடைவது. புசியார்-உண்ணார்.

அச்சுத அனந்த; அச்சுதா நந்த; அச்சுத ஆநந்த எனப் பிரிக்கலாம்.

எடுத்தாலும்-குடத்தால் முகந்தாலும். மடுத்தால்-தடுத்தால். மறிபடுமோ-தடைப்படுமோ. அடுத்தாரை-தம்மைச் சேர்ந்தோரை.

3. பரிகரிப்பார் - நோயைப்போக்குவார். பாய்ந்து-உடம்பின்உள்ளேசென்று. புல்லோர்-அற்பர். மருந்து-போக்கும் வழி.

4. இணக்காது-ஒன்றுசேர்க்காமல். தலை- பக்கம். வணக்காது-வளைக்காமல். பிணக்கு-மாறுபாடு. குணக்கு-வளைவு.

5. பா-செய்யுள். கா-சோலை. மணம்-வாசனை. திரு-இலக்குமி, ஒளி. புவி புரக்கும்-பூமியை ஆளும். கோ-அரசன்.

### 2. அறநெறிச் சாரம்

இது, தரும மார்க்கத்தில் சாரமானதை எடுத்துக் கூறும் நூல் எனப் பொருள்படும். இதனை இயற்றியவர் முனைப்பாடியார் என்னும் புலவர். இவர் காலம் 500 யாண்டுகட்கு முற்பட்டதாகும்.

1. பல - பல நூல்களை. தற்புகழ - தன்னைப்புகழ்ந்து கொள்ள. அலர் கதிர் - பரந்த கிரணம். ஞாயிறு-சூரியன். கற்றார் கண்ணும் - கற்றவரிடத்தும். அச்சாணி - கடையாணி.

2. இன்னா - தீங்குகள். பேதைமை - அறியாமை வித்தி - விதைத்து. வினை விளைப்ப - தீவினையை உண்டாக்கிக்கொள்ள. காண்டலின் - பார்ப்பதனால். பித்தும் - அறியாமையும்.

3. வாய் நெரித்து - வாயை அமுக்கித் திறக்கும்படி செய்து. நெய் - மருந்து எண்ணெய். வலிந்து-வற்புறுத்தி.

பிறர் விரும்பாதிருக்கும்போதும் அவருக்குத் தருமத்தை வலிந்து உரைப்பவர், குழந்தைகள் விரும்பாதிருக்கவும் அவர்களுக்கு மருந்து புகட்டுந் தாய்மாருக்குச் சமமாவர்.

4. குவட்டின்மிசை-குவியலின் மேல். இட்டு-உணவில் சேர்த்து. உணுக்கால்-உண்ணுவிடத்து. கூராது-மிகாது.

5. தேம்படு - இனிமை பொருந்திய. ஓம்பற்கு - பேணுதற்கு. ஒளி ஆம்-மேன்மையைத் தருவதாம். களியாம்-செருக்கை உண்டுபண்ணுவதாம்.

6. ஒன்றாக - தலைமையாக. ஆய்ந்து அடங்கினார்-நூல்களை ஆராய்ந்து கற்றறிந்து அவற்றின்படி ஒழுகுபவர் ஈத்து-அளித்து. குன்றா-குறையாத. புகழோன்-புகழுடையவன். மேல்உலகம்-சொர்க்கம்.

## 3. நீதிநெறி விளக்கம்

இது நீதிமார்க்கத்துக்கு விளக்குப் போன்றதொரு நீதி நூல். இதனை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள். இவர் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்; திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர்.

1. அறமும் பொருளும் என்று உம்மை கூட்டிக் கொள்க. வீடு-மோட்சம். புறங்கடை-வெளிப் பிரதேசத்தில். இசை-புகழ். உறுங்கவல்-வரக்கூடிய கவலை.

மிக்க கவலை. உற்றுழியும்-வந்த இடத்திலும். சிற்றுயிர்க்கு-அற்ப வாழ்நாளையுடைய மக்களுக்கு.

2. நலன்-அழகு. கலன்-ஆபரணம். முற்ற முழு மணி-முழுதும் சிறந்த இரத்தினம் வைத்து இழைக்கப் பெற்ற.

3. களியற்க-கருத்துக் கொள்ளற்க. கல்-மலை. கனங்குழாய்-கனத்த காதணியை உடைய பெண்ணே. கொல்-கொல்லனுடைய. உலைக்கூடத்தினால்-உலைக்களத்தில் உள்ள சம்மட்டியால்.

4. மெலியாரை - வறிஞரை. உடைமை - செல்வம். அகம்-மனம். கருத்து அழிக-மனம் வருந்துக. எற்றே-எத்தன்மைத்து ; எவ்வளவினது.

5. கொழுநன் - கணவன். மன்ற-நிச்சயமாக. அறவோர்க்கு-துறவறத்தில் உள்ளவர்க்கு. அடிகள்-குரு. இலை முகம் பசும் பூண் - இலைத்தொழில் அமைந்த முகப்பினையுடைய பசும்பொன்னால் ஆகிய ஆபரணம். இறை - அரசன்.

6. நட்பு-நட்புஉள்ளவர்களை. பகை நட்டல் - பகைவரோடு நட்புக்கொள்ளுதல். ஒற்று-ஒற்றரை ; வேவுகாரரை. பக்கத்தார்-அமாத்தியர்; மந்திரிகள். நெடு மொழி-இடித்துரைக்கும் அறிவுரை. கோறல் - கொல்லுதல் ; கேளாது விடுதல். பிறிது-மாறுபடுவது. கெடுவது- (அரசன்) அழிவதை. குறி-அடையாளம்.

7. கவளம் - வாயளவு கொண்ட உணவு. வாய்தப்பின்-வாயினின்று தவறிக் கீழே விழுமாயின். தூங்கும்-அசையும் இயல்புடைய. களிறு-ஆண்யானைகள். உய்யும்-உயிர்வாழும். ஆரும்-நிறைந்த. கிளை-சுற்றம். அயின்று-உண்டு.

8. சிறுவரை - சிறிது காலஅளவு. இறும்வரை-சாகுங்காலம்.

9. ஆங்கு-அவ்வாறே. இகல்-மாறுபாடு, பகைமை. சீர்வழி - இயற்கைக் குணத்தின் வழி. மன்பதை-குடிமக்கள். புணை-தெப்பம்.

10. மூலம்-காரணம். விளைவு-முடிவு, பயன். சூழ்வன-ஆலோசிக்க வேண்டியவற்றை. ஆள்வினை-முயற்சி.

11. வெங்காரம்-கார்ச்சீலை. பொடிப்ப-மயிர் சிலிர்ப்ப. சிங்கி-விஷம்.

12. கண் துஞ்சார்-உறங்கார். செவ்வி-காலம். எவ்வெவர் தீமையும்-(மேற்கொண்ட காரியத்துக்கு) யார் யார் செய்யுந் தீமைகளையும். மேற்கொள்ளார்-மனத்தில் கொள்ளார்.

## 4. சிறு பஞ்சமூலம்

1. ஒருவன் அறிவானும் எல்லாம் - எல்லாம் அறிவான் ஒருவனும் குணமடைய-நற்குணங்களெல்லாம் சேர. கணன்-நூற்றொகுதி.

2. வருவாய்-வரும்படி. வழக்கு அறிந்து - செலவு செய்யும் முறை தெரிந்து. வெருவாமை - அஞ்சாதபடி. வீழ்ந்து-விழைந்து. திரு-செல்வம். தெய்வதை-தெய்வம்.

3. வார்சான்ற-நீட்சி மிக்க. கூந்தல்-கூந்தலை உடையவளே. நீர்சான்று-நீர்நிறைந்து. தாவா-கெடாத. ஓவாது-ஒழியாது.

## 5. பழமொழி

1. இன்னீர்-இனிய நீர். பிறிது உழி - வேறு இடத்தில். கணக்கு-நூல்களை.

2. புலம்-அறிவு பாம்பின் - பாம்பினுடைய. பாம்பறியும் பாம்பின் கால் என்பது பழமொழி.

3. இழுக்கம்-ஒழுக்கக் கேடு.

## 6. நாலடியார்

1. அளாய-கலந்த. சார்ந்து-சார்ந்ததனால்.

2. கால் தொழில்-இழிவான தொழில். கையினால்-செயல் திறமையினால். கடமா-மான். இடம்-இடப்பக்கம். இறக்கும்-கடந்து செல்லும். அழுங்க-கெட.

## III. கட்டபொம்மு கும்மி

1. பிற்கட்டு-Birkett. காலன்-Collins. பாஞ்சை - பாஞ்சாலங்குறிச்சி. 3. இருந்த - இருந்தன. 9. தோடாயம்-தொகுதியான கூட்டம். தொங்கல்-அசைவு, கடைசி.

## IV. 1. நளவெண்பா

இந்நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டைநாட்டிலுள்ள பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவர் வைணவர்; வேளாள மரபினர். இவர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பர்.

இப்புலவர் வெண்பாப் பாடுவதில் தலைசிறந்தவர். இவர் இரத்தினச் சுருக்கம் இயற்றியுள்ளார். அல்லியரசாணி மாலை, புலந்திரன் களவு மாலை முதலியனவும் இவர் பாடியவை என்பாரும் உளர்.

தம்மை ஆதரித்த மள்ளுவநாட்டு வேந்தன் சந்திரன் சுவர்க்கி வேண்டிக்கொண்டவாறு இவர் இந்நூலை இயற்றினார். இவர்காலத்தில் ஒட்டக்கூத்தர் வாழ்ந்திருந்தார்.

1. காமர்-அழகு. காவி-நீலமலர். முகை-அரும்பு. தளை-முறுக்கு. பூமடந்தைதன் - பூமிதேவியின். நாட்டம்-கண். தகைமைத்து - தன்மையை உடையது. சாகரம்-கடல். நன்னாட்டில்-பூமியில். முன்நாட்டும் நாடு-முதன்மையாக நிலைநிறுத்தப்பெறும் நாடு; நிடதநாடு.

2. சீதம்-குளிர்ச்சி. மதிக்குடை-சந்திரவட்டக்குடை. செம்மை-நன்றாக. தாது - மகரந்தப் பொடி. பூந்தாரான்-நளன். தனிக்காத்தல் - உலகம் பொதுஆதலை நீக்கித் தனக்கே உரியதாக்கிக் காத்தல். அருகு-சமீபத்தில் வைத்துக்கொண்டு. பைங்கிளி-பசுங்கிளி. ஆடல்-வெற்றி. பூந்தாரான் உலகினைத் தனிக்காத்தான் என்று கூட்டுக.

3. துகள் - பொடி. வேரிப்புனல் - தேனாகிய நீர். ஆலித்து - ஒலித்து. உழலும் - சுழலப் பெற்ற. தூங்கு இருள் - மிக்க இருட்டு. வெய்யோற்கு - சூரியனுக்கு.

பொழில்-சோலையை. உழலும் பொழில், அன்னபொழில் எனக் கூட்டுக.

4. நீள் நிறத்தால்-தன் உடலின் மிக்க வெண்ணிறத்தால். நிறம் பெயர-கருமைநிறம் நீங்கி வெண்மை யடைய. பொய்கைத்தலம்-பொய்கையாகிய இடம். மாண் நிறத்தான்முன்-மாட்சிமை பொருந்திய ஒளி யுடைய (அல்லது மார்பினையுடைய) நளனுக்கு எதிரே. அப்பு உள்-நீரில். முளரித்தலை-தாமரையின் மேல். அன்னப் புள்-அன்னப் பறவை.

5. மட அன்னம்-இள அன்னம். குழாம்-கூட்டம். வல்லியர்கள்-பூங்கொடி போன்ற மாதர். கோ-அரசன். கூந்தலின் பசுமை, வளப்பமும் கருமையும் ஆகும்.

6. அஞ்சல்-அஞ்சாதே (எதிர்மறை வியங்கோள்). வஞ்சி-வஞ்சிக்கொடி. விஞ்சியது-(ஆகியவற்றுள்) மிக்கது. காண-(இன்னது என்று) அறிய. களி-தேன்உண்டு களிக்கும். மாணப்பிடித்த-மிகுதியாக மொய்த்த. மன்-அரசன்.

7. மெல்லியலை-மென்மைத்தன்மையுள்ள தமயந்தியை. வாமம்-அழகு. வைகுவிப்பேன்-சேரச்செய்வேன் (பிறவினை).சேமம்-க்ஷேமம், காவல். ஒடுங்கு-ஒடுங்கிய. உயர்ந்து-மேற்பறந்து. அன்னம் உரைத்து உயர்ந்து நீங்கியது என்க.

8. இவ் அளவில்-இக்கால எல்லையில், இந்நேரம். காதல்-(யான் தமயந்தியிடம் கொண்ட) ஆசையை. மீளுங்கொல்-திரும்புமோ? உரையா-உரைத்து (உடன்பாட்டு வினையெச்சம்). விம்மினன்-விரக வேதனையால் தேம்பிக் கொண்டிருந்தான்.

'கொல்' நான்கும் ஐயப்பொருள் தரும் இடைச் சொற்கள்.

9. வடிவில்-உருவத்தால். நன்னுதல் (நல் × நுதல்) -அழகிய நெற்றியை உடையவள்; தமயந்தி. ஆடல்-விளையாட்டை. ஈங்கு நாடல் என்-நீ இவ்விடத்தை விரும்பி வந்தது எக்காரணம் பற்றி?

10. கிடந்த-தங்கிய. மறம்-வீரம். திறம்-மேன்மை. மால்-திருமாலும். அல்லனேல்-ஒப்பாகான் எனின். அம் கண் மா ஞாலத்து-அழகிய இடம் பெரிதான பூமியில். நெஞ்சம், கண்ணும், தோள்வலியும் உடைய அவனுக்கு (நளனுக்கு) மாலும் அல்லனேல், ஞாலத்து வேந்தர் ஒப்பரோ என்று கூட்டி முடிவு செய்க.

11. வாவி-தடாகம். ஆவி-உயிரை. அளித்தாய்; வினையாலணையும் பெயர். ஆதி-ஆகின்றாய். கா-சோலை. பார்வேந்தன், வீமன். பாவை-பிரதிமை போன்றவள்; தமயந்தி. பாவை, உவமை ஆகுபெயர். பதைத்து-மனம் பதறி.

12. ஏழ் என்று-இன்றைக்கு ஏழாம்நாள் என்று. அறைக-அறையுங்கள். கமுகு-பாக்குமரம். கூந்தல்-மடல். கங்கைக்கொழுந்து-கங்கையின் சிறிய நீர்த்துளிகள். அறைக. வியங்கோள் வினைமுற்று.

13. பூ-அழகிய. அரி-(சிவந்த) ரேகை. கமலவாவி-தாமரைத் தடாகம். பூமகளை பொன்னை-பூமிதேவியையும் இலக்குமியையும் போன்ற, திருமகள் போன்றவளும் பொன்னைப்போல் போற்றத்தக்கவளும் என்றும் கூறலாம். பொரு-போர் செய்ய வல்ல. கோமகள்-மேன்மையுள்ள மகளை.

சோலைகள் உள்ளும் வாவிகள்புறமும் என்க. (வேந்தர் பலரும்) உள்ளும் புறமும் இனிது உறைந்தார்-மனமும் உடலும் இனிதாகத் தங்கினர் என்றும் கூறுவர்; இவ்வாறு இருந்தது அவ்விடங்களின் பொலிவினாலும், தமயந்தியைக் காண்போம் என்ற எண்ணத்தினாலும் என்க.

14. வேந்து, நளன். ஏவற்கு-ஏவினது செய்தற்கு. இசை-சம்மதிப்பாய். நேர்ந்தான்-வாக்களித்தான்.

15. எங்களிலே-எங்களுக்குள் ஒருவனுக்கு. இயல்-நற்குணமுள்ள. ஆக-ஆகுக. அக் கோ,நளன். தோகையை-தமயந்தியை. தோகை, உவமஆகுபெயர். ஆகத்தான்-மனத்தால். கோது ஆக-(தனக்குப்) பயனில் பொருளாகக் (கருதி). வென்றான்-(காதலை) அடக்கினான்.

16. விஞ்சைக்கு இறைவனே - வித்தியாதரனே. உள்ள ஆ(று) - உள்ளபடி. ஊசல் குழைமீது-ஊசலாடுங் காதணிகளின் மீது. வாள்-கண் ; ஆகுபெயர். வெள்ள நீர் சோரவிட்டு-மிகுதியான நீரை ஒழுகவிட்டு.

17. யாது-இஃது என்ன வார்த்தை, ஒவ்வாத வார்த்தை. இகழாது - வெறுத்தொழியாமல். பொன் உலகம். சொர்க்கம். புரவலனை-இந்திரனுக்கு ; வேற்றுமை மயக்கம். தொடை - மாலை. தும்பி - வண்டு. எல்லாம்-உரைக்கவேண்டுவன எல்லாவற்றையும். பிறரை மதியாவிடினும் மிக்க மேன்மையுடைய இந்திரனையாவது மணஞ் செய்து கொள்க என்றான் என்க.

18. போது - (செந்தாமரை) மலர். மாதராள், தமயந்தி. பொன்-அழகிய. ஆதரித்தார்தம்மோடு-விரும்பின மற்றை அரசர்களோடு. தாளம்-முத்துமாலை கட்டிய.

19. பொன்னின் பாவை-பொற்பதுமை போன்ற தமயந்தி. மின்-மின்னல் போன்ற. மன்னர்கண்கள், மண்டபம், அதனுள் புகுந்த தமயந்தி : முறையே செந்தாமரை, தடாகம், அதனுள் புகும் அன்னம் இவற்றுக்கு உவமேயம். அன்னம் தமயந்திக்கு உவமை நடைப்பற்றி.

20. பரிசு - தன்மைய. இயல் அணங்கு-இலக்கணத்தால் தெய்வமகள் போன்றாள் ஒரு தோழி ; சரஸ்வதி என்றும் கூறுவர். கொடி-தமயந்தி (உவமையாகு பெயர்).

21. சேடி-தோழி. ஈரிருவர் - நால்வர். வரைந்த-கூடப்பெற்ற. காணுநின்று-கண்டு. உளம் ஊசலாடுற்றாள்-மனம் ஊசலாடுவதுபோலச் சஞ்சல மடையப் பெற்றாள்.

ஈரிருவர்......சென்று இருந்தார். குழலாள், சேடி காட்டக்கண்டு, மற்று அவரை (அந்நால்வரை)க் காணுநின்று உளம் ஊசலாடுற்றாள் என வினைவு முடிவு செய்க. நால்வர் ; இந்திரன், அக்கினி, இயமன், வருணன்.

22. தார்-ரத்தினமாலை முதலியன. மெய் மரபு-சத்தியமுள்ள குலத்தில். செம்மை-நற்குண நல்லொழுக்கம். கடிமாலை-மணமுள்ள மாலை. சூழ்விதியின் மன்ன

வினை - உயிர்களைச் சூழும். ஊழ்வினைக்குத் தலைவனான கடவுளை; சேர்ந்த விதிவசத்தால் நளமகாராஜனைத் தன் உள்ளத்தில் நிறுத்தி (நினைத்து) எனினும் ஆம்.

23. காசினி-பூமி. தோய்தல்-படிதல். வண்ணம்-அழகு. நன்னுதல், திருமகள்.

24. வெள்கி-வெட்கமுற்று. சுளிக்க-சுருங்கி நிற்க, சினங்கொள்ள. கண்-இடம். ஞாலம்-பூமியிலுள்ளோர். ஞாலம், இடஆகுபெயர். கூர - மிக. வன்மாலை-வலிய மயக்கத்தை. தம்மனத்தே சூட-தம் இதயத்தில்கொள்ள. வயம்-வெற்றி. பொன்மாலை-அழகிய (சுயம் வர) மாலை, பொன்-இலக்குமிக்குச் சமானமான தமயந்தி; பொன், உவம ஆகுபெயர்.

பிற அரசரும் ஒரு மாலை சூடினர் என்று புகழேந்தி சாதுரியமாகக் குறிப்பித்தார்.

## 2. பஞ்சதந்திரம்

1. என்இடம்-என் இருப்பிடம். பிஞ்ஞகன்-சடையுடையவன். 5. இந்த குதிப்பு, உயரமான உறியில்பாயுங் குதிப்பு. பலி-பிச்சை. பாத்து-சோறு. கெலிப்பு-வெற்றி. 6. இன்றுகாறும்-இதுவரையும். 8. சத்துவம்-பலம். சதுர்வித அர்த்தம்-அறம் முதலிய நான்கு பொருள். 9. பதி-கணவன். 10. மந்திர விசாரம்-ஆலோசனை. சதுர்-சாதுர்யம். 12. பொன்னின்மேல் இருந்து-பொன் புதைத்திருந்த இடத்திலிருந்து. 13. இரணியன், எலி. லகுபதனன், காகம். புரைவு-குற்றம். 14. மந்தரன், ஆமை.

## VI. 1. தனிப்பாட்டுகள்

1. பூநக்கி-பூவை நக்கும் பிராணி; வண்டு. வண்டு ஆறு காலை உடையது. 'பூநக்கி யாறுகால்' என்று படித்தால் 'பூனைக்கி (கு) ஆறுகால் என்பதுபோலக் கேட்கும். புள் இனம்-பறவைச்சாதி. ஒன்பது கால் -($9 \times \frac{1}{4} = 2\frac{1}{4}$)

இரண்டேகால். பதினேழுகால்-($17 \times \frac{1}{4} = 4\frac{1}{4}$) நாலேகால், முண்டகம் - தாமரை; இங்குத் தாமரையாகிய முகம். நீலம்-குவளை ; இங்கு நீலப்பூவாகிய கண்.

2. சட்டுவம் - வட்டிக்குஞ் சாதனம். கலம் - உண் கலம். சோணேசர் - சோணகிரி (திருவண்ணாமலை) ஈசர் ; சிவபெருமான். இச் செய்யுள் சிறுத்தொண்ட நாயனார் புராணக் கதையை உட்கொண்டது.

முக்கால்-(ஊன்றுந் தடியோடு) மூன்றுகால். முன் நரையில் - மூன்னால் வரும் நரையில் ; நரை வருங் கிழப்பருவத்தில். அக் காலரை - அந்த எமதூதர்களை. கால் - காற்று ; உயிர். இருமா முன் - இருமுதற்கு முன்னே. மாகாணி-சுடுகாடு. ஒருமாவின் கீழரை - ஒரு மாமரத்தின் கீழ் இருப்பவரை ; ஏகாம்பர நாதரை ; (ஆம்ரம்-மாமரம்).

இப்பாடலில் முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா (1|10), மாகாணி (1/16), ஒருமா (1/20), கீழ் அரை (1/640) என்ற இலக்கங்கள் வந்திருத்தல் அறிந்துமகிழத் தக்கது.

7. கார் - மேகம். ககனம் - ஆகாயம். வார் - நீளம். ஆய்ச்சி - இடைச்சி. இடைச்சி கொடுத்த மோர் வெறுந் தண்ணீரா யிருந்ததென்பது கருத்து.

8. தயை - இரக்கம்.

9. ஊரின் பெயர் **மதுரை** : முதலெழுத்தில்லா விட்டால் — துரை = அரசன். நடுவெழுத்தில்லாவிட்டால்— மரை = மானில் ஒருவகை. கன்னம் - பெருமை. மிருகம் - மான். கடையெழுத்தில்லாவிட்டால்—மது = தேன்.

10. சோலையைக் குறிக்கும் ஓர் எழுத்து—கா. நீலத்தின் பெயரை நிரப்ப அதன்மேல் சேர்ந்த எழுத்து — வி (காவி). சென்னிநதியின் பெயருக்காகக் கடைசியில் சேர்ந்த எழுத்து—ரி (காவிரி). சென்னி, சோழர் குடிப் பெயர்.

## 2. முக்கூடற்பள்ளு

நாவி - கஸ்தூரி மிருகம். வீவி ஆட்டம் - பெருஞ் சத்தமிடுதல். குடும்பன் - பள்ளன். கொஞ்சக்காரி-அற்ப மானவள். குட்டை - தொழுக் கட்டையில் அடித்தல். பிணைப்பட்டு - ஜாமீன் கொடுத்து. சட்டை - மதிப்பு.

## 3. குறவஞ்சி

1. திரை - அலை. கிம்புரி - யானைத்தந்தத்தில் கட்டும் பூண். தேறல் - தெளிந்த தேன்.

## மீனாட்சியம்மை குறம்

விருந்து - விருந்தாளி. கயற்கணி - மீனாட்சியம்மை.

## 4. கலம்பகம்

பேச - பெண்பேச. செல் - கறையான். (படிக்காதத நூல்) எழுதிய ஓலை செல் அரித்த ஓலை என்றார். பின்னை - நப்பின்னைப்பிராட்டி. பாசம் - அன்பு. பட்டம் மன்னர்— கிரீடத்தை உடைய அரசர். பட்டது - அடைந்தது (தோல்வி). படல் - தட்டிக்கதவு. கவிகை - குடை. கால் - மரக்கால்.

## 5. புறநானூறு

1. புரப்பது - காப்பது. 2. உடன்றனிர் - கோபித்துப் பொருதீர். 3. புறந்தருதல் - காத்தல். நடை - ஒழுக்கம். ஒளிறு - விளங்குகின்ற.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
13620
சென்னை-600 008.

RTR
336